www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாத இதழ்


# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 16 மார்ச் 2009 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 120





# அந்நியத் தலையீடு!

அமெரிக்கப் படைகள் வருமா இந்தியப் படைகள் வருமா எது முந்திக் கொள்ளும் என்பது தற்போது அலசப்படும் விடயம். யாரின் நலனுக்காக வரலாம் என்பது அலசப்பட வேண்டிய விடயமல்ல. ஆயினும் அதுவும் அலசப்படுகிறது. பிரிட்டிஷ் அரசாங்கம் அமெரிக்க அரசாங்கம் இந்திய அரசாங்க மட்டங்களில் தற்போது இலங்கையில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகள் பற்றி விவாதிக்கப்படுகின்றன. அறிக்கைகள் விடப்படுகின்றன. அவ்வறிக்கைகளை தமிழ் ஊடகங்கள் தமிழருக்கு சார்பானது போலவும் சிங்கள ஊடகங்கள் சிங்கள மக்களுக்கு சார்பானது போலவும் பிரசாரம் செய்கின்றன. அதே போன்று பேரினவாதிகளும் அவர்களுக்கு ஏற்றவகையில் தமிழ் தேசியவாதிகள் அவர்களுக்கு ஏற்றவகையிலும் வெளிநாடுகளின் தலையீடுகள் பற்றி விபரிக்கின்றனர். ஆனால் மனிதாபிமானத்தின் பெயரால் வரும் எத்தலையீடும் தமிழ்த் தேசிய இனத்திற்கோ அன்றி முழு நாட்டிற்குமோ நன்மை தேடித் தருவதாக அமையமாட்டாது. அதற்குப் பதிலாக தலையீடு செய்பவர்களின் நலன்களே முதன்மையும் முக்கியத்துவமும் அடையும் என்பது முன் உணரப்பட வேண்டியதாகும்.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக முல்லைத்தீவில் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் மக்களை வெளியேற்ற அமெரிக்கா நடவடிக்கைகள் எடுக்கவிருப்பதாகவும் அதுபற்றி இந்தியாவுடன் பேசிவருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இராணுவ நடவடிக்கைகளின் பின்னர் இலங்கை அரசபடைகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட பகுதிகளில் நடமாடும் சிகிச்சை அளிப்பதற்காக இந்தியாவிலிருந்து இராணுவ வைத்தியக் குழு இலங்கை வந்துள்ளது. அவர்கள் புல்மோட்டையில் அவர்களது முதலாவது நடவடிக்கையை தொடங்கியுள்ளனர். இரண்டாவது குழுவினரும் இங்கு வந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இது மனிதாபிமான வைத்திய நடவடிக்கை எனக் கூறப்படுகிறது. இதேவேளை இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதிகளிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கு அமெரிக்கப் படையினர் உதவவுள்ளதாக நீண்டகாலமாக செய்திகள் வெளியாகிவருகின்றன. ஆசிய பசுபிக் பிராந்திய நடவடிக்கைக்கு பொறுப்பான அமெரிக்க அதிகாரிகள் மக்களை மீட்கும் நடவடிக்கைகள் பற்றி பேசிவருகின்றனர். அமெரிக்கப்படைகள் இங்கு

2ம் பக்கம் →













# தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கு பொது இணக்கப்பாடு வேண்டும்

தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை கோர இது தகுந்த நேரமல்ல என்று இ.தொ.காவின் தலைவரும் தோட்ட உட்கட்டமைப்பு பிரதியமைச்சருமான முத்து சிவலிங்கம் குறிப்பிட்டுள்ளார். உலக சந்தையில் தேயிலையின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் சம்பள உயர்வை கேட்க முடியாதெனக் கூறியுள்ளார். தோட்டக் கம்



பெனிகளுக்கு தொழிற்சங்கங்களுக்குமிடையிலான கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள தொழிற்சங்கங்களின் ஒன்றான இ.தொ.கா. வின் தலைவரே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். ம.ம.மு. இன்னும் பெரிதாக ஒன்றும் தெரிவிக்கவில்லை. இவ்விரு சங்கங்களும் அரசாங்கம் சொல்லுவதை கேட்டு நடக்கும் நிலைப்பாட்டை கொண்டிருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. சம்பள உயர்வொன்று வழங்கப்பட்டு மார்ச் 31ம் திகதியுடன் இரண்டு வருடங்களாகின்றன. புதிய சம்பள உயர்வை கேட்பதற்கு இரண்டு வருடங்கள் பூர்த்தியாக வேண்டும் மார்ச் 31 ஆம் திகதியுடன் இரண்டு வருடங்களாவதால் மீண்டும் சம்பள உயர்வைகேட்க முடியும். கேட்க வேண்டும்.

மாதம் ரூபா 500 சம்பள உயர்வை கேட்க வேண்டும் என்று சில தொழிற்சங்கங்களும் நாளாந்த சம்பளத்தை ரூபா 500/= ஆக உயர்த்த வேண்டும் என்று சில தொழிற்சங்கங்களும் அறிக்கை விடத் தொடங்கிவிட்டன. இந்த அறிக்கைகளினால் சில தொழிற்சங்கத் தலைவர்கள் தேடிக்கொள்ளும் சுய விளம்பரங்களினால் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைத்து விடாது. இம்முறை சம்பள உயர்வு கோரிக்கையை முன்வைப்பதிலும் சம்பள உயர்வு பற்றி முடிவெடுப்பதிலும் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு வரும் இ.தொ.கா, இ.தே.தோ.தொ சங்கம் பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு ஆகியன மட்டும் தனித்து செயற்படக் கூடாது. அதற்காக அவை அவற்றின் பொறுப்பை தட்டிக் கழித்து இப்போது சம்பள கோருவது சரியல்ல. என்று கூறுவதோ, வேறு யாராவது சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்கட்டும் என்று சவால் விடுவதோ தொழிலாளர் விரோத நிலைப்பாடாகும். சம்பள உயர்வைக் கோருவதில் தோட்டத் தொழிற்சங்கங்களுக்கிடையே பொது உடன்பாடும் பொது அணுகுமுறையும் ஏற்பட வேண்டும். சம்பள உயர்வை கேட்க வேண்டும் என்ற உடன்பாட்டுடன் எவ்வளவு சம்பள உயர்வைக் கேட்பது என்பதிலும் பொது உடன்பாடு ஏற்பட வேண்டும்.

நியாயமான சம்பள உயர்வுத் திட்டமொன்றை முன்வைத்து அதனை வென்றெடுக்கும் வழிமுறைகளிலும் பொது வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்கு மலையக தொழிற்சங்கங்கள் அனைத்தும் பொது உடன்பாட்டிற்கு வரவேண்டும். எல்லாத் தொழிற்சங்க அங்கத்தவர்களும் அவர்களது தொழிற்சங்கத் தலைவர்களை பொது உடன்பாட்டிற்கு வரும்படி அழுத்தங்களை கொடுக்க வேண்டும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்





## ஐந்து தோழர்களில் மூவர் விடுதலை

கடந்த இரண்டு வருடங்களாக விசாரணையும் விடுதலையும் இன்றி அவசரகாலச் சட்டத்தின் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த புதிய ஜனநாயக கட்சியின் ஐந்து தோழர்களில் மூவர் 13. 02. 2009 அன்று கொழும்பில் நீதிவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். தோழர்கள் வெ. மகேந்திரன், நா. கிருஸ்ணப்பிரியன் எஸ்.மோகன்ராஜ் ஆகிய மூவருமே விடுதலை செய்யப்பட்டவர்கள். மேலும் தோழர்கள் ஆர்.ஜெயசீலன் எஸ்.சுகேசனன் ஆகிய இருவரும் தொடர்ந்து விளக்க மறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி ஐந்து தோழர்களும் 2007 பெப்ரவரி மாதம் 14ம் திகதி பயங்கரவாதச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். அவர்களை விடுதலை செய்யயும்படியும் அவர்கள் புதிய ஜனநாயக கட்சியின் உறுப்பினர்கள் என்பதையும் வற்புறுத்தி மக்கள் இயக்கங்களை முன்னெடுத்தும் சட்டரீதியாகவும் தொடர்ச்சியான பிரச்சாரமும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டன. அதன் காரணமாக இரண்டு வருடங்களின் பின் குற்றச்சாட்டுக்கள் இல்லையென்று கூறி மூன்று தோழர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் விடுதலை செய்யப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆர்.ஜெயசீலன் எஸ்.சுகேசனன் ஆகியோரை விடுதலை செய்ய வேண்டும் என வற்புறுத்துகின்றோம்.

## அக்குரஸ்ஸ குண்டுவெடிப்பு மிலேச்சத்தனமானது

கடந்த 10-03-2009 அன்று முஸ்லீம் மக்களின் தேசிய மீலாத் விழா மாத்தறை மாவட்ட அக்குரஸ்ஸ கொடாபிட்டியாவில் இடம் பெற்றது. அதன் போது ஊர்வலமாக பள்ளிவாசல் நோக்கி மக்களும் பிரமுகர்களும் அமைச்சர்களும் வந்தபோதே தற்கொலைக் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டுள்ளது. இதனை புலிகள் இயக்கமே செய்துள்ளது என்றே நம்பப்படுகிறது. இத்தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 40 பேர் வரை காயங்கள் பட்டுள்ளனர். பொது மக்கள் பெருந்தொகையில் கலந்து கொண்ட அதுவும் சகோதர முஸ்லிம் மக்களின் புனித மத நிக ழ்வு ஒன்றில் இத்தகைய தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்டமை மனித நேயமற்ற மிலேச்சத்தன நடவடிக்கை என்றே கூறுதல் வேண்டும். இது போன்ற பொதுமக்களை இலக்கு வைத்த பயங்கரவாத நடவடிக்கைகள் ஏற்கனவேயும் நாட்டின் தலைநகரிலும் ஏனைய பிரதேசங்களிலும் இடம் பெற்று வந்துள்ளன. இவற்றின் விளைவாகவே ஒற்றுமைப்பட வேண்டிய சகல இன மொழி மத மக்களைப் பிரித்து வைக்கவும் குரோதங்களைக் கொண்டிருக்கவும் வைத்தன. அதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளுக்கான நியாயங்கள் பேசப்படவேண்டிய மக்களிடமிருந்து அந்நியமாக்கப்பட்டன. மனிதநேயமற்ற பழிக்குப் பழி தீர்க்கும் கொலைவெறிகளினால் எவ்வித பயனும் ஏற்பட மாட்டாது என்பது உணரப்பட வேண்டும். இத்தாக்குதலை புதிய பூமி வன்மையாகக் கண்டிக்கிறது. இறந்தோருக்கும் காயப்பட்டோருக்கும் அனுதாபத்தை தெரிவிக்கிறது.

## புதிய ஜனநாயக கட்சியின் வவுனியா உறுப்பினர் கைது செய்யப்பட்டது ஏன்?

கடந்த 7ம் திகதி முதல் எமது புதிய ஜனநாயக கட்சியின் வவுனியா பிரதேச உறுப்பினர் நிக்கலஸ் அன்ரன் பிரதீபன் வயது 28 வவுனியாப் பொலிசாரால் விசாரனைக்கென அழைக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார். அதன் பின் அவர் மேலதிக விசாணைக்கென தற்போது கொழும்பு கிறான்பாஸ் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். பயங்கரவாத செயற்பாடுகள் பற்றிய சந்தேகத்தின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிசார் வழங்கிய பற்றுச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவருக்கும் மேற்படி குற்றச்சாட்டுக்கும் எவ்வித தொடர்பும் இருக்க முடியாது. ஏனெனில் அவர் எமது கட்சியின் உறுப்பினராக இருந்து வருபவர். எமது கட்சி ஒருபோதும் பிரிவினை வாதத்தையும் பயங்கரவாத நடவடிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளாத மாச்சிச லெனினிசக் கட்சியாகவே செயற்பட்டு வருகிறது. தடுத்துவைக்கப்பட்டுள்ள பிரதீபன் எமது கட்சியின் உழைக்கும் மக்கள் சார்பான கொள்கைகளுக்கிணங்க மக்களுக்கு சேவை செய்து வந்தவர். அதனால் அவர் மீது சுயநல வாதிகளுக்கும் மாற்று அரசியல் சக்திகளுக்கும் வெறுப்பு இருந்து வந்தது. அதன் காரணமாகவே அவர் மீது இல்லாத பொல்லாதவைகள் புனையப்பட்டுள்ளன என்றே கட்சி கருதுகின்றது. அவரது கைதும் தடுப்பு வைப்பும் அரசியல் பழிவாங்கல் என்றே நம்புகிறது. ஆதலால் அவர் மீதான விசாரணையைத் துரிதப்படுத்தி விரைவாக அவரை விடுவிக்க வேண்டும் என எமது கட்சி பொலீஸ் மாஅதிபரைச் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### அந்நியத் தலை

1ம் பக்கத் தொடர்ச்சி

வந்து குறிப்பிட்ட மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றி இலங்கையின் வெளிவிவகார அமைச்சருடன் பேசப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. ஆனால் அவ்வாறான உதவிகளை அமெரிக்காவிடம் இலங்கை கேட்கவில்லை என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

மக்களை மீட்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அமெரிக்க கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு வெளியில் நிற்பதாகவும் செய்திகள் வெளியாகின. அதுவும் பின்னர் மறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் எந்தவொரு வெளிநாட்டு தலையீடும் விடுதலை புலிகள் இயக்கத்திற்கு உதவும் வகையில் அமைந்துவிடும் என்று ஜே.வி.பி. கூறுகிறது. ஹெல உறுமயவும் அதே கருத்தையே கொண்டுள்ளது. இலங்கைப் படையினரின் இராணுவ நடவடிக்கைகளின் வெற்றியை இந்தியாவும் அமெரிக்காவும் பங்குபோட்டுக்கொள்ள அனுமதிக்கக்கூடாது என்றும் அவர்கள் கூறுகின்றனர். அத்துடன் அமெரிக்க, இந்தியத் தலையீடுகள் விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பாதுகாப்பதாகவே இருக்கும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

மறுபுறத்தில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதற்கோ தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கோ அமெரிக்க இந்திய தலையீடுகள் எவ்வகையிலும் உதவுவதாக இராது என்பதை தமிழ்மக்கள் உணராமல் இல்லை. அவ்வாறான தலையீடுகள் தமிழ்மக்களின் துன்பங்களை துடைக்காது என்பதை அனுபவ ரீதியாகத் தமிழ்மக்கள் உணர்ந்திருக்கின்றனர். அரசாங்கத்தை பொறுத்தவரையில் அரசாங்கத்தின் இராணுவ நிகழ்ச்சி நிரலுக்கு உதவும் அதேநேரம் வகையிலான வெளிநாட்டுத் தலையீடுகளை எதிர்ப்பதாகத் திட்டவட்டமாகக் கூறுவதில்லை.

தற்போதைய உலக ஒழுங்கில் இந்தியாவின் தலையீடு மிதமிஞ்சியதாகவே இருக்கிறது. இலங்கை அரசின் மீது இந்தியாவின் ஆதிக்கம் அதிகமாகவே இருக்கிறது. யுத்தத்திலும் கூட இந்தியாவின் பங்களிப்பு அதிகமாகவே இருந்து வருகிறது.

ஐ.நா. சபையும் அறிக்கைகளை விடுத்து அதனுடைய கட்டுப்பாட்டை செலுத்திப் பார்க்கிறது. ஐ.நா. சபை மனித உரிமைகள் சபையினூடாக இலங்கையில் தலையீடுகள் செய்யப்படுகின்றன. ஐரோப்பிய யூனியன் நாடுகளும் இலங்கை அரசின் மீது கட்டுப்பாட்டை செலுத்தி வருகின்றன. ஜப்பானும் அதே வழியிலேயே செயற்படுகிறது.

அமெரிக்க இந்திய ஐரோப்பிய யூனியன், ஜப்பான் தலையீடுகள் யாவும் தற்போதும் இருக்கின்றன. முன்பு அதனுடைய தலையீடு த.வி.பு இயக்கம் இராணுவ ரீதியாக பலமாக இருந்தபோது அதனை அடிப்படையாக்கி கொண்டு இலங்கை அரசாங்கத்தை அடிபணிய வைத்தன. தற்போது இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கு இடையூறில்லாத வகையில் (அதனை உள்ளார்ந்தமாக ஆதரித்துகொண்டு) இலங்கை அரசின் மீது கட்டுப்பாட்டை செலுத்துகின்றன. இந்தத் தலையீடுகள் ஒருபுறம் இலங்கை நாட்டின் இறைமையின் மீதான மேலாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை. மறுபுறம் தமிழ் மக்களின் உரிமைகளைக் கொச்சைப்படுத்தும் வகையிலானதாகும். அரசாங்கம் அதனது இராணுவ மேலாதிக்கத்தை நிலை நாட்டினாலும் இந்தத் தலையீடுகள் வெவ் வேறு விதமாக தொடரவே செய்யும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் தீர்வு காணப்படாதவரை நிரந்தர சமாதானம் ஏற்படாது என்பதும் அந்நிய மேலாதிக்க ஏகாதிபத்திய சக்திகளின் தலையீடும் தொடரத் தான் செய்யும். அந்நியத் தலையீடுகள் எப்போதும் பிரச்சினைகளை திசைத்திருப்பி மேலும் சிக்கல்களை அதிகரிப்பதாகவே அமையும். இது தற்போதைய உலக ஒழுங்கில் ஒரு பிரச்சினையை இன்னொரு பிரச்சினையாக மாற்றுவது என்பதாகும் (அதாவது பிரச்சினையை தீர்ப்பதற்கு பதிலாக இன்னொன்றாக மாற்றுவது. தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது தற்போது மனிதப்பேர வலங்களிலிருந்து மக்களை காப்பாற்றுவதாக மாற்றப்பட்டுள்ளது. சூடான், கொங்கோ, எத்தியோப்பியா, சோமலியா போன்ற நாடுகள் தீர்க்கப்படாத அல்லது நீடிக்கப்பட்ட சிவில் யுத்தங்கள் நடைபெறும் நாடுகளாக உதாரணம் காட்டப்படுவது போன்று இலங்கையும் காட்டப்படலாம். இவ்வாறான நிலையில் மனிதாபிமான நடவடிக்கைகள் தலையீடுகள் என்று கூறி அந்நிய தலையீடுகளும் நெருக்கடிகளும் வரலாம் அப்படி வருவது இந்நாட்டு மக்களுக்கும் குறிப்பாக அடக்கப்படும் தேசிய இனங்களுக்கும் எந்த வித விமோசனமும் கிடைக்கப்போவதில்லை. அதே வேளை நாட்டின் இறைமை அந்நிய சக்திகளால் அபகரிக்கப்படும் நிலையே தோன்றும். யாரினூடாகவேனும் எவருக்காகவேனும் வருகின்ற எந்தத் அந்நியத் தலையீடுகளும் ஆரோக்கியமானவையாக இருக்கமுடியாது.

எனவே அமெரிக்க மேற்குலகப் பக்கத்திலிருந்தும் இந்தியாவின் மூலமாகவும் அல்லது ஐ.நா. மூலமாகவும் வரக் கூடிய மனிதாபிமானத் தலையீடுகள் இந் நாட்டை நாசமடையச் செய்யுமே தவிர பிரச்சினைகளைத் தீர்க்க உதவப் போவதில்லை. இதனை அரசாங்கமும் ஜனாதிபதியும் கவனத்திற் கொண்டு இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைத்து யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரல் வேண்டும் என்பதையே நாம் வற்புறுத்துகின்றோம்.

## நாளும் நடக்கும் உலகில் நற்குணன்

### சுயரூபம் வெளிப்படுகிறது

ஜே.வி.பி. முக்கியஸ்தர் ற்றில்வின் சில்வா மத்திய மாகாணத் தேர்தல் பிரசாரத்தின் போது சந்திரசேகரனும் ஆறுமுகன் தொண்டமானும் வெற்றி பெற்றால் "மலை நாடு " கேட்பார்கள் என்று பேசியுள்ளார். இது டெய்லி மிரர் நாளேட்டில் வெளியான தகவல். மறுப்பு எதுவும் இதுவரை காணப்படவில்லை. 1968 முதல் 1971 வரை மலையக மக்களை வெளியேற்ற வேண்டும் என்று பேசி வந்தவர்கள் ஜே.வி.பியினர். அதன் நோக்கம் கண்டியச் சிங்கள ஏழை விவசாயிகளைத் தம் பக்கம் திருப்புவது தான். 1980 களில் மலையகத்தில் தமது தொழிற்சங்கங்களைக் கட்டியெழுப்பும் வாய்ப்பைக் கருதி அந்த விதமாகப் பேசுவது நிறுத்தப்பட்டிருந்தது. இப்போது யூ.என்.பி.யுடனும் பொதுசன முன்னனியுடனும் மலையகத் தலைமைகள் சேர்ந்து போட்டியிடுகிற நிலையில் சிங்கள மக்களிடம் தாங்களே உண்மையான பேரினவாதிகள் என்று ஜே.வி.பி யினர் பிரகடனம் செய்கிறார்கள். மலையக உள்ளூராட்சிகளில் ஜே.வி.பியின் பேரினவாதம் ஏற்கனவே அம்பலப்பட்டுப் போயுள்ளது. இனியாவது அவர்களுடன் ஒண்டிக் கிடக்கிற மலையகத் தொழிற் சங்கத் தொண்டர்கள் விழித்துக் கொள்வார்களா?

### மதம் என்னும் பேய் பிடியாது இருக்க வேண்டும்

ரெலோ தலைவர் சிறிகாந்தா ஜனவரி மாதத்தில் இலங்கைத் தமிழர் தமது தேசியப் பிரச்சினையை இந்துக்களுக்கு எதிரான ஒடுக்குமுறை என்று இந்தியாவில் முன்னெடுத்திருந்தால் அது இலங்கைக்கு எதிரான ஒரு வலிய இந்திய நிலைப்பாட்டுக்கு கொண்டு சென்றிருக்கும் என்ற கருத்துப்பட பேசியதாக ஒரு தமிழ்ப் பத்திரிகைச் செய்தி கூறியது. அது எவ்வளவு முட்டாள்தனமான கருத்து என்பது போக அதன் அடிநாதமான சிந்தனை எவ்வளவு கீழ்த்தரமானது என நாம் சிந்திக்க வேண்டும். இந்தியாவில் இந்துத்துவ வாதிகள் முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் இலக்கு வைக்கிறார்கள் பௌத்தர்களை அல்ல. அப்படியானால் தமிழர் என்றால் இந்துக்கள் என்று இவர்களும் அடையாளம் தேடப் போகிறார்களா? முஸ்லிம்களும் தமிழரே என்று சொல்லி அவர்களுடைய தனித்துவத்தை மறுத்த ஒரு தமிழ்த் தேசிய மரபு இனிக் கிறிஸ்தவர்களையும் வேறு இனத்தவர் என்று பிரகடனம் செய்யுமா? இந்தியாவின் மதவாத அரசியலுடன் சமரசம் செய்ய இவரது ரெலோ இன்னொரு எம்.பி.யான சிவாஜிலிங்கம் சில காலமாக இந்தியாவில் பலவேறு பா.ஜ.க. தலைவர்களிடம் போய் அலைகிறார். ஏன் இந்த அவலம்? மதவாதப் பிசாசுகளுடன் கூட்டணி அமைக்கிற அளவுக்குத் தமிழ்த் தேசியம் தாழ்ந்து விட்டதா?

### "அப்பவே சொன்னவர்கள்"

விடுதலைப் புலிகளால் இராணுவத்தின் தாக்குதலுக்கு எதிராகத் தமது பிரதேசத்தை நீண்டகாலத்துக்குத் தக்க வைத்திருக்க இயலாது என்பது தெரியத் தொடங்கிய போது இரண்டு வகையான அரசியல் சோதிடமணிகள் தமது தமிழ்ப் பாடங்களிலும் இணையத்தளங்களிலும் தமது எதிர்வு கூறல்களை உரத்துக் கூறத் தொடங்கினர். ஒரு பகுதி விடுதலைப் புலிகளிடம் உள்ள இரகசியத் திட்டங்கள் பற்றியும் அடுத்த கட்டம் என்னவென்றும் சொல்லி வந்தவர்கள். இன்னொரு பகுதியினர் விடுதலைப் புலிகள் தாங்கள் சொன்னபடி செய்யாததால் தான் இப்போது தோல்வியைத் தழுவ இருப்பதாகச் சொல்லத் தொடங்கினர்கள்.

இரண்டு வகையானவர்களிடமும் தாங்கள் முன்பு சொன்ன ஆருடங்களில் பொய்த்துப்போன ஏராளமான கருத்துக்கள் பற்றிய நினைவுகள் இல்லை. அவற்றை நினைவூட்டிக் கேட்டால் தருவதற்கு எந்தவிதமான விளக்கமும் அவர்களிடம் இல்லை. காரணம் ஏனென்றால் இந்த விசிலடிச்சான் குஞ்சு அரசியல் விமர்சகர்கட்கு எதையும் ஆராய்வதற்கான தத்துவார்த்த அடிப்படையும் இல்லை. தகவல்களை நிதானமாக ஆராய்ந்து முடிவுகட்கு வருகிற பயிற்சியோ பழக்கமோ இல்லை. எப்போதோ சொன்ன அல்லது சொன்னதாகக் கற்பனை செய்கிற ஒன்றைத் தாங்கள் "அப்பவே சொன்னது இப்போ நடக்கிறது " என்று கொக்கரிக்க மட்டுமே தெரியும்.

இவர்களில் எவர்களுக்கும் தமிழ் மக்களின் அவலம் பற்றிய கவலையோ அக்கறையோ இல்லை. அவர்கள் பார்க்கிற ஆட்டம் வேறு. அதன் விளைவாகச் செத்தொழிகிற சனம் இவர்கட்கு ஒரு புள்ளிவிபரப் பெறுமானங் கூட இல்லாதது என்பது தான் வருந்தத்தக்க உண்மை.

### உண்மையைக் கூறுகிறார்

அமைச்சர் ராதாகிருஸ்ணன் நுவரெலிய மாவட்டத்தில் மாகாணசபைத் தேர்தலில் வாக்குகள் குறைவாகவே கிடைக்கக் காரணம் பொலீஸ் மலையகத் தழிழர்களை காரணமின்றிக் கைது செய்து விசாரணையின்றித் தடுத்து வைத்திருப்பது தான் என்று சொல்லியிருக்கிறார். அதில் உண்மை உண்டு. ஆனால் பெரிய கேள்விகளும் உள்ளன.

அரசியல் காரணங்கட்காகக் கைது செய்யப்பட்ட புதிய ஜனநாயகக் கட்சித் தோழர்கள் ஐந்து பேர் உட்பட பலரது கைதுகளைப் பற்றிக் கவலைப்படாது அவரது கட்சியும் இருக்கிறதே அது அவருக்கு தெரியாதா?

காணாமற்போபோனோக்கும் கைதானோருக்குமான விசாரணைகளை நடத்தும் அரசாங்கக் கமிட்டியில் ராஜித சேனநாயக்க, வாசுதேவ நானயக்கார ஆகியோருடன் ராதாகிருஸ்ணனும் இருக்கிறார். இருந்தும் மலையக இளைஞர்களை கைது காணமல் போதல்களில் இருந்து என் தடுக்க முடியவில்லை. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மலையக மக்கள் முன்னணி இதையாவது செய்திருக்க வேண்டாமா?

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# நாய்வாலை நிமிர்த்தினாலும் ஜே.வி.பி. நிமிர மாட்டாது.

இந்த நாட்டின் மூன்றாவது சக்தி என மார்தட்டி நின்ற ஜே.வி.பி. இப்போது இரண்டாக உடைந்து இரு தரப்புமே போண்டியாகிக் காணப்படுகின்றன. சோமவன்ச - ரில்வின் சில்வா தலைமையில் ஒரு பிரிவும் விமல் வீரவன்ச நந்தன குணத்திலக்கா தலைமையில் மறு பிரிவுமாக செயற்பட்டு வருகின்றனர். முதல் பிரிவினர் ஜே.வி.பி யின் பெயரில் மணிச் சின்னத்துடன் இருந்து வர மறுபிரிவினர் தேசிய முன்னணி என்ற பெயரில் அரசாங்கத்துடன் இணைந்து செயலாற்றி வருகிறார்கள்.

இவ்விரு பிரிவினருக்கும் உள்ள கொள்கை நிலைப்பாட்டில் பேரினவாதம் பொதுவானதாகவும் வலுவானதாகவும் இருந்து வருவது தான் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இன்று தேசியப் பிரச்சினையால் யுத்தம் கொழுந்து விட்டு எரிகிறது. அந்தக் கொடுந் தீயில் இந்நாட்டின் பிரசைகளான தமிழ் மக்கள் வெந்து கருகி மாண்டவண்ணம் உள்ளனர். நாளாந்தம் ஐம்பது நூறு என்ற கணக்கில் மக்கள் உயிர் இழப்புகளுக்கும் படுகாயங்களுக்கும் பசிக் கொடுமைகளுக்கும் ஆளாகி நிற்கிறார்கள். இவற்றிலிருந்து தவறிவந்த மக்கள் நலன்புரி நிலையங்களில் அடைத்து வைக்கப்படுகின்றனர். சட்டியிலிருந்து அடுப்பிற்குள் வீழ்ந்த கதை போன்று ஒரு கட்டுப்பாட்டிலிருந்து மறு கட்டுப்பாட்டுக்குள் வந்த மக்கள் புலம்பி நிற்கிறார்கள். இவ்வாறான பேரவலச் சூழலிலும் ஜே.வி.பி. பேரினவாத பிடில் வாசித்து மகிழ்கிறது. இலங்கை ராணுவத்தின் வீரத்தை தியாகத்தை அர்ப்பணிப்பைப் போற்றிப் புகழ்ந்து நிற்கிறது. இறுதி வெற்றியைப் பெற்று பிரிவினை வாதத்தைத் தோற்கடிப்பதில் யுத்தம் மும்முரமாகி நிற்பதை ஜே.வி.பி வாழ்த்தி வரவேற்கிறது. அதனை அடிக்கடி நடாத்தும் ஊடகவியலாளர் சந்திப்புக்களில் எடுத்துக் கூறியும் வருகிறது. அவ் வேளைகளில் தேசிய இனப்பிரச்சினை ஒன்று இருப்பதையோ அதற்கு அரசியல் தீர்வு காண்பதையோ ஏற்றுக் கொள்வதாக இல்லை. பதின் மூன்றாவது திருத்தத்தை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பயன்படுத்தும் வற்புறுத்தல்களைக் கூட ஜே.வி.பி. நிராகரிக்கிறது. பதின் மூன்றாவது திருத்தம் என்பது தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கு ஏற்ற ஒன்றல்ல என்பது பொதுவான அபிப்பிராயமாகும். அத்தகைய குறைந்த முன்மொழிவைக் கூட ஜே.வி.பி.யால் உள்வாங்க முடியவில்லை. இவ்வாறு பதின்மூன்றாவது திருத்தத்தை எதிர்த்து நிராகரிக்கும் ஜே.வி.பி அதன் கீழ் இடம் பெற்று வரும் மாகாணசபைத் தேர்தல்களில் மட்டும் மணி ஓசை கிளப்பி போட்டி போடுகின்றது. இம்முறை தனித்து நின்று போட்டி போட்டதன் மூலம் மோசமான தோல்வியையே அதனால் சந்திக்க முடிந்தது. இது ஜே.வி.பி. மீது மக்கள் வைத்திருந்த அபிப்பிராயம் சரிந்து வீழ்ந்துள்ளதையே எடுத்துக் காட்டுகிறது.

சிங்கள மக்களின் வாக்குகளை வென்றெடுக்கவும் தமது தனித்துவத்தை நிலை நிறுத்தவும் வேண்டி ஜே.வி.பி. பேரினவாதத்தை ஒரு கருவியாக்கி வந்தது. அப்படி இருந்தும் அண்மைய மாகாண சபைகளில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைக் கூடப் பெற முடியவில்லை. சிங்கள மக்கள் மத்தியில் ஐ.தே. கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பன பாரம்பரிய பேரினவாதக் கட்சிகளாகும் பாராளுமன்ற இடதுசாரிகளான சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேரினவாத நிலைப்பாட்டை எதிர்க்காது மௌன அங்கீகாரம் வழங்கி வரும் கட்சிகளாகும். இவையாவும் பேரினவாதத்தைப் பச்சை பச்சையாகப் பேசுவதில்லை. ஆனால் ஆளும் அதிகாரச் செயற்பாட்டால் நடைமுறைப்படுத்தி வருபவையாகும். இவற்றுக்கு மேலாக வெளிவெளியாகவும் அப்பட்டமாகவும் பேரினவாதத்தையும் அதன் ஒடுக்கு முறையையும் நியாயப்படுத்தி வருவதில் ஜாதிக ஹெல உறுமயவும் ஜே.வி.பியுமே அரங்கில் நின்று வருகின்றன. இவர்களில் யார் வேகமாகவும் அதிகமாகவும் பேரினவாதத்தைக் கக்கிக் கொள்வது என்பதில் தான் இவர்களுக்கிடையில் போட்டியாகும். ஏனெனில் இவர்கள் எதிர்பார்க்கும் வாக்கு வங்கியானது பேரினவாதத்தினால் தக்கவைத்து வருகின்ற ஒன்றாகும். இருப்பினும் சிங்கள மக்கள் எத்தனை காலத்திற்குத்தான் பேரினவாதப் பேச்சு மயக்கத்தில் சிக்கி இருக்க முடியும்.

ஆதலால் ஜே.வி.பி. திருந்தும் திருந்தும் எனச் சிங்கள மக்களோ இளந்தலைமுறையினரோ எதிர்ப்பார்க்க இடமில்லை. நாய்வாலை நிமிர்த்த முடியாமை போன்றே ஜே.வி.பி. யைச் சிங்கள மக்கள் திருத்த முடியாது. எனவே ஒரே வழி ஜே.வி.பி. யின் தொடரும் பேரினவாத பிற்போக்குவாத சந்தர்ப்பவாதத் தலைமைத்துவத்தை நிராகரித்து விட்டு அவர்களது தலைகளுக்கு மேலால் புதிய அரசியல் சக்திகள் முன்னுக்கு வரவேண்டும். நாட்டின் அரசியல் பொருளாதார சமூகப் பண்பாட்டின் இன்றைய சமூக யதார்த்தத்தை விளங்கிக் கொண்டு அவற்றுக்கான கொள்கைகள முன்வைக்கும் புதிய அரசியல் சக்திகள் சிங்கள மக்கள் மத்தியில் தோற்றம் பெற வேண்டும். அத்தகைய சக்திகள் தேசிய இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சுயாட்சித் தீர்வு காணப்படுவதை வற்புறுத்த வேண்டும். அத்தகைய ஒரு நிலையே திருத்த முடியாத ஜே.வி.பி க்கு மாற்றாக அமைய முடியும். அதற்கான முன் முயற்சிகள் சிங்கள மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படுவது அவசியம். அதன் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு மட்டுமன்றி முழு நாட்டினதும் மீட்சிக்கு ஒளிமிக்க அரசியல் பாதையை அமைத்து பயணிக்க முடியும். இல்லையேல் அழிவுகள் தொடரவே செய்யும்.

# வித்தியாதரனை விடுதலை செய்ய வேண்டும்!

உதயன், சுடரொளி, பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் ந. வித்தியாதரன் இச் செய்தி எழுதும் வரை விடுவிக்கப்படவில்லை. அவர் கடந்த 26ம் திகதி மரண நிகழ்வில் வைத்து கடத்தப்பட்டார். அதன் பின் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இச் சம்பவத்தின் போது காயங்களும் அவருக்கு ஏற்பட்டதாக அறிய முடிகிறது. வித்தியாதரனுக்கு ஏற்பட்ட இந் நிலை தற்செயலானதொன்றல்ல. ஊடகவியலாளர்கள் குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இடம் பெற்று வந்தனவற்றின் தொடர்ச்சி என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. இருப்பினும் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு மட்டுமன்றி சிங்கள ஆங்கில ஊடகங்கள் ஊடகவியலாளர்களுக்கும் இதே கதி தான் நடந்து விடுகின்றது. ஆங்கில ஊடகவியலாளரான திசநாயகம் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. சன்டே லீடர் ஆங்கில வார இதழின் ஆசிரியர் பட்டப் பகலிலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றொரு சிங்கள ஊடகவியலாளர் தென்னகோன் வழிமறித்து குத்தியும் வெட்டியும் ஆபத்தான நிலைக்கு ஆளாக்கப்பட்டார். இன்னும் யார் யாரோ என்ற நிலையே நீடிக்கிறது. இந் நிலையில் இலங்கை ஊடகவியலாளர்களுக்குப் பாதுகாப்பு அற்ற நாடு என்ற கணிப்பை எவ்வாறு மறுத்துரைக்க முடியும். இந் நிலையில் வித்தியாதரன் ஊடகவியலாளர் என்றோ அல்லது பத்திரிகை ஆசிரியர் என்றோ கைது செய்யப்படவில்லை என்றே அரசாங்க அமைச்சர் விளக்கம் தந்துள்ளார். இன்றைய அவசரகால-பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் யாரையும் எவரையும் எவ்வாறும் கடத்தலாம் கைது செய்யலாம் தடுத்து வைக்கலாம் என்ற நிலை இருக்கும் போது அடிப்படை உரிமைகள், ஊடக சுதந்திரம் கருத்துச் சுதந்திரம் என்ற வாசகங்கள் வெறும் ஏட்டில் எழுதப்பட்டவை மட்டுமேயாகும். இவற்றில் ஏதாவது நம்பிக்கை இருப்பதாக அரசாங்கம் கூறுமானால் வித்தியாதரனை விடுதலை செய்ய வேண்டும். அவரை மட்டுமன்றி ஏற்கனவே தடுத்து வைத்திருக்கும் தமிழ் சிங்கள ஊடகவியலாளர்களையும் விடுதலை செய்ய வேண்டும் அல்லது விசாரனைக்கு நிறுத்த வேண்டும் என்பதையையே புதிய பூமி வற்புறுத்துகிறது.

# அவலத்தில் தவிக்கும் தமிழ் மக்களுக்கு யார் பொறுப்புதாரிகள்

1979 ம் ஆண்டு **ஜே.ஆர் ஜெயவர்தன** யாழ்ப்பாணத்திற்கு தனது உறவினரான உயர் இராணுவ அதிகாரியான வீரதுங்க என்பவரின் தலைமையில் ஒரு படையணியை அனுப்பி வைத்தார். அதற்கு கொடுத்த பணிப்புரை "தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஆரம்பித்த தீவிரவாதத்தை அடக்கிதுடைத் தெறிந்து விட்டு வாருங்கள்" என்பதேயாகும். அந்த யுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டு முப்பது ஆண்டுகளாகின்றன. அன்று மூட்டிவைத்த யுத்தத் தீ இன்று வரை சுவாலை விட்டு எறிந்த வண்ணமே இருக்கிறது. மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் கீழ் இப்பொழுது அந்த யுத்தம் முடிவுக்கு வந்து கொண்டிருப்பதாகவே பரப்புரை செய்யப்பட்டு வருகிறது. முல்லைத் தீவின் புதுக்குடியிருப்புக்கு அப்பால் ஐம்பது சதுர கிலோ மீற்றர் பரப்பளவிற்குள் யுத்தத்தையும் புலிகள் இயக்கத்தையும் மட்டும் படுத்தி விட்டதாக அறிவிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இவ்வாறு கூறப்படும் பிரதேசத்திற்குள் சுமார் இரண்டு இலட்சம் மக்கள் மிகப் பெரும் அவலங்களின் கீழ் இருந்து வருகி றார்கள். அரசாங்கப் படைகள் தமது தாக்குதல்களைத் தொடுத்த வண்ணமே உள்ளனர். அதே வேளை அம்மக்கள் மத்தியிலிருந்து புலிகள் இயக்கம் தம்மைப் பாதுகாத்தவாறு ராணுவத்தின் மீது தாக்குதல்களை அவ்வப்போது நடாத்தியும் வருகின்றனர். அவர் களுக்கு இன்று தேவைப்படுவது உடனடி யுத்த நிறுத்தமேயாகும். ஆனால் அரசாங்கம் அதற்கு தயாராக இல்லை. ஆயுதங்களைப் போட்டு விட்டு சரணடையுமாறு அரசாங்கம் கூறி வருகிறது. அது நடக்காது என்ற நிலையிலேயே புலிகள் இருந்து வருகிறார்கள். இத்தகைய இரட்டை நிலைக்குள் இரண்டு லட்சம் மக்கள் அகப்பட்டு இருப்பதாக ஐ.நா. அமைப்புகள் கூறி வருகின்றன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மட்டுமே அங்கு உள்ள ஒரே ஒரு சர்வதேச நிறுவனமாகும். அதன் மூலமே காயப்பட்டோரும் பெண்கள் வயோதிபர் குழந்தைகளும் கப்பல் மூலம் திருகோணமலைக்கு கொண்டுவரப்படுகின்றனர். அரசாங்கம் சுமார் எழுபதினாயிரம் மக்கள் மட்டும்தான் அங்கு இருப்பதாகக் கூறி வருகிறது. அதே வேளை யுத்தப் பிரதேசத்திலிருந்து இதுவரை முப்பத்தையாயிரம் மக்கள் வவுனியாவிற்கும் ஏனைய நலன்புரி நிலையங்களுக்கும் வந்துள்ளனர் என அரசாங்க அறிக்கைகள் விபரம் தருகின்றன. யுத்தப் பிரதேசத்தில் உயிரைப் பாதுகாக்க முடியாத அவலம். வவுனியாவில் நலன்புரி நிலையங்களில் வெளியே செல்ல முடியாத கட்டுப்பாடு உணவு உடை இருப்பிடத் தட்டுப்பாடும் கொண்ட மக்களின் அன்றாட வாழ்க்கை அவலங்கள் எழுத்தில் சொல்லில் விபரிக்க முடியாதவை யாகியுள்ளன.

இவ்வாறு மக்கள் எதிர்நோக்கி நிற்கும் பேரவலங்களுக்கு யார் பொறுப்புக் கூறக் கூடியவர்களாக உள்ளனர் என்பதே எழுந்து நிற்கும் கேள்வியாகும். அரசாங்கம் சொந்த நாட்டு மக்களின் மீதே போர் தொடுத்து நிற்கும் நிலையில் பயங்கரவாத ஒழிப்பு தனது மீற முடியாத கடமை எனக் கூறி நிற்கும் போது யுத்தத்திற்குள் அகப்பட்டுள்ள மக்களுக்கான பொறுப்பைத் தட்டிக் கழித்து நிற்கிறது. அதே வேளை விடுதலைப் போராட்டம் எனத் தமிழ் மக்களை அழைத்துச் சென்ற புலிகள் இயக்கம் சுதந்திரமாக மக்கள் வெளியேறுவதைத் தடுத்து நிற்கும் போது மக்கள் பீரங்கித் தீனியாக்கப்படுவதையிட்டு அக்கறை கொள்ளாத நிலையில் அவர்களிடம் எவ்வாறு தமிழ் மக்களுக்கான பொறுப்பை எதிர்ப்பார்க்க முடியும். அத்துடன் பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கூட்டமைப்பினரோ ஏனைய தமிழ் இயக்கங்களோ எவ்வகையிலும் யுத்தத்திற்குள் இருந்து வரும் மக்களுக்குப் பொறுப்பானவர்கள் எனக் கொள்ள முடியாது. இந்தியா அமெரிக்கா ஐரோப்பிய நாடுகள் மீது நம்பிக்கை வைக்குமாறு இதே தமிழர் தலைமைகள் தமிழ் மக்களுக்கு கூறிவந்தன. ஆனால் அந்த நம்பிக்கை தகர்ந்து நிற்கும் சூழலில் தமிழ் மக்கள் யாரைப் பொறுப்பானவர்களாகவும் நம்பிக்கையானவர்களாகவும் காண முடியும். திக்குத் தெரியாத சமுத்திரத்தின் நடுவே புயல் இடி முழக்கம் கொந்தளிப்பு என்பனவற்றின் மத்தியில் தத்தளிக்கும் மக்களாகத் தமிழ் மக்கள் இருந்து வருகிறார்கள். மேலே கூறப்பட்ட ஒவ்வொரு தரப்பினருக்கும் தத்தமது சொந்த நலன்களும் நிகழ்ச்சி நிரலும் இருந்து வருகின்றன. அவை தமிழ் மக்களுக்கு உரியவை அல்ல. அத்தகைய நலன்களுக்காக நிகழ்ச்சி நிரலுக்காகத் தமிழ் மக்கள் மேற்படி தரப்புக்களால் அவ்வப்போது பயன்படுத்தப்பட்டு வந்துள்ளனர் என்பதே மறைந்து கிடக்கும் உண்மையாகும். தமிழ் நாட்டிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் யுத்தத்திற்குள் சிக்கியுள்ள மக்கள் சார்பாகக் காட்டப்படும் உணர்வலைகள் எல்லைகளுக்கு உட்பட்டவையாகும். அவ்வப்போது தான் அவ் ஆதரவு எழுச்சிகளில் மக்கள் பெருந்தொகையில் பங்கேற்ற போதும் அவற்றுக்குத் தலைமை தாங்குவோர் தத்தமது அமைப்புகளின் நலன் சார்ந்த நோக்கங்களுக்கே அவற்றைப் பயன்படுத்தி வருகின்றனர். சிலர் யுத்த நிறுத்தம் வேண்டும் என்கின்றனர். யுத்தத்திற்குள் அகப்பட்டுள்ள மக்கள் மீட்கப்பட வேண்டும் என்கிறார்கள். வேறு சிலர் தமிழீழம் வேண்டும் புலிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிறார்கள். இன்னும் சில ஞானசூனிய ஆய்வாளர்கள் மக்களின் இறப்புத் தொகை போதாது என்றும் ஒரு ஐம்பதினாயிரமாவது மடிந்தால்தான் ஐ.நா. சபை தலையிட வாய்ப்பு வரும் என எதிர்ப்பார்க்கின்றனர்.

இவையாவற்றையும் ஆழ்ந்து நோக்கும் போதுதான் தமிழ்த் தேசிய இனத்தின் தலைவிதியானது யார் யாரிடம் எல்லாம் சிக்கித் தவித்து நிற்பதைக் காண முடிகிறது. இத்தகைய வரலாற்றுத் துயர் தொடரவும் கூடாது. மீண்டும் ஒரு முறை இடம் பெறவும் கூடாது. அதற்கான ஒரே வழி தமிழ் மக்கள் தமது சொந்தத் தலைவிதியைத் தமது கரங்களில் எடுத்துக் கொள்வது தான். தவறான தமிழர் தலைமைத்துவங்களால் மேய்க்கப்படும் நிலையை மாற்ற வேண்டும். சரிக்கும் பிழைக்கும், உண்மைக்கும் பிழைக்கும், யதார்த்தத்திற்கும் யதார்த்தமற்றவைக்கும் குறுகிய வழிகளுக்கும் தூர நோக்கிற்கும் இடையிலான வேறுபாடுகளை சரியான அரசியலின் மூலம் உய்த்துணர்ந்து கொள்ள முன்வரல் வேண்டும். கேள்விகள் பல எழுப்பப்பட்டு அவற்றுக்கான விடைகள் உரிய தளங்களில் பெறப்படல் வேண்டும். எல்லாம் முடிந்து போன காரியங்கள் அல்ல. அவலங்களிடையே தான் சிந்தனைகளுக்கான சிறு துளிகள் தோன்ற முடியும். அவைகளே பெருவெள்ளமாக மாற்றமடைய முடியும். பட்டறிவுகள் தோல்விக்கான காரணங்களை கண்டறிய வைக்கும். அதுவே வெற்றிநோக்கிய பாதைக்கு வழிகாட்ட முடியும்.

தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் உள்ள தொழிலாளர்கள் விவசாயிகள் புத்திஜீவிகள் மற்றும் உழைக்கும் மக்கள் முன்னெழுந்து நடக்க முன்வரல் வேண்டும். வர்க்கப் போராட்ட நிலைநின்று வெகுசன அரசியல் போராட்டப் பாதையில் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் நிலைக்கு வரவேண்டும். அதுவே எதிர்காலத்திற்கான ஒளிரும் பாதையாக அமைய முடியும்.

அ. பூபதி

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத் தேர்தலில் மக்கள் தெரிவு சரியானதா?

## ஒரு விமர்சனப் பார்வை

மத்திய மாகாணத் தேர்தல் முடிவுற்றுள்ளது. இதன் முடிவில் பலர் அதிர்ச்சியடைந்திருந்தாலும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக ஏற்றுக் கொள்ள முடியாது. வழமையாக பெரிய தொழிற்சங்கம் எனத் தம்மை அறிமுகப்படுத்தும் இ.தொ.காங்கிரஸ் பக்கம் மக்கள் வழங்கியிருந்த ஆதரவு குறைவடைந்துள்ளது. ம.ம.மு. பற்றிய உண்மையை மக்கள் அறிந்து கொண்டமையால் அதற்கு மக்கள் வாக்களிக்க வில்லை என்பதை விட அவர்கள் அரசாங்கத்தின் பக்கம் இருந்தது சிக்கலை ஏற்படுத்தியிருந்தது. அவர்களது அபேட்சகர்களின் இலக்கம் மக்களுக்கு மயக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். மறுபக்கம் தற்போது முளைத்த தொ.தே. சங்கத்தின் திகாம்பரம், உதயா, சனநாயக மக்கள் முன்னணியின் பிரபா கணேஷன் என்போரின் விருப்பு வாக்குப்பட்டியலில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளமையால் மக்கள் சிந்தித்துள்ளனர் என ஏற்றுக் கொள்ள முடியாது. மாற்றம் என்பது ஒரே தன்மை, கொள்கைகளிடையே வேறு சிலரை தெரிவு செய்வதில் அல்லாமல் கொள்கை சித்தார்ந்த ரீதியிலும் செயற்பாட்டு ரீதியிலும் மாற்று அரசிலை மக்களுக்கான அரசியலை செய்யும் கட்சிக்கு வாக்களிப்பதேயாகும். எனவே வழமையாக ஒரு மத்திய தூணில் கட்டப்பட்ட செக்குமாடாக இருந்து வந்த மக்கள் தற்போது அத்துறைக்கு பக்கபலமாக இன்னொரு அதே போன்ற தூணைக்



கட்டிக் கொண்டு மீண்டும் சுற்றிச் சுற்றி அடிமைகளாகவே வாழ வழிவகுத்துள்ளனர் என்று தான் கூற வேண்டியுள்ளது. ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரசைப்பற்றி அதிகம் கூறத் தேவையில்லை. இந்தியாவில் 1751இல் ஆங்கிலேயர் பக்கம் நின்று பதவிக்காக சுதேசிய போராளிகளுக்கு எதிராக 400 குதிரைப்படையினர் 3000 காலாட் படையினரை வழங்கி 1799 இல் பாஞ்சாலம் குறிச்சிப் போரில் தோல்வியடைந்த கட்டபொம்மன் மருது சகோதரர்கள் உதவியை நாடிச் சென்ற போது ஆங்கிலேய கலெக்டர் - லாசிங்டன் ஆணைப்படி திருக்களம்பூர் காட்டில் வைத்து கட்டபொம்மனை பிடித்து கொடுத்த "காட்டிக் கொடுத்தான்" பெருமையுடன் ஆங்கிலேயர் வால் பிடித்து வாழ்ந்ததுடன் அவர்களுக்கு கப்பம் செலுத்தி வந்த வர்கள் விஜய ரகுநாதத்

**எஸ். மோகன்ராஜன்**

தொண்ட மான் பரம்பரையினர் ஆட்சி. அதே தொனியில் அதிகாரத்துக்கும் பதவிக்கும் துணை நின்று மக்களை அடிவருடிகளாக நினைத்து அடகு வைக்கும் தமது குடும்ப பழக்கத்தை விட்டு விலகாமல் இத்தடவையும் அரசாங்கத் தரப்பில் வெட்கமில்லாமல் நின்று மூக்குடைப்பட்டும் வீராப்புடன் உள்ளனர்.

இந்திய சினிமாக்களில் காண்பிக்கப்படுவதைப்போல குண்டர்களின் அராஜக அரசியல் கலாசாரத்தை பகிரங்கமாக தலவாக்கெல்லையில் ஆறுமுகன் காட்டியிருந்தார். மிகவும் மோசமான, கீழ்த்தரமான நடத்தை கொண்ட இவர்கள் மக்களை எவ்வாறு வழிநடத்தப் போகின்றனர் என்று மக்கள் தெளிவாக விளங்கியிருக்க வேண்டும். எனவேதான் இவர்களின் வாக்கு குறைவடைந்துள்ளது. பாராளுமன்றத்தில் அவசர கால சட்டத்துக்கு எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்காது அடிப்படை எதுவுமின்றி கையுயர்த்தும் இவர்கள் எதை மக்களுக்காக சாதிக்கப் போகின்றனர் என்பது கேள்விக்குறியே. இவர்கள் பாராளுமன்றத்தில் மக்கள் சார்பாக ஏதாவது பேசியிருக்கிறார்களா.?

அடிக்கடி அறிக்கைகளும் பேச்சுகளும் வெளியிடுவதன் மூலம் மக்களை ஏமாற்றி வருபவரான மலையக மக்கள் முன்னணி தலைவர் இவரை உலகம் சுற்றும் தலைவர் என்றும் கூறுவர். அங்கெல்லாம் தமிழர்களைப் பற்றிப் பேசியதாக ஊடகங்களில் செய்தியும் படமும் வரச் செய்து விடுவதில் வல்லவர். அவரது முன்ணனியில் இருந்து எவரும் தெரிவாகவில்லை. இவர்களுக்கு போட்டியாக மக்களின் அடிப்படைத் தேவை கரப்பந்தாட்டமும், கிரிக்கெட்டும் என்று கோசமிட்டவாறு இளைஞர்களை மயக்கி அரசியலில் புரட்சி நடத்துவதாக கூறி தற்போது இ.தொ. காங்கிரஸிற்கு சவால் விட்டுக் கொண்டு இறங்கியுள்ளவர் திகாம்பரம். இவ்விடத்திலே இவர் தேர்தல் பிரச்சாரத்துக்காக செலவழித்த பணம் கோடியில் எனப் பேசிக்கொள்ளப்படுகிறது. இவ்வளவு பெருந்தொகை எவ்வாறு இவருக்கு கிடைத்தது. சாதாரண மாகாண சபைத் தேர்தலுக்காக இவ்வளவு பெரும் தொகையை செலவிட்டதன் நோக்கம் யாது? (நிச்சபமாக மக்கள் நலன் இல்லை) என சிந்தித்தால் மாகாண சபையிலிருந்து இவர் செலவிட்டதை விட பன்மடங்காக இருக்கும். இது பற்றி அமைச்சர் புத்திரசிகாமணி மின்னல் நிகழ்ச்சியில் குறிப்பிட்டிருந்தார். மக்கள் நலன் பேணுவது இவர் களது இலக்கு அல்ல என்பது வெளிப்படையான உண்மை.

உடனடி பிரச்சார நுட்பமாக விளையாட்டு உபகரணங்கள் மைதான வசதி, நீர் வசதிகளையும் இவர் தேர்தல் பிரச்சாரத்தின்போது செய்துள்ளார். பதவியிலிருக்கும் போது செய்யாது இப்போது செய் தது வாக்குகளுக்காகவே என்பதை நான் சொல்லி தெரியவேண்டியதில்லை. ஆனால் இதன் பிறகு இவை தொடரப்போவதில்லை என்பதிலும் ஒரு அரசாங்கம் செய்ய வேண்டிய வேலைகளை இவர் செய்வதற்கான பணம் எவ்வாறு இவருக்கு வந்தது. இது மக்களை மயக்கும் தேர்தல் வித்தையேயன்றி வேறில்லை.

அடுத்து புதிய வரவு மனோகணேஷனின் தம்பி. வந்தாரை வாழ வைக்கும் மலையகமா? வாழ்க்கையை அடகு வைக்கும் மலையகமா? என்று தெரியவில்லை. சக்தி T.V இன் மின்னல் நிகழ்ச்சியில் பேசுவதால் உற்சாகமானவர் என நம்பி பலர் வாக்களித்துள்ளனர். இவர்தான் திகாம்பரம் சாராயத்தால் பெற்ற வாக்கு என அவரைப்பற்றி கூறியிருந்தார். இவர் தனது பிரச்சாரத்தை எவ்வாறு செய்தார் என மக்களைக் கேட்டால் கூறுவர். தூய கைகளுடன் பிறரை குற்றம் சாட்ட வேண்டும். இ.தொ.கா , தொ.தே. சங்கம் இவர்களுக்கு இணையாக அதே வழியில் பிரச்சாரம் செய்தவர் மனோகணேஷன்.

அரசாங்கத்தின் யுத்தம், இன அழிப்பு நடவடிக்கை, விலைவாசி உயர்வு, என்பவற்றுக்கு எதிராக மீண்டும் ஐ.தே. கட்சிக்கு வாக்களித்துள்ளமை வேடிக்கையானது. 1947 பிரஜாவுரிமை பறிப்பு தொடக்கம் 1978 இன் பின்பு அவர்கள் தமிழ் மக்கள் மீது செய்த அட்டூழியங்கள் 1983ன் கறுப்பு ஜுலை என தமிழ் இனத்துக்கும் மலையக மக்களுக்கும் எதிரான நடவடிக்கைகளை செய்தவர்களும் இலங்கையில் இனப்பிரச்சினையை தோற்றுவித்தவர்களும் அவர்களே. இவர்களுக்கு வாக் களித்திருப்பது வெட்கித் தலை குனிய வேண்டிய விடயமே. இவர்களும் யுத்த ஆதரவாளர்கள் என்பது மக்களுக்கு தெரியாத விடயமல்ல. மாற்று கட்சி என்று ஒரே வட்டத்துக்குள் நின்று செயற்பட்டுள்ளமை அவர்களின் மலையக அரசியல் பற்றிய அறியாமையை உணர்த்துவதுடன் அரசியல் நடப்புக்களில் தன்னை ஈடுபடு த்தாமலும், தெரிந்து கொள்ள முற்படாமையும் என உணர்த்துவதுடன் இது அவர் களை பாராளுமன்ற சாக்கடை அரசியலில் கொண்டு தள்ளும் என்பதில் மாற்று கருத்து இருக்க முடியாது.

சட்ட விரோத கைதுகளுக்கு எதிரான நடவடிக்கைகள், சம்பள உயர்வுப் போராட்டம், மேல் கொத்மலைக்கு எதிரான போராட்டங்கள், கல்வியல் கல்லூ ரியில் தமிழ் மாணவர் எண்ணிக்கை தொடர்பான போராட்டம், புதிய ஆசிரியர் நியமனம் தொடர்பான போராட்டங்களில் ஈடுபட்டு வந்த புதிய ஜனநாயக கட்சியை மக்கள் ஆதரிக்க தவறியிருக்கின்றனர். மாறாக தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் போராட்டத்தின் போது (மக்கள் போராட்டத்தில் உறுதியாக இருக்கும் போது) முதலா ளிகளிடம் பணம் வாங்கிக் கொண்டு கூட்டு ஒப்பந்த த்தில் கையெழுத்திட்டவர்கள், அதில் கையெழுத்திட்டு விட்டு கொழும்பு பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் சம்பள உயர்வுக்கு ஆதரவாக நடாத்திய ஆர்ப்பாட்டங்களை அறியாமை என கூறியவ ர்கள், மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திட்டத்திற்கு எதிராக கூவி பின் அரசாங்கத்திடம் பணம் பெற்றுக் கொண்டு ஒப்பந்தக்காரர்களாகி இன்று சம்பளம் கொடுக்காமல் ஊழியர்களை வேலை வாங்கும் துரோகிகள் சாராயத்திற்காக மக்களை விலை பேசும் சீர்கெட்ட ஏமாற்றுக்காரர்கள், இளம் பெண்களை பயன்படுத்தும் முகவர்கள், பதவிக்காக கட்சி தாவும் மக்கள் துரோகம் செய்பவர்க ளுக்கு மக்கள் வாக்களித்ததன் பின்னணி என்ன? என்பது மலையக அரசியலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் அவர்களது வாழ்க்கையை குறுகிய வட்டத்துள்ளே வைத்திருக்க வழிவகுத்துள்ளது. இது கவலைக்கிடமான ஒரு சூழல். இதன் விளைவுகளை மக்களே அறுவடை செய்துள்ளனனர் என்பதை மறக்கக் கூடாது.

தொடர்ச்சி 8ம் பக்கம்

# சம்பள வாசல்

— ஒடும்பிள்ளை

## இந்த எழுத்தாளருமா?

மலையக எழுத்தாளர்கள் ஏறக்குறைய எல்லோருமே மலையக மக்களின் பிரச்சினைகள் பற்றி எழுதுவார்கள். மக்கள் விரோத அரசியல்வாதிகளை நையாண்டி செய்து எழுதுவார்கள். ஆனால் நடைமுறையில் அதிகமான மலையக எழுத்தாளர்கள் அவர்களாலே நையாண்டி செய்யப்படும் அரசியல் தலைவர்களைச் சார்ந்தே இருப்பர்.

கொடிகள் பறக்கட்டும் என்று சிறுகதைதை எழுதியதன் மூலம் மல்லிகை சி. குமாரும் மிகவும் வெளிப்படையாக சமூக சீரழிவின் பக்கம் நிற்பதாகக் காட்டிக் கொண்டார். இக்கதை பெப்ரவரி 15,22 ஆகிய திகதிகளில் வீரகேசரி வாரமலரில் தொடர்ச்சியாக வெளிவந்தது.

அதில் அவர் மலையகத்து பம்மாத்து தலைகள் என்றாலும் பரவாயில்லை ஒரு கட்சியின் பின்னால் போகாமல் பல கட்சித் தலைவர்களையும் பிடித்து சிறிய சிறிய அபிவிருத்தி வேலைகளை மலையக மக்கள் செய்து கொள்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். அபிவிருத்தி வேலைகளை செய்து கொடுப்பவர்களுக்குத் தான் வாக்கு. ஒருவரிடம் பாலத்தைக் கட்டித்தரும்படி கேட்டுப் பெறலாம். இன்னொருவரிடம் வீதியைப் போடச் செய்யலாம். என்று மலையக அரசியல் தலைவர்களிடம் மக்கள் பெற்றுக்கொள்ளும் சிறிய சிறிய அபிவிருத்திகள் பற்றி பெருமிதமாகத் தனது கதையில் கூறுகிறார்.

மல்லிகை சி. குமாரிடம் ஒன்றைக் கேட்க வேண்டும். அதாவது அபிவிருத்தி வேலைகளை தனிப்பட்ட அரசியல் வாதிகள் செய்வதா அல்லது அரசாங்கம் செய்வதா? வாக்கையும் தொழிற்சங்க சந்தாவையும் மட்டும் நோக்காக கொண்டு செயற்படும் அரசியல் வாதிகளுக்கும், சமூக நீதியையும் மாற்றத்தையும் கொண்டு செயற்படும் மாற்று அரசியல்வாதிகளுக்கு இருக்கும் வேறுபாட்டை தற்போது காண மறுக்கிறாரா? மக்களின் வாக்குகளையும், சந்தாவையும் பெற்று மக்களை ஏமாற்றி வரும் அரசியல்வாதிகளுக்கு தண்டனை அவர்களை நிராகரிப்பது அல்லது அவர்களுக்க தண்டப்பணம் விதிப்பது போன்று சிறு சிறு அபிவிருத்திகளை செய்யும்படி வற்புறுத்துவதா. எத்தனை அரசியல்வாதிகள் தோட்டங்களுக்கு வந்தாலும் எத்தனை கட்சிக் கொடிகள் தோட்டங்களில் பறந்தாலும் நாம் சிறு சிறு அபிவிருத்திகளை பெற்றுக் கொண்டால் போதும் என்பது சரியென்றால் வாக்குப் போடுவதற்கு பணமும் சாராயமும் தரவேண்டும் என்பதும் சரியாகிவிடும்.

அரசியல் என்பது குறைந்த பட்சம் மக்கள் யாரையும் தங்கி நிற்காமல் அவர்களின் சொந்தக் கால்களில் நின்று அவர்களின் வாழ்க்கையை நடத்துவதற்கான சமத்துவமாக வளப்பங்கீடு உற்பத்தி விநியோகம் என்பவற்றையும் சமூகப்பாதுகாப்பு, சமூக நீதி என்பவற்றை உறுதிசெய்யும் ஜனநாயக வாழ்க்கையை நிலை நிறுத்துவதற்கான அரசு யந்திரத்தை நிலை நிறுத்துவதற்கான வழிமுறை என்பதை அவர் ஏற்றுக் கொள்ள வில்லையா?

தனிநபர்களிடம் அபிவிருத்திகளை பெற்றுக் கொள்வதென்பது தொடர்ந்தும் பணம் படைத்தவர்களினதும் பம்மாத்துப் பேர்வழிகளினதும் ஆதிக்கத்தை இன்னொரு வகையில் சகித்து கொள்வதற்கு பழகிக் கொள்வதாகும். இது இயலாமையின் உச்சம். வெகுஜன அரசியல் மாற்று அரசியல் என்பவற்றை நிலைநிறுத்துவதில் இருக்கும் சவால்களை முகம்கொள்வதற்கு முடியாமை ஆகும். மத்திய மாகாணசபை தேர்தல் நடைபெற்றகாலத்திலேயே மல்லிகை சி. குமாரின் கொடிகள் பறக்கட்டும் வெளிவந்துள்ளது. அவரின் பல முக்கியமான சிறுகதைகளை மீண்டும் வாசிக்க வேண்டுமென்றும் கவிதைகளை படிக்க வேண்டுமென்றும் பலரும் பேசிக் கொள்வதை அவர் தெரிந்திருக்க நியாயமில்லை. அவரை சமூக மாற்றத்திற்கான எழுத்தாளராக மாக்சிஸ லெனிசிச விமர்சகர்கள் ஆய்வு செய்திருப்பது அவருக்கு தெரியாதிருக்க நியாயமில்லை.

அவர்களை போன்ற எழுத்தாளர்கள் நையாண்டி செய்த அரசியல்வாதிகளை அவர்களே ஏற்றுக்கொண்டாலும் நீண்டகாலத்தில் அவர்களையும் அவர்களின் நையாண்டிக்குரிய கதாபாத்திரங்களையும் மக்கள் நிராகரிப்பார்கள். நிராகரிப்பதை தவிர மக்களின் விடிவிற்கான பாதை திறக்கப்பட முடியாது.

இதே போன்று இன்னொரு எழுத்தாளர் மு. சிவலிங்கம் (முன்னாள் செயலாளர் நாயகம் ம.ம.மு.). மாற்றுக் கருத்தையோ அரசியலையோ முன்வைத்து மத்திய மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவில்லையென்று தேர்தலுக்கு சிறிது காலத்திற்கு முன்பு அட்டனில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார். உடனே அக்கூட்டத்தில் கலந்து கொண்ட விரிவுரையாளர் ஒருவர் மாற்று அரசியல் வேலைத்திட்டமொன்றை முன்வைத்து புதிய ஜனநாயக கட்சி சுயேட்சையாக போட்டியிடவில்லை என்று நீங்கள் கூறுகிறீர்களா என்று கேட்க மு. சிவலிங்கம் கேட்ட கேள்விக்கு பதிலளிக்க முடியாது தடுமாறியுள்ளார். இதில் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் யாதெனில் புதிய ஜனநாயக கட்சித் தோழர்கள் ஒரு பரந்தப்பட்ட ஐக்கிய முன்ணனியின் தேர்தலில் போட்டியிடுவது குறித்தும் மு. சிவலிங்கத்திடமும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர் என்பதை அவர் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளவில்லை. அரசியல் பாதை, தலைமைத்துவம் வேலைத்திட்டம் போன்றவை பற்றிக் கதைக்கும் போதும் பொதுவாகவே மலையக எழுத்தாளர்கள் நேர்மையாக இருப்பதில்லை. இதில் மல்லிகை சி. குமார் போன்ற ஒரு சிலர் விதிவிலக்காக இருந்தனர். அதில் மல்லிகை சி. குமாரின் கொடிகள் பறக்கட்டும் கதையுடன் அவரும் பலவீனப்பட்டு போனதாகவே தெரிகிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
சுற்று 16 மார்ச் 2009 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 120
இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@gmail.com, web : www.ndpsl.org.

# கோரிக்கைகளும் நிராகரிப்புகளும்

வடக்கு நோக்கிய அரசாங்கத்தின் "மனிதாபிமான நடவடிக்கை எனப்படும்". இராணுவ நடவடிக்கைகள் கடந்த நவம்பர் மாதத்திலிருந்து மிகவும் வேகமாக நடைபெற்றுள்ளன. அதிலிருந்து இன்றுவரை ஏழுதடவைகள் யுத்தத்தை நிறுத்தும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவற்றை அரசாங்கம் நிராகரித்துள்ளதாகவும் சிங்கள நாளிதலொன்றில் செய்தி வெளியாகி இருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கும் மக்களை வெளியேற்றுவதற்கு த.வி.பு. இயக்கம் அனுமதிக்க வேண்டும் என்றே தமிழ் தேசியவாதிகள் அதிகமாக நம்பும் இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் கேட்டுக்கொண்டுள்ளன. த.வி.பு. இயக்கம் பயங்கரவாதத்தை கைவிட்டு ஆயுதங்களை கைவிட வேண்டும் என்றும் அரசாங்கம் யுத்தத்தை நிறுத்தி த.வி.பு. இயக்கத்துடன் பேச வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தியாவின் பிந்திய அறிக்கையின்படி யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு அரசாங்கமும் த.வி.பு. இய்க்கமும் அரசியல் தீர்வு பற்றி பேச வேண்டும் என்று கேட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

த.வி.பு. இயக்கம் பயங்கரவாதத்தை கைவிட்டு ஆயுதங்களை கீழே வைத்துவிட்டால் யுத்த நிறுத்தம் பற்றி பேசத் தேவையில்லை என்று கூறி அழுத்தம் திருத்தமாக யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தியும் அரசியல் தீர்வை வலியுறுத்தியும் தமிழகத்தில் இடையறாத போராட்டங்கள் நடைபெறுகின்றன. தீக்குளிப்புக்கள் அதிகரித்தவாறிருக்கிறன. புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மாகாண சபைக்கான தேர்தலை வடக்கிலும் நடத்தி மாகாண சபைகளை நடைமுறையில் இயங்க வைப்பதுதான் அரசாங்கத்தின் ஒரே முடிவு. அதாவது 22 வருடங்களுக்கு முன்பு இலங்கை மீது இந்தியா திணித்த (தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளாத) மாகாண சபைகளை அமுல் படுத்தி ஒற்றையாட்சியின் கீழ் இலங்கையின் எல்லா நிலப்பரப்பையும் இலங்கை அரசாட்சிக்குட்படுத்துவதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விருப்பமாகும்

13 வது திருத்த சட்டத்தினை பூரணமாக அமுல்படுத்துவதாகக் கூறியபோதும் கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் கோரிக்கை விடுத்த போதும் வரையறுக்கப்பட்ட ஆனால் சட்டத்தில் இருக்கும் காணி அதிகாரத்தையும் பொலிஸ் அதிகாரம் போன்றவையும் மாகாணசபைக்கு வழங்கப்படமாட்டாது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதிலிருந்து விளங்கிக் கொள்ளப்படவேண்டியது யாதெனில் குறைந்த பட்ச சுயாட்சியைக்கூட உறுதிசெய்யக்கூடிய எந்தவொரு (புதிய) அரசியல் தீர்விற்கும் அரசாங்கம் தயாராக இல்லை என்பதாகும். வடக்கு கிழக்கு இணைந்த கூட்டாட்சிக்கு கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் மாவட்ட சபைகள் மாகாணசபைகளுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட நிலையில் பண்டா - செல்வாடட்லி - செல்வா இணக்கப்பாடுகளும் நிராகரிக்கப்பட்டன. அதற்குப் பின்னரான தொடர்ச்சியான கோரிக்கைகளின் உயர்ந்த பட்சமாக 1976 வட்டுக்கோட்டையில் தனித் தமிழீழம் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதன் பின்னர் ஆயுதப் பேராட்டங்கள் நடைபெற்று 2002 ஆம் ஆண்டு சமாதான நடவடிக்கைகளின் போது த.வி.பு. இயக்கம் உள்ளக சுயநிர்ணய உரிமை என்பதைக் கோரிய போது இப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட்டாட்சிக்கு இணக்கம் தெரிவித்திருந்தார். பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெற்ற போது ஐ.தே. கட்சிக்கு அரசாங்கத்தை அமைக்கக்கூடிய பெரும்பான்மை கிடைக்கவில்லை. நோர்வே தலையீட்டுடனான சமாதான நடவடிக்கைகள் மிக வேகமாகப் பின்னடைந்தன. 2006 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான பிறகு யுத்த முனைப்புகள் தீவிரமடைந்தன.

இச் சூழலில் அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகள் முன்னேற்றமடைந்தன. இருப்பினும் பதவியேற்ற ஒரு சில மாதங்களில் ஆனந்தசங்கரியும் டக்ளஸ் தேவானந்தாவும் முன்வைக்கும் அரசியல் தீர்வையாவது கவனத்தில் எடுக்க வேண்டு மென்று கூறி இருந்த மகிந்த ராஜபக்ஷ இன்று மாகாணசபைகளுக்கு மேல் எதுவுமில்லை என்று கூறுபவராகவே இருக்கிறார்.

எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சியும் கூட அதன் முன்னைய நிலைப்பாடான கூட்டாட்சியினூடாக அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று கூறுவதாக இல்லை. மாறாக அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளின் முன்னேற்றத்தில் பங்கு கேட்டே நிற்கிறது. அரசாங்க இடதுசாரிக் கட்சிகளோ தமிழ்க் கட்சிகளோ இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வு பற்றி பேசுவதாக இல்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளில் ஏற்படும் உயிரிழப்புக்கள், படுகாயங்களிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான கோரிக்கைகள் வந்துள்ள போதும் மக்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்பதையே அரசாங்கம் கூறிவருகிறது.

தமிழ்த் தேசிய இனம் எந்தக் கோரிக்கையை விடுத்தாலும் இலங்கையின் பேரினவாத முதலாளித்துவ அரசாங்கங்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ நிராகரித்தே வந்துள்ளன. அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகள் உச்சத்தில் இருக்கின்ற இவ்வேளையிலும் மக்களை பாதுகாப்பதற்கான கோரிக்கையையோ குறைந்த பட்ச சுயாட்சியை உறுதி செய்யும் அரசியல் தீர்வையோ முன்வைக்கவோ தயாரில்லை. மீண்டும் தமிழ் மக்கள் 1930,1940 ஆண்டுகளில் இருந்த நிலைக்கு விடப்படுகின்றனரோ என்றே எண்ணத் தோன்றுகின்றது. எங்கே கொண்டுபோய் விட்டாலும் கடந்த கால அனுபவங்களையும் பட்டறிவையும் தொகுத்து எதிர்காலத்திற்கான சரியான இலக்கு, பயணம், மூலோபாயம், தந்திரோபாயம் என்பவற்றை வகுத்துக் கொண்டு மக்கள் மீண்டும் எழுந்து நடப்பார்கள் என்ற நம்பிக்கை எழ வேண்டும்.

ஆசிரியர் குழு

# யுத்த அழிவும் தேர்தல் வெற்றியும்.

வெகுஜனன்

"பயங்கரவாதத்தை ஒழிக்க யுத்தமும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வும்" என்பதே மகிந்த சிந்தனை அரசின் கடந்த மூன்றாண்டு கால கொள்கை முன்னெடுப்பதாக இருந்து வந்துள்ளது. ஆனால் இவ் விரண்டில் யுத்தம் மட்டுமே தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. அரசியல் தீர்வு என்பது வெறும் போக்கு காட்டுதலாக அவ்வப்போது கூறப்பட்டு வருகிறது. இனப்பிரச்சினையின் தீர்வுக்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகளின் குழு (APRC) என்பது பல தடவைகள் கூடிக் கலைந்துள்ளது. அதன் தலைவராக இருந்து வரும் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண வெறும் காட்சிப்படுத்தலுக்கு உரியவராக மட்டுமே இருந்து வருகிறார். அவர் பழைய இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பாக அரசாங்கத்தில் பதவி பெற்றவர். மற்றொரு இடதுசாரி அமைச்சர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த டியு குனசேகரா ஆவார். இத்தகையவர்களுக்கு மகிந்த சிந்தனை அரசாங்கத்தில் சொல்வதை மட்டும் செய்யும் பணி மட்டுமே உண்டு அதற்கு அப்பால் வாய் திறக்கும் துணிவு இல்லை. இருக்கும் வரை அமைச்சர் பதவி கிடைப்பதே பெரும் புண்ணியம் என வாழும் இடதுசாரி எனப்பட்டவர்களில் ஒருவர் தான் இவ் அமைச்சர். ஒரு முறை இந்த அமைச்சர் தனது வாய் திறக்காத நிலையைத் தாண்டி இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சில பரிந்துரைகளை ஆவணமாக ஜனாதிபதியிடம் கையளித்தபோது ஜனாதிபதி அதனை கடும் கோபத்துடன் நிராகரித்தமையும் ஏற்கனவே இடம் பெற்ற சம்பவமாகும். இத்தகைய லட்சணத்தில் தான் அரசியல் தீர்வு என்ற நிலை இருந்து வருகிறது. இந்நிலையின் இந்தியாவில் நெருக்குதலால் மேலதிகமாக ஒரு குழுவை நியமித்து காணி பொலிஸ் அதிகாரம் உட்பட் 13வது திருத்தத்திற்கு திருத்தம் செய்ய ஆலோசித்து வரப்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

அதே வேளை யுத்தம் வேகமாக மட்டுமன்றி மிகவும் கொடூரமாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கிழக்கை மீட்டெடுத்த பின்பு வடக்கு நோக்கிய யுத்தம் வன்னியை மீட்கும் மனிதாபிமானப் பணி என்றும் அங்குள்ள மக்களைப் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து விடுவிப்பதென்றும் விளக்கம் அளிக்கப்படுகிறது. இதன் அடிப்படையிலேயே யுத்தம் இறுதி நிலையை அடைந்துள்ளதுடன் அது புதுக்குடியிருப்பில் மையம் கொண்டுள்ளது. புதுக்குடியிருப்பின் சிறிய நிலப்பரப்பிற்குள் புலிகள் இயக்கம் முடக்கப்பட்டு அதன் போரிடும் ஆற்றல் தாழ் நிலைக்கு கொண்டு வரப்பட்டது. அதேவேளை அப் பிரதேசத்தில் சுமார் ஒன்றரை லட்சம் (சரியான எண்ணிக்கை அறிய முடியவில்லை. இரு தரப்பும் தத்தமது பிரச்சாரத்திற்கு ஏற்றளவான தொகையைக் கூறிவருகின்றனர்.) மக்கள் இருப்பதாக நம்பப்படுகிறது. அவ்வாறான மக்கள் நாளாந்தம் இடம் பெறும் தாக்குதல்களால் இறந்து கொண்டிருக்கின்றனர். படுகாயங்கள் பட்டவண்ணம் இருக்கின்றனர் அதேவேளை உணவு உடை இருப்பிடம் மருந்து - மருத்துவம் இன்றி மக்கள் தாங்கமுடியாத துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவித்து வருகின்றனர். வரலாறு காணாத கொடூரங்களை கண்ணெதிரே கண்டு அனுபவித்து வரும் மக்களாகவே புதுக்குடியிருப்பிற்குள் சிக்கியுள்ள மக்கள் இருந்து வருகிறார்கள். அரசாங்கம் தனது கடும் தாக்குதல்களை நிறுத்தத் தயாராக இல்லை. புலிகள் இயக்கமும் அங்குள்ள மக்களை சுதந்திரமாக வெளியேறவும் அனுமதிக்கவில்லை. மீறிய நிலையில் வெளியேறிய மக்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு சிலர் இறந்தும் படுகாயங்கள் பட்டும் உள்ளனர். மக்களைப் பலவந்தமாக தம்முடன் வைத்திருப்பது சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்கு விரோதமானது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதிலும் புலிகள் இயக்கம் அதனைக் கவனத்தில் கொள்வதாக இல்லை. இந்தியாவிலிருந்தும் சர்வதேச சமூகத்திடமிருந்தும் ஏதாவது அழுத்தம் ஏற்பட்டு யுத்த நிறுத்தம் வருவதையும் அவ்வாறு வரும் கட்டத்தில் தமது இருப்பை உறுதிப்படுத்துவதற்கு சிறு பிரதேசமும் மக்களும் தேவை என்ற அடிப்படையிலேயே அவர்கள் மக்களை வெளியே விட மறுத்து வருகிறார்கள். அத்துடன் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் இம் மக்களின் இருப்பு அவசியமாகிறது. இந்நிலையில் மனிதாபிமான யுத்தத்தை முன்னெடுப்பதாகக் கூறும் அரசாங்கம் தாங்கள் மக்களைப் பாதுகாத்த வண்ணமே யுத்தத்தில் முன்னேறி வருவதாகக் கூறி வருகிறது. தரை ஆகாயம் கடல் என்ற மூன்று நிலைத் தாக்குதல்களாலும் மக்கள் அழிவுற்று வருவதையே நாளாந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன. காயப்பட்டு திருகோணமலைக்கு அழைத்து வரப்படும் மக்களின் நிலைமைகளை அவதானிக்கும் போது யுத்தத்தின் கொடூரங்கள் எத்தகையது என்பதை கண்டு கொள்ள முடிகிறது. இன்றைய புதுக்குடியிருப்பு யுத்தத்தில் அகப்பட்டுள்ள ஒன்றரை லட்சம் மக்களுக்கு புலிகள் இயக்கமும் பொறுப்பில்லை. அரசாங்கமும் பொறுப்பில்லை என்றால் அம் மக்களின் நிலைக்கு யார் பொறுப்பு இத்தகைய நிலையைப் பயன்படுத்தவே அந்நிய சக்திகள் இயங்குகின்றன. இது அபாய கரமானதொன்றாகும்.




நன்றி டெய்லி மிரர்

இத்தகைய யுத்தத்தை ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் நன்கு விலைபோகக் கூடிய அரசியல் பண்டமாக்கியுள்ளது. யுத்த வெற்றி என்ற மயக்கத்தில் ஆழ்ந்திருக்கும் சிங்கள மக்களிடம் தேர்தல் வெற்றிக்கான வாக்குகளைப் பெறுவதில் அரசாங்கம் மும்முரம் காட்டி வருகிறது. ஏற்கனவே யுத்தத்தை விற்பனை செய்தே இது வரையான கிழக்கு, சப்பிரகமுவா வடமத்திய, வடமேல், மத்திய மாகாணசபைகளுக்கான தேர்தல்களில் அரசாங்கம் வெற்றி பெற்றுள்ளது. கிழக்கு மாகாணம் உட்பட அனைத்து மாகாணசபைத் தேர்தல்களிலும் ஐ.ம.சு. முன்னணியின் வெற்றிலைச் சின்ன த்திலேயே கூட்டாளிக் கட்சிகளையும் நிற்க வைத்தது. அரசாங்கம் இப்பொழுது மேல் மாகாண சபைத் தேர்தலிலும் அவ்வாறே செய்து ள்ளது. ஆனால் வடக்கில் எவ்வாறு நடந்துக் கொள்ளப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும. இவ் வெற்றிலைச் சின்னத்தில் அரசாங்கத்தில் பங்கு கொண்டுள்ள அனைவரையும் நிறகவைத்து கொள்வதன் நோக்கம் அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஒரே சின்னத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளும் உள்நோக்கம் கொண்ட செயற்பாடுமாகும். அதற்கு அப்பாலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.ஆர். ,சந் திரிகா போன்று இரண்டாவது தடவையும் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுக் கொள்வதற்கான தேர்தல் வியூகமும் இவ்யுத்தத்தின் பின்னால் வகுக்கப்பட்டிருப்பதையும் நோக்க முடிகிறது.

பயங்கரவாத எதிர்ப்பு யுத்தம் என்ற பேரில் தமிழ் மக்கள் மீது யுத்தத்தை நடாத்தி நாட்டின் ஒரு பகுதி மக்களை அழிவுகளுக்கு உள்ளாக்கி அதன் மூலமான ராணுவ வெற்றியை நாட்டின் மற்றொரு பகுதி மக்களான சிங்கள மக்களுக்கு மாபெரும் சாதனையாக் காட்டி ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்து வருவதையும் காண முடிகிறது. அதே வேளை இவ் யுத்த வெற்றி என்பதன் ஊடாக தெற்கில் பூதாகரமாகி வரும் பொருளாதார நெருக்கடிகள் பிரச்சினைகள் திசைதிருப்பப்படுகின்றன. சம்பள உயர்வுக் கோரிக்கைகள் மறுக்கப்படுவதற்கும் விலை உயர்வுகள் கட்டண அதிகரிப்புகள் இதே யுத்தத்தின் மறைவில் கொண்டுவரப்படுகின்றன. தேர்தல் வெற்றி என்பதன் பின்னால் சிங்கள மக்களும் முஸ்லிம் மக்களும் ஏமாற்றப்படுகின்றனர். தேர்தல் வெற்றிக்காக ராணுவ வெற்றி வீதிக்கு வீதி காட்சிப்படுத்தப்படுகிறது. ராணுவ வீரர்கள் நவீன ஆயுதங்களுடன் நிற்க அவற்றின் மத்தியில் ஜனாதிபதி முதல் தேர்தல் வேட்பாளர்கள் வரை குதூகலத்துடன் நிற்கின்ற பெரிய கட்டவுட்டுக்கள் முக்கிய சந்திகளில் வைக்கப்பட்டுள்ளன. ராணுவ மயப்படுத்தல் என்பது தேர்தல் ஊடாக மக்கள் மனங்களில் பதிய வைக்கப்படுகின்றது. இதன் எதிர்கால அபாயம் பற்றி சாதாரண மக்கள் அறிய வாய்ப்பில்லை என்பது கான் சோகமானதாகும். ஆனால் இதே ராணுவ மயம் சிங்கள மக்களுக்கு எதிராகத் திரும்பும் போது தான் நடைமுறையில் அனுபவிக்க முடியும். ஏற்கனவே அதற்கான பட்டறிவுகள் சிங்கள மக்களிடம் இருந்த போதிலும் இன்றைய சூழலில் அதனைத் திரும்பிப் பார்க்க முடியாதவாறு பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தை ஆழ்ந்து நோக்கின் தமிழ்த் தேசிய இனத்திற்கும் ஏனைய தேசிய இனங்களுக்கும் எதிரான ஒன்று என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அந்த யுத்தம் அடிப்படையில் உழைக்கும் மக்கள் அனைவருக்கும் எதிரான யுத்தமும் ஆகும். உழைக்கும் மக்கள் பெருந்திரள் வர்க்க அடிப்ப டையில் சிந்திப்பதையம் அணிதிரள்வதையும் தடுத்து சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழர் என்ற நான்கு தனித்தனிக் கூறு களுக்குள் பிரித்து வைத்து ஒன்றுக்கு எதிராக மற்றதைப் பகைமைப் படுத்தி வந்த பிரித்தாளும் சூழ்ச்சியே இவ் யுத்தத்தால் சாதிக்கப்பட்டுள்ளது. இதனை பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் அவர்களது அந்நியக் கூட்டாளிகளும் கச்சிதமாக முன்னெடுத்து வந்துள்ளனர். இதற்கு எதிர்மறையான ஒத்துழைப்பை தமிழ் தரப்புக்களும் முஸ்லீம் மலையகத்தமிழ் தலைமைகளும் வழங்கி வந்துள்ளனர். இவற்றை உணர்ந்து உழைக்கும் மக்கள் தமக்கான வர்க்க வழங்கி வந்துள்ளனர். இவற்றை உணர்ந்து உழைக்கும் மக்கள் தமக்கான வர்க்க அரசியலை விளங்கிக் கொண்டு செயல் பட முன்வருவதே இன்றைய தேவையாகும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# ஈழத் தமிழரின் பேரில் தீக் குளிப்பு அரசியல்

காவிய மரபில் அதிகம் புகழ் பெற்றது சீதையின் அக்கினிப் பிரவேசம். தனது கற்பை நிரூபிக்கத் தீக்குளிக்குமாறு ராமனாற் பணிக்கப்பட்ட சீதையின் அக்கினிப் பிரவேசம் பிற்காலப் படைப்பாளிகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. எனினும் 18ம் நூற்றாண்டு முடிவில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 1948ல் இந்தியா முழுவதும் சட்ட விரோதமாக்கப்பட்டட பின்னரும் 20 ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கணவனை இழந்த பெண்கள் பலர் கட்டாயமாகத் தீக்குட் தள்ளப்பட்டுள்ளனர். இன்னமும் அரிதாக முயற்சிகள் நடைபெறுகின்றன. இப்போது தமிழ் நாட்டிலும் மேற்கிலும் தமிழர் இன்னமும் ஈழத்தமிழருக்காகத் தீக்குளிக்கின்றனர். அதன் பயனையும் பெறுமதியையும் நாம் சிந்தித்து சில முடிவுகட்கு வரவேண்டியுள்ளது. தீக்குளிப்பிற்கும் சாகும் வரை உண்ணாவிரதத்திற்கும் உள்ள முக்கிய வேறுபாடு முன்னதில் சாவு பெரும்பாலும் நிச்சயம் பின்னதில் அது பெரும்பாலும் அசாத்தியம் என்பதுதான். இரண்டிலும் தனிமனிதர்கள் தம்மை வருத்திக் கொள்வது மூலம் மற்றவர்களைத் தமது கோரிக்கைக்குச் செவிசாய்க்கவோ இணங்கவோ வற்புறுத்துகின்றனர். இவ்வாறான சாவுகள் சமூக கொந்தளிப்பை ஏற்படுத்திய சூழ்நிலைகள் பல. தமிழர் விடுதலை போராட்டத்தில் உண்ணாவிரதம் சாவுகள் சில பற்றியும் அவற்றின் பின் விளைவுகள் பற்றியும் அறிவோம். அந்தச் சாவுகளும் தடுப்புக் காவலில் நஞ்சருந்தி இறந்த நிகழ்வுகளும் தவிர்ந்திருக்க கூடியவை அவற்றைப் பற்றி ஒருவித அக்கறையுங் காட்டாததும் அவற்றுக்கு காரணமாய் இருந்துமான இந்திய அரசை தீக்குளிப்புக்கள் திருத்துமா என்பதில் எனக்கு ஐயம் மிகுதி.

நவீன உலக வரலாற்றில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்திய தீக்குளிப்பு அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களையும் அவர்களது கைப்பாவையான ஙோ டின் டியெமின் சர்வாதிகார ஆட்சியையும் எதிர்த்து தென்வியட்நாமில் ஒரு புத்த பிக்கு 1963 ஜுன் மாதம் 11ம் திகதி தீக்குளித்தமையாகும். அவரைப் பிற பிக்குமார் பின்பற்றினர். அது டியெம் ஆட்சியின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்தியது. ஆனால் தென் வியட்நாமில் அமெரிக்க ஆக்கிரமிப்பையும் இன்னொரு சர்வாதிகாரியாக யென் வான் தியூ வருவதையும் தடுக்கப் போதுமானதாக இருக்கவில்லை. எவ்வாறாயினும் அதற்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் இருந்தது. ஆனால் அதன் பிறகு வியட்நாமில் தீக்குளிப்பு எதுவும் நடக்கவுமில்லை. கம்யூனிஸ்ற்றுக்களோ வியட்நாம் விடுதலை இயக்கமோ அதை என்றுமே ஊக்குவிக்கவுமில்லை.

உடன் கட்டை ஏறுவதை சட்டவிரோதமாக்கியது இந்தியாவிற் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. 1990ல் மண்டல் ஆணைக்குழு பிற்படுத்தப்பட்டோருக்குக் கல்வி தொழிற் சார்ந்த சலுகைகள் வழங்குவதைப் பரிந்துரைத்தது. அதை வி.பி. சிங் ஆட்சி நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்த போது அதை எதிர்த்து ஒரு பிராமண இளைஞன் தீக்குளித்து இறந்தான். சமூக நீதியை எதிர்த்த அந்தக் தீக்குளிப்புக்குக் கைமேற் பலன் கிட்டியது. மண்டல் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கிடப்பிற் போடப்பட்டன.

அதற்குப் பின்பு அரசியல் முக்கியத்துவம் பெற்றது இலங்கையில் போர்நிறுத்தத்தை வேண்டித் தமிழகத்தில் கடந்த முதலாவது தீக்குளிப்பாகும். முத்துக்குமாரின் தீக்குளிப்பிற்குப் பிந்தியவை அரசியற் பெறுமதியிற் குறைந்து விட்டதோடு அவரது தீக்குளிப்பின் தாக்கத்தையும் ஓரளவு மழுங்கடித்து விட்டன எனலாம். இலங்கைத் தமிழருக்கான எந்தத் தீக்குளிப்பையும் இந்திய மத்திய அரசாங்கம் ஒரு பொருட்டாகக் கொண்டதாகத் தெரியவில்லை ஏனெனில் இவற்றில் எதுவும் உயர் சாதி மேல் தட்டு வர்க்க நலன்கட்கு ஆதரவான தீக்குளிப்பல்லவே! தமிழக அரசும் தீக்குளிப்புக்களால் மனந்திருந்தவில்லை.

இத் தீக்குளிப்புக்கள் குறுகிய காலத்தில் பரபரப்பையும் தி.மு.க. என்ற தில்லு முல்லுக் கழகத் தலைமைக்குச் சிறிது சங்கடத்தையும் ஏற்படுத்தியிருக்கலாம். ஒரு காங்கிரஸ் காரரின் தீக்குளிப்பு தமிழகக் காங்கிரஸ் வட்டங்களில் சிறிது சலசலப்பை ஏற்படுத்தியது. அவற்றின் மேலாக தமிழக அரசியல் அயோக்கியர்களது மனச் சாட்சியை உறுத்துவதனால் முதலில் அவர்கட்கு மனச் சாட்சியல்லவா இருக்க வேண்டும்! எனவே தான் இந்த உயிரிழப்புக்கள் வீணாணவையாகின்றன. தீக்குளித்தவர்கள் நல்ல நோக்கங் கொண்டவர்கள். அவர்களது உயிர்கள் பெறுமதி மிக்கவை. அவை ஒரு வீணர் கூட்டத்தை அம்பலப்படுத்துவதற்காக விதைக்கக் கூடியதிலும் மேலான பெறுமதியுடையவை. எனவே தான் அவை நிறுத்தப்பட வேண்டியவையாகின்றன.

கருணாநிதி குடும்பத்தின் ஒட்டுமொத்தமான கயமையை தமிழகம் அறிய வேண்டும். அதற்கான ஒரு அரசியல் இயக்கம் தேவை. கருணாநிதியும் ஜெயலலிதாவும் மட்டுமன்றி மற்றத் தமிழ்த் தேசியவாதிகளதும் போலி வேடங்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டும். கருணாநிதியின் வீழ்ச்சியோ ஜெயலலிதாவின் வீழ்ச்சியோ இன்னொரு திருட்டுக் கும்பலின் எழுச்சிக்கு உதவியாக இல்லாத விதமாகத் தமிழகத்தின் அரசியலை நெறிப்படுத்த இன்றைய எதிர்ப்பியக்கத்தை எப்படி வளர்த்தெடுப்பது என்பதில் அக்கறை செலுத்தப்படவேண்டும். தீக்குளிப்புக்கள் உணர்ச்சி அரசியலைத் தூண்டிவிடுகிற அளவுக்கு ஆழமான சிந்தனையையும் செயற்பாட்டையும் தூண்டிவிடுவன அல்ல. அதனாலேயே அவற்றுக்கு மாற்று வழிகள் தேவைப்படுகின்றன.

அதே நேரம் தீக்குளிப்புக்களை அவசியமாக்கியவை எவை என்பதில் அவற்றின் நோக்கங்களுக்கும் அப்பால் தமிழகத்தில் நடந்து வந்த எதிர்ப்பியக்கங்களின் போலித்தனங்களும் உள்ளடங்கும். உண்ணாவிரதங்கள் என்பன எப்படி முடிகின்றன என்பது இன்று எல்லாரும் அறிந்த விடயம். மோகனதாஸ் காந்தி தனது செல்வாக்கின் மூலம் சாதிக்க இயலாததை உண்ணாவிரதம் என்ற ஆன்மிக மிரட்டல் மூலம் சாதிக்க முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார். அதன் பிறகு பொட்டி ஸ்ரீராமுலுவின் உண்ணாவிரதச் சாவு ஆந்திரா மாநிலத்தின் பிறப்புக்கு வழி செய்தது. அதன் பின்பு உண்ணாவிரதங்கள் பெருமளவுக்கும் நாடகங்களாகி விட்டன. இவ்வாறே வெகுசன எழுச்சிகளை "மனிதச் சங்கிலிப் போராட்டம்" போன்ற வீதி நாடகங்கள் மூலம் திசைத்திருப்புவதில் கருணாநிதி ஆட்சி குறுகிய கால வெற்றியீட்டியது. இவற்றின் விளைவான ஏமாற்றமும் கோபமுமே முதலாவது தீக்குளிப்புக்குக் காரணமாயிற்று எனலாம். அடுத்து நடந்தவை அதற்கான ஆமோதிப்புக்கள் என்பதற்கு மேலாகப் பெறுமதியுடையவை அல்ல.

முதலாவது சாவு உடனடியாக எந்த விளைபயனையும் தராத போது ஏன் வீணாக நல்ல மனிதர்கள் தம்மை மாய்த்துக் கொள்ள வேண்டும். முழுத் தமிழகம் முழுவதுமே தீக்குளித்து அழிந்தாலும் தங்களது சொத்துச் சேகரிப்புக்கும் பகற் கொள்ளைக்கும் பங்கமில்லாத வரை இந்தியாவினதும் தமிழகத்தினதும் ஊழல் அரசியற் குடும்பங்கள் கவலைப்படப் போவதில்லை. அத்தகைய கூட்டத்திற்காக யாரும் ஏன் தங்களது அரிய உயிர்களை வீணே அழித்துக் கொள்ள வேண்டும்.

இதுவரை நடந்த வீணான உயிரிழப்புகளுக்குத் தமிழக அரசியல் தலை மைகளின் ஏமாற்று நாடகங்களே உண்மையான காரணங்கள். அவை பற்றி மக்களிடையே தெளிவாக எடுத்துக் கூறப்பட வேண்டும். தேர்தல் கூட்டணிகளுக்காக ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு நிலைப்பாட்டை எடுப்பதும் தருணத்துக்கமைய அதை மாற்றுவதும் புதியதல்ல. தமிழக மக்களின் எதிர்ப்பு தமிழக அரசியல் வியாபாரிகளின் ஆதிக்கத்திலிருந்து முற்றாக விடுபட வேண்டும். அதன் பார்வை இந்திய மண்ணில் நிகழுகிற சகல சமூக ஒடுக்குமுறைகளின் மீதும் விழவேண்டும். அந்தப் பார்வைத் தீயில் தமிழகத்தின் வோட்டுப் பெட்டி அரசியல் வெந்து சாம்பலாக வேண்டும்.

-ம.தமிழன்-

# அன்புள்ள தோழருக்கு

## தோழமையுடன் செண்பகன் எழுதும் மடல்

கடந்த மடல்களில் இயங்குதல் உண்மையை காண்பது; பொதுமையறப்பண்பு நன்மை தருவது; மௌனப் பண்பாட்டைக் களையும் வெகுஜன வேலை மகிழ்வூட்டுவது என்பவற்றைக் கலந்து உறவாடினோம்.

இப் பெறுமானங்களை உய்த்துணருவதற்கும் உருப்படியான உண்மைகளைத் தெளிவதற்கும் தனி நபராகத் தனித்து இயங்குதல் உதவாது. நன்மை வளருவதற்குப் பதிலாக இறுமாப்பு ஓங்கும். மகிழ்ச்சி பாழாகி வெற்றுப் புகழ்ச்சி எக்காளமிடும்.

கூட்டு வாழ்வு, கூட்டு வேலை, கூடிப்படிப்பு, கூட்டு உழைப்பு, திட்டமிட்ட முன்னெடுப்பு என்பன மனிதரை உயர்த்தும். மனிதரைத் தனியன்களாகச் சிதைத்தமை முதலாளியம் செய்த சதி. அன்பு, காதல், கருணை, இரக்கம், தியாகம், அர்ப்பணிப்பு ஆகிய பல உயர்ந்த மனிதப் பெறுமானங்களை தனிமனிதர், குடும்பம், உறவினர் என்போரிடம் மட்டும் சிறைப்படுத்தியது வர்க்கபேதம் செய்த சதியின் விளைவாக முதலாளியம் அதன் முழுப் பயன்களையும் அறுவடை செய்கின்றது.

அகமும் புறமும், வீடும் வெளியும், காதலும் வீரமும் எனப் பிரித்து மானுட விழுமியங்களை வேலியடைத்துச் சிறைப்படுத்திய அவலம் ஆதிக்க சமுதாயச் சூழ்ச்சியின் வெளிப்பாடு. அன்பு அகத்துக்குரியது, காதல் பாசம், உறவு குடும்பத்துக்குரியன. பண்பும் வீரமும் புறத்துக்குரியன. அச்சம், மடம், நாணம், கற்பு, அழுகை பெண்ணுக்குரியன. வீரம், விவேகம், கோபம், துணிவு ஆணுக்குரியன. என்ன அநியாயம்! யார் செய்த கொடுமை! வரலாற்றை எழுதியோரும் கலை இலக்கிய உரைகாரரும் மதப் பிரசங்கிகளும் பேரரசுகளின் ஆதிக்க நிலைகளை வலுப்படுத்தச் செய்த சில்லறைச் சில்மியங்கள் இவை. அகத்தைச் சிறைப்படுத்தினால் புறத்தில் அணுவும் அசையாது. ஆளை அவரளவில் அமசடக்கி ஆக்கினால் அவரவர் தம்பாட்டில் தானுண்டு, தன்வேலையுண்டு என்று 'நல்ல மனிதராக' ஒதுங்கிவாழும் சுபாவம் பெற்றவராவர்.

மத ஆலயங்களும், மத நிறுவனங்களும் மொழி மூல அமைப்புகளும், கொலனிய அரசியல் அமைப்புகளும் எனப் பொதுமக்கள் பங்கு பெறும் இடங்கள் பொய்மை, ஏமாற்று, ஆதிக்கம் ஆகியவற்றின் உறைவிடங்களாகவும் கள்வர் குகைகளாகவும் சீரழிந்தும் கூட அவை நிலைபெற்று நிற்பதற்குக் காரணம்; மக்கள் தனியன்களாக உடைக்கபட்டு விரக்தி, வேதனை, துன்பம், தோல்வி, நோய் என்பவற்றின் ஊற்றுக்களாக உருமாற்றப்பட்ட வரலாற்றுச் சதியேயாகும். ஆதிக்க வரலாற்றுச் சகதியில் மூச்சுத்திணறியுள்ள மக்கள் ஒன்றுபடுவதன் மூலம் மட்டுமே விஸ்வரூபம் பெறமுடியும். மக்கள் ஒன்றுபடுவதற்கு மதமோ, மொழியோ, முதலாளியமோ வழிகாட்ட இயலாதன. அவை எமக்கு மத வெறியையும் மொழித் திமிரையும் அரசியல் அயோக்கியத்தையும் விதைத்து மீளமுடியா நவீனரக ஆயுத விற்பனையின் நுகர்வில் அள்ளுண்டு யுத்தப் பிரியர்களானதே மிச்சம். ஆதிக்க கருத்தியல் தளங்களிலிருந்து விட்டு விடுதலையாவதே எமக்குள்ள முதற் தெரிவாகும். அடுத்த கட்டமே ஆருடன் சேருவது. எதற்காகச் சேருவது, எதைச் செய்வது என்ற தேடலைத் தூண்டி எமக்குள்ளே தெளிவைத் தரும்.

இச் சந்தர்ப்பத்தில்தான் சமூக நீதிக்காகச் சமூகத்தை மாற்ற முனையும் மாக்ஸீயம் எங்கள் பார்வைக்குப் படுகிறது. மாக்ஸீய ஸ்தாபனம் ஒளி விளக்காகிறது. மாக்ஸீய கட்சிகளும் மாக்ஸீய வெகுஜன ஸ்தாபனங்களும் மக்கள் பங்கு பெறும் மக்களின் பொது உடைமகளாகி மக்கள் கட்சிகளாகவும் மக்கள் வெகுஜன ஸ்தாபனங்களாகவும் பர்ணமிக்கின்றன. அப்போது நான், எனது மனைவி, எனது பிள்ளை, எனது உறவினர் என்ற எனது, எனது, நான், நான் என்ற மாய விலங்குகள் வீழ்ந்து நொறுங்குகின்றன. நாம், எமது என்ற புதுமைப் பொலிவு எங்கள் உள்ளத்தில் ஊற்றெடுக்கின்றன. அப்போதுதான் மக்கள் மந்திர சக்தி வாய்க்கப் பெற்றவர்களாகச் சமூக மாற்றச் சக்திகளாகி வல்லமை பெறுவர். பழைமைச் சமூகத்தின் பல்லாயிரமாண்டுப் பழைய சுமைகளினுள்ளும் உலகமயமாதல் நுகர்வியச் சில்லுகளினுள்ளும் சிக்கியிருக்கும் நாம் சமூக மாற்றச் சக்திகளாக வலுப் பெறுவதற்குக் கட்சியின், வெகுஜன இயக்கத்தின் உறுப்பினராவது மட்டும் போதுமாகாது. பொது அமைப்பில் இயங்குவது, இயங்குவது, இயங்குவது மட்டுமே தெளிவைத் தரும். அதுவும் பொதுமையறப் பண்புடன் நடைமுறையில் செயலாற்றுவதே நன்மை விளக்கம் பெறும். மக்களுடன் இரண்டறக் கலப்பதே இன்பத்தைப் பெருக்கும். இதற்கு குறுக்கு வழிகள் கிடையாது. மத்தியதர வர்க்கத்தின் அவசரத்தன்மையும் அத்தீவிர முனைப்பும் மீண்டும் எம்மை விரக்தியினுள்ளும் தோல்வியினுள்ளும் மூழ்கடித்துவிடும்.

பல்லாயிரமாண்டுகளாக விரக்தியிலும், தோல்வியிலும், துன்பத்திலும் துவண்டு போயுள்ள மக்கள் மத்தியில் பொது அமைப்புகளின் உறுப்பினர்கள் மேலும் மேலும் குறுக்கு வழிகள் தேடி ஓடுவதும் குடும்பத்துக்குள் குவலயத்தைக் கண்டு குழிபறிப்பதும் பொதுமையறப் பண்பைக் கண்டு கொதிப்பதும் மாக்ஸீய ஊழியத்தின் விளைவல்ல. மத்தியதர வர்க்கக் குளறுபடிகளின் குவி மையமாகும். வரலாற்றில் தோல்வியில் துவளும் மக்களுக்குத் துணிவையும், தன்னம்பிக்கையையும், வெற்றியையும், மகிழ்ச்சியையும் வழங்கும் அட்சயபாத்திரமாக மாக்ஸீய பொது அமைப்புகள் மிளிர வேண்டும். துயர் பகிர் மரண வீடுகளாக மாக்ஸீய நிறுனங்கள் மாறுவதை தவிர்த்து உயர்நெறி நிலவும் இன்ப இல்லங்களாக உருமாற வேண்டும். இவ்வாறு உருமாற வேண்டுமெனில் 'தோழமை' என்ற சொல்லின் அன்பை, காதலை, கருணையை, இரக்கத்தை, தெளிவை, துணிவை, நம்பிக்கையை, போர்க்குணாம்சத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். பொய்யாயின்வெல்லாம் போயகல வேண்டும். பொது அமைப்பில் தோழமை உறவைத் துளிர்க்கச் செய்து நீரூற்ற வேண்டும். யதார்த்த நிலைமைகளைப் புரிந்து கொள்வதும் திறந்த மனதுடன் உரையாடல்களை மேற்கொள்வதும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதைத் தவிர்த்து விருப்பு வெறுப்புகளை விவாதிப்பதும் கருத்து மாறுபாடுகளைப் பயமின்றி முன்வைப்பதும் தவறெனில் தயக்கமின்றித் திருத்துவதும் பிழையெனில் ஒப்புக் கொள்வதும் பொதுஅமைப்புகளின் உள்ளே சுதந்திரமாக முரண்படுவதும் கருத்து மோதல்களை உருவாக்கிப் போரிடுவதும் மக்களின் பொது அமைப்புகள் உயிர்ப்புடன் இருப்பதற்கும் இயங்குவதற்கும் வழி வகுக்கும்.

பொது அமைப்பில் இணைந்து இயங்குவது அதிகார அரியணையில் அமர்ந்திருப்பதற்கல்ல. ஊழியம் செய்து உய்தற் பொருட்டே. பொது மக்களை பொதுமையறத்தின் பக்கம் சாய்த்துப் பொதுமைப் படுத்தும் தூண்டியாகவே மக்கள் ஸ்தாபனம் செயற்படும்.

பொதுமைப் பக்கம் சாய்ப்பது என்பது ஆர்வத்தோடு அமைப்பில் இயங்க முனைவோரை மேய்வதோ அல்லது அவர்களை மேய்ப்பதோ ஆகாது.

பொது அமைப்பில் ஆர்வத்துடன் ஈடுபடுவோரிடம் அவர்களின் ஆளுமையைச் சிதைக்கும் வகையில் உடல், பொருள், ஆவி அத்தனையையும் அபகரிப்பதாகப் பொது அமைப்பு ஆகிவிடக் கூடாது. அவ்வாறு சிலுவை சுமப்பது தனி நபர்களுக்குரியதல்ல. சகலரும் ஒன்றுபட்டுச் சுமப்பதே ஸ்தாபனம் என்ற ஒன்றிணைவின் வெற்றியும் மகிழ்ச்சியுமாகும். தனிநபர் உற்சாக மிகுதியில் தனித்துச் சுமப்பது ஒற்றுமையின் அர்த்தத்தையே கேள்விக்குட்படுத்திவிடும். சுமைதாங்கியாக ஸ்தாபனம் இருக்க வேண்டுமே தவிர ஒருசில தனிநபர்களல்ல. இதன் அர்த்தம் தனி நபர்கள் தமது பொறுப்புக்களை விட்டுக் களருவதல்ல. மாறாக ஒன்றிணைந்து உழைப்பதன் மகிழ்வை எல்லோரும் பகிர்வதாகும். ஸ்தாபனத்தின் வெற்றி தனிநபர்களின் வெற்றி மாத்திரமல்ல. எல்லோரின் வெற்றியாகவே அமை கிறது.

எல்லோரும் ஒன்றிணைந்து இயங்கும் போது எங்கள் ஒவ்வொருவரினதும் உழைப்பு ஒருமுகமாகிறது. ஆறுமுகங்கள், பத்து முகங்கள் ஒன்றிணைவது போல் ஆயிரம் முகங்களும் பல்லாயிரங் கரங்களும் ஒன்று சேர்கின்றன.

ஒவ்வொரு தோழர்களும் தத்தமது வேலைகளைப் பொறுப்பெடுத்துச் செயற்படுகையில் தலைமைப் பாத்திரம் வகிப்பர். தலைமைத்துவம் என்பது பணியாற்றுகையில் பலரின் ஆற்றல்களையும் ஒன்றிணைப்பதாகும். தானே தனியனாக எல்லாக் கருமங்களையும் ஆற்றுவதல்ல. நானே எழுதி நானே நடித்து நானே ரசிப்பதல்ல. ஆற்றல் வாய்த்தோரை ஆய்ந்து அறிந்து அவர்களை உற்சாகப்படுத்தி அணைத்து ஒத்திகைகள் செய்து அரங்கேற்றுவது ஆகும். எடுத்த விடயத்தின் அரங்க நிகழ்வு அல்லது நிறைவுச் செயற்பாட்டின் வெற்றி தோல்வியை மட்டும் கணக்கெடுப்பதை விடுத்து அன்றாடச் செயற்பாட்டின் போது நாம் ஒன்றுகூடி ஆற்றல்களைக் குவிப்பதில் மகிழ்வதாகும். அதன் விளைவே வெற்றியாகும். மகிழ்வை கெடுத்து வெற்றியைக் காண்பது அதிகாரத்துவமாகுமே தவிர மாக்ஸீய தலைமைத்துவப் பண்பாகாது.

ஒன்றுகூடி வேலை செய்யும் போது கிண்டல், நக்கல் அடிப்பது, ஒருவரைப்பற்றி மற்றவரிடம் குறை சொல்வது என்பன மத்தியதரவர்க்க சுபாவமாகும். நேருக்குநேர் முகத்துக்கு முகம் பேசுவது, கோபப்படுவது, விவாதிப்பது, மோதுவது பாட்டாளிவர்க்க குணாம்சமாகும். மறைவாகப் பேசுவதும் மாற்று நிகழ்ச்சித்திட்டங்களைத் தமக்குள் வைத்திருப்பதும் இயலாமையின் - ஆளுமைக் குறைபாட்டின் - பழைமைப் பற்றின் மனப் போக்காகும்.

அன்புள்ள தோழருக்கு....

பாரதியுடனும் வள்ளுவருடனும் நிறைவு செய்கிறேன்.
'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு'
'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புரியர்
என்பும் உரியர் பிறற்கு'
'அறத்திற்கே அன்பு சார்பென்பர் அறியார்
மறத்திற்கும் அ∴தே துணை'

மறுமடலில் சிந்திப்போம்
தோழமையுடன்
செண்பகன

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# உலக மயமாதலின் கீழ் பெண்களின் நிலை

இன்றைய உலகில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளும் சவால்களும் மிகக் கடுமையானவைகளாகவே இருந்து வருகின்றன. நமது நாட்டை எடுத்து நோக்கின் வர்க்க இன சாதிய முரண்பாடுகளும் ஒடுக்கு முறைகளும் நிலவி வரும் இன்றைய சமூக அமைப்புச் சூழலில் நான்காவது அம்சமாக இருந்து வருவது பால் முரண்பாடும் ஒடுக்கு முறையுமாகும். பெண்கள் மீதான இவ் ஒடுக்கு முறை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் அன்றாட வாழ்வில் நிகழ்ந்து வருவதாகும்.

பெண்கள் மீதான ஒடுக்கு முறை என்பதனை விரித்து நோக்கின் பல்வேறு தளங்களில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளையும் அவற்றின் சமூகத் தாக்கங்களையும் காணலாம். நமது தென்னாசியச் சமூக அமைப்புச் சூழலைக் கவனிப்போருக்கு பல்வேறு நிலைப்பட்ட விடயங்களில் தெளிவும் கருத்தியல் நோக்கும் தேவைப்படுகிறது. ஏனெனில் நமது நாட்டுச் சூழல் உட்பட்ட தென்னாசியாவில் பெண்களது வாழ் நிலையை வழிநடாத்தும் கருத்தியல் சிந்தனை நடைமுறைகளாக நிலவுடைமைக் கண்ணோட்டமே முன்னுரிமை வகித்து நிற்கிறது. ஆணாதிக்க சிந்தனை என்பதும் மேற்படி நிலவுடைமைக் கருத்தியலின் வழிவந்த ஒன்றேயாகும். அதன் காரணமாகவே இன்றும் பெண்கள் ஆண்களை விடக் குறைவானவர்களாக கொள்ளப்பட்டு சமத்துவமின்மைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

பெண்களுக்கான சமவுரிமையை மதித்து ஆண் பெண் சமத்துவத்தை நிலை நிறுத்துவதில் பொருளாதார ஏற்றத் தாழ்வும் பண்பாட்டு வாழ்வியல் நடைமுறைகளும் பெருந் தடைகளாகின்றன. இத்தகைய தடைகள் நிலவுடைமை வழிவந்த கருத்தியல் சிந்தனை நடைமுறைகளின் நீடிப்பு என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். பெண்கள் பல்வேறு நிலைகளில் வெளிப்படையாகத் தெரியாத ஒடுக்குதல்களால் பிணைக்கப்பட்டுள்ளனர். இவர்களது இந்நிலையை சுமார் ஐந்நூறு ஆண்டு கால கொலனிய ஆட்சியமைப்பின் கீழும் பின்வந்த முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சியின் கீழும் மாற்றியமைக்க முடிய முடியவில்லை. வர்க்க ரீதியாக இருந்து வந்த ஒரு சமூக அமைப்பில் மேட்டுக் குடி உயர் வர்க்கத்தினரிடையே உள்ள பெண்கள் சொத்து சுகம் பெற்று சுகபோக வாழ்வில் திளைத்திருந்தனர். அவர்களிடையே இருந்து ஆளும் வர்க்க பெண் தலைவிகளும் உருவாகினர். அதேபோல் உயர் மத்தியத்தர வர்க்கப் பெண்களும் சில எல்லைகள் தாண்டாத சுதந்திரங்களையும் சமத்துவங்களையும் காண முடிந்தது. ஆனால் அதற்குக் கீழான ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் பெண்கள் பல்வேறு வகையான ஒடுக்கு முறைகளை அனுபவித்தவாறே வாழ்ந்து வருகின்றனர். இந்நிலை கொலனியத்திற்குப் பிந்திய நவகொலனியச் சூழலிலும் தொடர்ந்து வந்துள்ளது.



பெண்கள் மத்தியிலான சிறுதுளிகளான மாற்றங்களை வைத்து அவற்றை ஒட்டுமொத்த வகை மாதிரியாகக் காட்ட முற்படுவது முறையற்றதாகும்.

இன்றைய சமூக அமைப்பின் கீழ் பெண்கள் பொருளாதார அரசியல் பண்பாட்டுத் தளங்களில் மோசமான பாகுபாடுகள் புறக்கணிப்புகள் சமத்துவமின்மைகள் போன்றவற்றுக்கு உள்ளாக்கப்படுவதைக் காண முடியும். இதற்கு ஒட்டுமொத்த சமூக மாற்றம் அவசியமானதாகும். இதனைக் கொண்டு வருவதில் பெண்கள் தமது பங்களிப்பை ஆண்களோடு இணைந்து நின்று செயலாக்க வேண்டும். இதற்கான அறிவூட்டல்களும் சமூக மாற்ற அரசியல் மயப்படுத்தல்களும் பெண்களுக்கு அவசியமாகின்றன.

முன்பை விடப் பெண்கள் நவீனமான செயற்பாடுகள் மூலம் சமூகப் பார்வை சமூக அக்கறை சமூக மாற்ற அரசியல் போன்றவற்றிலிருந்து அந்நியப்படுத்தப் பட்டுள்ளனர். கடந்த கால் நூற்றாண்டுகால உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலானது நவ கொலனியத்தை வலுப்படுத்தி வந்துள்ளது. இதில் பெண்களது நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நமது நாட்டில் உலகமயமாதலின் கீழ் தனியார்மயம் தாராளமயம் என்பன முன்னுரிமை பெற்றதுடன் அவற்றின் மூலம் இலங்கை சொர்க்கத்திற்குள் நுழைய இருக்கிறது என்றும் காட்சிகள் காட்டப்பட்டன. உதாரணமாக பல்தேசியக் கம்பெனிகளின் வருகையால் சுதந்திர வர்த்தக வலையங்களில் பெண்கள் ஈர்க்கப்பட்டுள்ளனர். கிராமப்புறங்களில் இருந்து விவசாயிகளின் பிள்ளைகளான ஏழை இளம் பெண்கள் குறைந்த கூலிக்கு கூடிய நேரம் தொழில் செய்யும் கம்பனிக்ளின் நவீன கொத்தடிமைகளாக்கப்பட்டனர். நாட்டின் பல பாகங்களிலும் நகரங்களிலும் திறக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளில் குறைந்த சம்பளத்திற்கு இளம் பெண்களின் உழைப்பு சூறையாடப்பட்டது. அத்துடன் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாக்கப்பட்டனர். இதே போன்ற நிலை சகல அந்நிய உள்நாட்டு கம்பெனிகளில் பெண்களது உழைப்பும் வாழ்வும் உறுஞ்சப்பட்டு வருகின்றது.

திறந்த பொருளாதாரத்தின் மற்றொரு தளமாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு என்ற திறந்த வெளிச் சிறைசாலைகளில் நமது நாட் டுப் பெண்கள் சீரழிக்கப்பட்டு வருவதாகும். இதன் சோகக் கதைகளை நாம் தினம் தினம் கண்டு வருகின்றோம். மத்திய கிழக்கு நாடுகளில் அல்லலுறும் பெண்கள் ஒருபுறமாக உள்ள அதே வேளை ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் வேலை செய்வோரும் வதிவிட மாகக் கொண்டோருமான பெண்களின் நிலைமைகளும் வெளியே காட்டப்படுவது போன்றதாக இல்லை.

மேலும் இலங்கை ஒரு விவசாய நாடாகவும் தேயிலை றப்பர் உற்பத்தி செய்யும் தீவாகவும் இருந்து வருகிறது. இத்துறைகளில் வேலை செய்வோரில் பெண்களின் எண்ணிக்கை சரிக்குச் சமமாகவே காணப்படுகிறது. அவர்களது வருமானம் அடிப்படைத் தேவைகளுக்கும் அன்றாட வாழ்வுக்கும் போதுமானவையாக இல்லாத நிலை தான் காணப்படுகிறது. அதற்கு அப்பாலும் அன்றாட வாழ்வில் மலையகத் தொழிலாளர்களான பெண்கள் அடக்குமுறைகளை வீட்டிற்கு உள்ளும் வெளியிலும் அனுப விக்கின்றனர். மேலும் கடந்த கால் நூற்றாண்டுகால யுத்தம் உலகமயமாதல் தேவைகளை முன்னெடுத்ததுடன் குறிப்பாகப் பெண்களை மிக மோசமாகப் பாதித்துக் கொண்டது.



சிறையில் இருக்கும் தோழர் சுகேசனன் வரைந்த ஓவியம் 22/12/2007 10:17 P.M

இவற்றுக்கும் அப்பால் சமூக பண்பாட்டுத்தளத்தில் பெண்கள் நிலவுடைமைக் கருத்தியல் தொடர்ச்சிகளால் இரண்டாம் தர நிலையில் வைத்து நோக்கப்பட்டும் நடாத்தப்பட்டும் வருவது காணக் கூடியதாகும். பார்ப்பனியப் பழைமை வாதத்தின் பிடிப்பானது சடங்கு சம்பிரதாயங்கள் ஊடாகப் பெண்களைப் பண்பாட்டுச் சிறைக்குள் இருத்தியே வருகிறது. இதில் கேள்வி எழுப்புவது மீறல் செய்வது நினைக்கக் கூடாத பாவச் செயலாகவே கருதப்படுகிறது.

இன்றைய காலம் உலகமயமாதலின் நிகழ்ச்சி நிரல் நிறைவேற்றப்பட்டு வரும் காலமாகும். அதில் கணனி மயப்பட்ட போக்குகள் ஆதிக்கம் பெற்று நிற்கின்றன. ஆனால் இவற்றினால் பெண்ணடிமைத்தனத்தை மாற்ற முடியவில்லை. அதற்குப் பதிலாக இவற்றின் கீழ் பெண்களின் உழைப்பு நவீனமான வழிகளில் பல்தேசியக் கம்பனிகளாலும் தனியார் அரசாங்கத் துறைகளாலும் குறைந்த சம்பளத்தில் உறுஞ்சப்படுகிறது.

பெண்களின் நடை உடை பாவனைகளில் மாற்றம் வந்துள்ளமை காணக் கூடியதேயாகும். அவற்றின் ஊடாக பணம் பறித்தல் இடம் பெறும் அதே வேளை கருத்தியல் சிந்தனைத் தடத்தில் எவ்வித மாற்றங்களும் இடம் பெற முடியாதவாறே "நவீனமயங்கள்" பெண் களை ஏமாற்றி திசை திருப்பி வருகின்றன.

அடுத்தடுத்து உலக அழகு ராணிகளாக இந்தியாவின் சில பெண்களைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் அழகு சாதனப் பல்தேசியக் கம்பெனிகள் இலகுவாகவே இந்தியாவின் பரந்த சந்தையில் கால் பதித்து கடைவிரித்துக் கொண்டன. இன்று நகரங்களில் மட்டுமன்றி கிராமங்களில் கூட பெண்களுக்கான அழகுசாதனக் கடைகள் தனியானவையாகவே நடாத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் பிண்ணனி உலகமயமாதலின் கீழான திட்டமிட்ட பண்பாட்டுச் சீரழிவின் பகுதியாகும்.

எனவே உலகமயமாதலும் அவற்றின் பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டு நிகழ்ச்சி நிரலும் பெண்களுக்கு எதிரானவையாக மிகவும் கெட்டித்தனமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றுடன் பழைமைவாதக் கருத்தியல் சிந்தனை நடைமுறைகள் எவ்வித முரண்களும் கொள்ளாது இணைந்து வழிநடக்கின்றன. ஒன்றை ஒன்று பாதுகாத்து நிற்கின்றன. அவையாவும் சமூக அந்தஸ்தாகவும் உயர்வானதாகவும் காட்டப்படுகின்றன.

ஆதலால் பெண்களைச் சூழவுள்ள பிரச்சினைகள் உரிய தளங்களில் அடையாளம் காணப்படுவது அவசியம். அவற்றைப் பெண்களே முன்வந்து காணுதல் வேண்டும். அதற்கான முன் முயற்சிக்கு அரசுசார்பற்ற நிறுவனங்கள் வழிகாட்டமாட்டா. சமூக உணர்வின் பாற்பட்ட சமூகச் சிந்தனைகள் ஊடாகப் பெண்கள் விழிப்புணர்வு பெற்று முன்செல்லல் வேண்டும். இதுவே நமது நாட்டின் சனத் தொகையில் அரைவாசியைக் கொண்டுள்ள பெண்களுக்கு முன்னால் உள்ள சமூகக் கடமையாகும்.

துளசி

## மார்ச் 8 சர்வதேச பெண்கள் தினம்



பெண்களின் விடுதலைக்குப் [illegible] கம்யூனிஸ்ட் தலைவி [illegible] (1857 - 1933)

## வீர மகளிர்

லால் கார்ஹ் கிராமத்தின் மகளிர்
கைகளிலே கோல்களுடன்
காவல் துறையினரை வழிமறித்தனர்.
மாஓ வாதிகட்குப் புகலிடங் கொடுக்கிறாய் என
மிரட்டிய பொலிஸ் அதிகாரியிடம்
நாங்கள் எல்லாருமே மாஓவாதிகள் தான்
என்று வைத்துக் கொள் என்று
ஒரு மூதாட்டி சொன்னார்.
இந்த வீர யுகத்தில்
பலஸ்தீனச் சிறுமி ஒருத்தியின் கை
அவளது பாட்டியார் பறிகொடுத்த வீட்டின்
திறப்பை இறுகப் பற்றியிருந்தது.
இந்த வீர யுகம்
தெலிங்கானா, நக்ஸல் பாரி
நந்திக்கிராமம், நேபாளம் என்று மட்டும்
விரியவில்லை. எனவே -
ஆராரோ ஆள்வதற்காய்ப்
போராடப் போனவர்க்கு
வேல் தந்து அனுப்பி வைத்துப்
புறமுதுகிற் புண்பட்டு மாண்டவன் என் மகனென்னில்
பால் கொடுத்த முலையிரண்டை
அறுப்பனெனச் சூளுரைத்த மரபொன்றின்
வீரமகளிர்க்காய் வீணே நீர் தேடாதீர்.
காணாமற் போனவரை மீட்பதற்காய்க்
களமிறங்கித் துணிவே தம் ஆயுதமாய்
ஊர்வலமாய்ப் போனவர்கள் வீர மகளிர் தாம்.
லத்தீன் அமெரிக்காவின், தென்னிலங்கையின்
யாழ் நகரின் வீதிகளே சாட்சி.
இந்த வீர யுக மகளிரது போராட்டம்
தமக்கானது மட்டுமல்ல - ஒடுக்கப்பட்ட
எல்லாருக்குமானது.

புவனம்

## அகலிகை

கற்கள்.
மண்மேலும் மண்கீழும்
குன்றாய் நெடுமலையாய்த்
துண்டாய்த் துணிக்கையாய்
நின்றுங் கிடந்துங்
கற்கள்.

முனிவன் கணவன் கல்.
தேவன் கயவன், ஆனாலுங் கல் அல்லன்.
சபித்துப் பிழைத்திட்ட ஆண்பிள்ளை
கல்லாகவே வாழ்ந்து கணநேரம் உயிர்த்தவளோ
கல்லாகவே ஆனாள்.

பின்னாளிற்
கடல் கடந்து மீட்டதொரு காதலியைத்
தீப்பிழம்புட் தள்ளியவன்,
ஊரார் சொல் அஞ்சித் தூர ஒதுக்கியவன்.

கல்தொடவும் தகுதியிலாக் கடவுள் அவதாரம்
காலிடறக்
கல்மாறிக் கல்லோடு கல்லாக வாழ்வதற்காய்க்
காரிகையாய் ஆகாமல்
கல்லாய் இருந்திருந்தால்
காலத்தால் அழியாத
நெடுமலையாய் நிலைத்திருப்பாள்.

சிவசேகரம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மத்திய மாகாண சபைத் தேர்தலும் மலையக மக்களும்

அரசாங்கத்தின் பொறிமுறையை இலக்கு வைத்து மக்களுக்கு அபிவிருத்திகள் சென்றடைவதற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளால் சிறிதளவிற்காவது தலையீட்டை செய்ய முடியும். இலங்கை உள்ளூராட்சி சபைகளுக்கும் மாகாணசபைகளுக்கும், பாராளுமன்றத்திற்கும் தேர்தல்கள் மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

முதலாளித்துவ அரசமைப்பில் அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு என்பன அதற்குரிய வரையறைகளுக்குள்ளேயே அணுகப்பட வேண்டும். அவை மக்களை மத்தியப்படுத்தியதாக இருப்பதில்லை. தேர்த ல்களில் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளும் இந்த முதலாளித்துவ அரசமைப்பிற்கு ஏற்ப மக்களுக்கு அபிவிருத்திகள் சென்றடையாது பார்த்துக்கொள்வார்கள். தேர்தல் காலங்களில் அபிவிருத்தி வேலைகள் என்று சிலவற்றை செய்து வாக்குகளை பெற்றுக் கொள்வது முதலாளித்துவ அரசியல்வாதிகளின் அரசியலாகும் .

அத்துடன் தேர்தல் காலங்களில் மக்களை ஏமாற்றும் பிரசாரங்களை மேற்கொள்வர். பெருந்தொகைப் பணத்தை செலவழித்து மக்களுக்கு சிற்சில சலுகைகளை செய்வதும் மதுவகைகளை தாராளமாக மக்களுக்கு வழங்குவதும் தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் செய்யும் மோசடிகளாகும்

இவற்றை மீறி நேர்மையான அரசியல் சக்திகள் அவற்றின் வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு தேர்தல் காலங்களில் பிரசாரங்களை மேற்கொள்வதும் சில சந்தர்ப்பங்களில் வெற்றி பெற்றதுமுண்டு.

நடந்து முடிந்த மத்திய மாகாண சபை தேர்தலில் ஆளும் ஐ.ம. முன்னணி வெற்றிபெற்றுள்ளது. இதில் மிகவும் வித்தியாசமான புதிய பாரம்பரியமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது அபேட்சகர்கள் மக்களுக்கு சலுகைகளை கொடுத்தே வாக்கு கேட்க முடியுமென்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதனை அரசாங்கத்தினரும் எதிர்க்கட்சியினரும் செய்தனராயினும் ஐக்கிய தேசிய கட்சியின் பட்டியலில் போட்டியிட்ட திகாம்பரமும், பிரபா கணேஷனும் அவர்களது ஆட்களும் செலவழித்த பணம் மக்களுக்கு செய்த சலுகைகள் போன்றன மக்களை மேலும் சீரழித்து வாக்குகளைப் பெறும் உபாயங்களாகும்.

திகாம்பரம் என்பவர் கடந்த மாகாணசபை தேர்தலில் ம.ம. முன்னணியில் போட்டியிட்டு வென்றவராவார். அவர் நடந்து முடிந்த தேர்தல் காலத்தில் நீர்ப்பாசன குழாய்களை வழங்கியும் விளையாட்டு மைதானங்கள் அமைத்துக்கொடுத்தும் பாடசாலைகளுக்கு நன்கொடை வழங்கியும் படிக்கட்டுக்களை அமைத்துக் கொடுத்தும் மக்களை திருப்திப்படுத்தி வாக்குகளை கேட்டுள்ளார். தனிப்பட்டவர்களுக்கு கொடுத்த பணம், சாராயம் பற்றியும் கண்டுகொள்ளாமல் இருக்க முடியவில்லை. இவரைப் போன்றே எல்லா அபேட்சகர்களும் பணத்தை வாரி இறைத்து சாராயத்தை வார்த்து சலுகைகளை செய்து விட்டுத்தான் தேர்தல் பிரச்சாரத்தை செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தோட்டத் தொழிலாளர்களிடம் ஏற்படுத்தப்பட்டது. இதே போன்று பிரபா கணேஷனும் அவரது பிரசாரத்தில் பெருந்தொகைப் பணத்தை செலவழித்தார். அவரின் பிரசாரத்தை மேற்கொள்ள தேர்தல் பிரசார ஒருங்கிணைப்பாளர்களென நியமித்து அவர்களுக்கு சம்பளம் கொடுத்து அவர்களை பிரசாரத்தில் ஈடுபடுத்தி இருந்தார். அவரின் பிரசாரத்திலும் சலுகைகள், சாராயம் என்பவற்றுக்கு குறைவில்லை.

திகாம்பரத்தின் தேர்தல் பிரச்சார முடிவு மூன்று கோடி ரூபாவைத் தாண்டிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. பிரகாஷ் கணேஷனின் ஒரு நாளைக்கான பிரசார செலவு 15 லட்சம் ரூபா எனக் கூறப்பட்டது. ஒப்பீட்டு ரீதியில் இ.தொ.கா, ம.ம.மு என்பன செலவழித்ததை விட அதிகமானது என்றே சொல்லப்படுகிறது. சமூக நலன்புரி சலுகைகளை பெற்றுக்கொள்ளவும் அபிவிருத்திகளை பெற்றுக்கொள்ளவும் அரசாங்கத்துடன் இணைந்திருக்க வேண்டுமென்பது அண்மைக்காலமாக முதலாளித்துவ அரசியலில் அதிகமாக சிறிய கட்சிகளால் குறிப்பாக சிறுபான்மை தேசிய இனங்களின் கட்சிகளால் பேசப்படுகின்ற விடயமாக இருக்கிறது. அதனால் மலையகத் தமிழ் கட்சிகள் ஆளும் கட்சியுடனே அரசாங்கத்தை அமைக்கக்கூடிய எதிர்க்கட்சியுடன் தேர்தல் காலங்களில் கூட்டு சேர்வதை காணமுடிகிறது. அதிலும் விஷேடமாக ஆட்சி செய்கின்ற கட்சியுடன் கூட்டுச்சேர வேண்டும் என்பதனை இ.தொ.கா, ம.ம முன்னணி என்பன அழுத்திக் கூறிக் கொண்டு அதன்படி செயற்பட்டு வருகின்றன. இ.தொ.காவும் ம.ம.மு யும் ஆளும் ஐ.ம.சு. முன்னணியில் போட்டியிட்டன. இ.தொ.கா விற்கு மிகவும் குறைவான வாக்குகளே கிடைத்தன 3ஆசனங்கள் கிடைத்தபோது ம.ம.மு விற்கு ஒரு ஆசனம் கூட கிடைக்கவில்லை ம.ம. முன்னணிக்கு ஏற்கனவே மத்திய மாகாணசபையில் இரண்டு ஆசனங்கள் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு காரணம் ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்தின் மீது இருக்கும் வெறுப்பும் இ.தொ.கா. ம.ம.மு மீது இருக்கும் வெறுப்புமாக இருக்கலாம். ஆனால் ஐ.தே. கட்சி கூட்டணியில் போட்டியிட்ட திகாம்பரம் பிரபா கணேஷன் போன்றவர்களின் வெற்றிக்கு காரணம் அவர்களின் கொள்கையோ ஐ.தே. கட்சி மீதான விருப்பமோ இல்லை என்பது தெளிவானது. அவர்கள் மக்கள் மத்தியில் செய்த சீரழிவான நடைமுறைகளே காரணமாகும் அதாவது மக்களுக்கு பணம் சாராயம் போன்ற சலுகைகளை அவர்கள் தாராளமாகச் செய்தனர். அபிவிருத்தி என்ற பேரில் சில பூசி மெழுகும் வேலைகளையும் செய்தனர்.

புதிய ஜனநாயக கட்சி மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் சுயேட்சையாக போட்டியிட்டது. அதற்கு ஆசனங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் கிடைத்த வாக்குகளை விட அரைவாசி வாக்குகள் குறைந்துள்ளன. ஆனால் கடந்த 4,5 வருடங்களாக புதிய ஜனநாயக கட்சி மேற்கொண்ட வெகுஜனப் போராட்டங்களோ அதிகமாகும். வலப்பனை பிரதேச சபை உறுப்பினராக இருந்து கட்சியின் மலையகப் பிரதேச செயலாளர் தோழர் ச. பன்னீர்செல்வம் மேற்கொண்டு வருகின்ற வேலைகளை குறைத்து மதிப்பிட முடியாது. இ.தொ. கா. ம.ம.மு. போன்றவற்றை அம்பலப்படுத்துவதில் பு.ஜ. கட்சி முக்கிய பங்கை வகித்து வந்துள்ளது. மக்கள் இ.தொ.கா , ம.ம.மு. போன்றவற்றை நிராகரிக்கும் தருவாயில் திகாம்பரம், பிரகாஷ் கணேஷன் போன்ற பணக்காரர்கள் இ.தொ.கா, ம.ம.மு தலைவர்களின் மிகவும் மோசமான மறுபிறப்புகளாக மக்கள் மத்தியில் வாக்குகளை பெற்று மாகாணசபை பிரதிநிதிகளாகியுள்ளனர். இவர்கள் தேர்தல் சட்டங்களுக்கு மாறான நடவடிக்கைகளில் அதிகமாக ஈடுபட்டனர்.

இம்முறை தேர்தலில் வாக்களிக்க தேசிய அடையாள அட்டையை காண்பிப்பது கட்டாயப்படுத்தப்பட்டதனால் மத்திய மாகாணத்தில் 40 சதவீதமான வாக்காளர்கள் வாக்களிக்க முடியவில்லை. அவர்களில் .... சதவீதமானவர்கள் தோட்டத் தொழிலாளர்களும் அவர்களது பிள்ளைகளு மாவார். அதிகமானோருக்கு வாக்காளர் அட்டைகள் கிடைக்கவில்லை. நகரங்களிலுள்ள தபால் நிலையங்களில் அவை இருப்பதாக கூறப்பட்ட போதும் அவற்றை எடுப்பதில் மக்கள் அதிகளவில் ஆர்வம் காட்டவில்லை. தபால் நிலையங்களுக்கு சென்ற போது சிலருக்கு வாக்காளர் அட்டைகள் கிடைக்கவே இல்லை. இவ்வாறான சூழ்நிலைக்கு மத்தியிலேயே நேர்மையான தேர்தல் நடந்ததாகக் கூறப்படுகிறது.

இவ்விடத்தில் மக்களின் முன் பாரிய கடமைகள் இருக்கின்றன. அதாவது மக்கள் விரோத சக்திகளை நிராகரிப்பதுடன் மக்கள் கடமை முடிவடைந்து விடுவதில்லை. அச்சக்திகள் மேலும் தலையெடுக்காமல் இருக்க சரியான அரசியல் நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். அவற்றை விட மோசமான சக்திகள் மாறுவேடத்தில் ஜனரஞ்சகமாக வருவதையும் அனுமதிக்கக் கூடாது

தேர்தல்களின் மூலம் நேர்மையான சரியான உறுதியான மக்கள் தலைமைத்துவம் கட்டிவளர்க்கப்படலாம் என்பதில் நம்பிக்கை வைக்கத்தேவையில்லை. ஆனால் பிற்போக்கு சக்திகளுக்கு தேர்தலில் கிடைக்கும் அங்கீகாரம் முழு சமூகத்தையும் அடக்கி ஒடுக்கி சீரழித்து அழிப்பதற்கு கொடுக்கப்படும் அதிகாரமாகி விடுகிறது. இது குறித்து மக்கள் அவதானமாக இருப்பதும் மாற்று அரசியல் வழிமுறைகள் பற்றிச் சிந்திப்பதும் அவசியமாகிறது.

மலையகத்தில் மத்திய மாகாணசபை தேர்தலுடன் பழைய பிற்போக்கு சக்திகளுக்குப் பதிலாக புதிய பணக்கார வணிக வர்க்கத்தின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டுள்ளது. இதுவும் மிகவும் பிற்போக்கான வர்க்கமே. இவர்களின் அரசியல் வியாபாரங்களில் இருந்து தோட்டத் தொழிலாளர்களும் மலையகத் தமிழ் தேசிய இனமும் விடுதலை அடைவது அவசியமானது. அதற்குரிய அரசியல் வேலை நடவடிக்கைகள் இயக்கம் பற்றி மக்கள் செயற்பாட்டாளர்கள் கவனஞ் செலுத்துவது அவசியமாகும்.

**குறிஞ்சிக் குரலோன்**

# பாராளுமன்றப் பதவிகளும் தமிழ் இன உணர்வாளர்களும்

**தமிழ் இன உணர்வின்** வழியாக வளர்ந்ததே தமிழ்த்தேசியவாதம் அது இலங்கையில் வளர்ந்து வந்த சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு எதிர் நிலைக் குறுந்தேசியமாக வளர்ச்சி பெற்றது. தேசியம் என்பது எல்லைக்குட்பட்டதென்றும் அது முற்போக்கான பாதையில் பயணிக்காது விட்டால் சகலவகைப் பிற்போக்குத்தனங்களையும் உள்வாங்கி நிற்கும் என்பதையும் மாக்சிச லெனினிசவாதிகள் எப்போதும் சுட்டிக்காட்டி வந்துள்ளனர். அத்துடன் வர்க்க சுரண்டல், ஏற்றத்தாழ்வு, தனிச்சொத்துடைமை, பழைமைவாதக் கருத்தியல் பண்பாடு போன்றவற்றைப் பாதுகாத்து முன்னெடுப்பதற்கும் தேசிய வாதம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ள ஒன்றாகும். அவை மட்டுமன்றி இத் தேசியத்தின் வழியாக இன வக்கிரம் இனக்குரோதம் இனப்பகை வளர்க்கப்பட்டும் வந்துள்ளனவற்றையும் காணலாம். இவற்றை இலங்கையில் கடந்த நூற்றாண்டின் ஆரம்பம் முதல் வளர்க்கப்பட்ட தேசியத்தில் நன்கு கண்டு கொள்ளலாம்.

"இது எங்கள் நாடு" "சிங்கள இரத்தம்" "அந்நியத் தமிழன்" "பௌத்த மேன்மை" என்றவாறு சிங்களத் தேசியம் பௌத்த சிங்களப் பேரினவாதமாக வளர்க்கப்பட்டது. அதே வேளை "ஆண்டபரம்பரையினர்" "மூத்தகுடி முதல்மொழி" "தமிழ் இரத்தம்" "தமிழர் தன்மானம்" என்றவாறு தமிழ்த் தேசியம் குறுந்தேசியவாதமாக வளர்க்கப்பட்டது. இது தமிழ் நாட்டில் "உடல் மண்ணுக்கும் உயிர் தமிழுக்கும்" "பொங்குத்தமிழர்க்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிசம் என்று சங்கே குழங்கு" "தமிழர்களுக்காகவும் தமிழுக்காகவும் தான் உயிர்வாழ்கிறோம்" "என்றவாறு திராவிட இயக்கக்காரர்களும் தமிழ்த்தேசியவாதத்தை வளர்த்து வந்தனர்.

ஆனால் இத்தமிழ்த் தேசியவாதத்தின் மறைவில் வர்க்க வேறுபாடுகளும் சுரண்டல் சொத்துச் சேர்ப்புகளும் பெருக்கம் பெற்றன. அவற்றைப் பாதுகாக்கும் பிரதிநிதிகளாக தேசியவாதத் தலைமைகள் இருந்து வந்தன. அவை காலத்திற்குக் காலம் வளர்ச்சி கண்ட அரசியல் தளத்தின் ஊடாக முன்னெடுத்தும் வரப்பட்டது. குறிப்பாக சர்வசன வாக்குரிமை மூலமான அரசியல் பிரதிநிதித்துவத் தெரிவிலும் பாராளுமன்றப் பதவிகளைப் பெறுவதிலும் இத் தேசியவாதத் தலைமைகள் முன் நின்றன. சிங்களத் தேசியவாதத் தலைமைகள் பதவிகள் பெற்று ஆளும் தரப்பாக மாறிக்கொண்ட அதே வேளை தமிழர் தேசியவாதத் தலைமைகள் பாராளுமன்ற பதவிகளைப் பெற்று எதிர்த்தரப்பாகிக்கொண்டனர். அதேவேளை சொத்து சுகங்களையும் ஆளும். வர்க்கத்தினதும் அடிப்படை நலன்களைப் பேணிக்கொண்டனர்.

நமது பாராளுமன்றப் பதவிகளுக்கு இலங்கைத் தமிழர்கள் மத்தியிலும் தமிழ் நாட்டுத் தமிழர்களிடையேயும் தமிழ் இன உணர்வு பிரதான கருப் பொருளாகியது. இந்த உணர்வுக்கு உரு ஏற்றி அதன் மூலம் பல்வேறு வடிவங்களில் பாராளுமன்ற அரசியல் அரங்கில் பதவிகள் பெறப்பட்டன. ஆனால் ஆங்கிலப் புலமை மிக்க சட்ட வல்லுனப் பேச்சுகளும், விவாத வீரத்தனங்களும், பேரப்பேச்சுக்களும் அகிம்சைப் போராட்டங்களும் தமிழர் உரிமைகள் பறிக்கப்படுவதைத்தடுக்க முடியவில்லை. தமிழ்த்தேசியவாதத் தலை மைகள் பாராளுமன்ற அரசியலில் யார் கெட்டிக்காரர்கள் என்றும் தியாகிகள் துரோகிகள் என்றும் போட்டிப்போட்டு பாராளுமன்றப் பதவிகளைப் பெற்று வந்தனர். அடிப்படையில் பாராளுமன்ற பதவி களுக்காக தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் தம்மிடையே போட்டி போட்டு நின்ற அவலம் ஆயதப் போராட்டம் முன்னெடுத்த சூழலிலும் நீடித்து வளர்ந்து. பாராளுமன்ற அரசியல் மூலம் தமிழ்த் தலைவி தியை மாற்ற முன்னின்றவர்கள் ஆயுதப் போராட்டம் உச்சத்திற்கு சென்ற வேளையிலும் அதனை விட்டு விலகி இருக்க முடியவில்லை. பாரளுமன்றத்தைக் கூட தகுந்த முறையில் பயன்படுத்தி தமிழர் பிரச்சினையின் நியாயப்பாடுகளை சிங்கள மக்களுக்கு எடுத்து விளக்க முற்படவில்லை. அதற்குப் பதிலாக தத்தமது பாராளுமன்ற பதவிகளுக்குப் பங்கம் இல்லா வகையிலேயே நடந்து வருகிறார்கள்.

இன உணர்விலும் பார்க்கப் பாராளுமன்றப் பதவிகள் கனதியானவை என்பதை இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் காண முடிகிறது. அதற்குக் காரணம் இன மொழி உணர்வுகள் உச்சமாகப் பேசி உணர்ச்சிகளை மக்களிடையே தூண்டுவது பாராளுமன்றப் பதவிகளுக்கும் அவற்றின் ஊடாக சொத்து சுகம் தேடும் பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்குமேயாகும். தமிழ் நாட்டிலே அதற்கான முழு வடிவத்தையும் திராவிட இயக்கத்தின் ஊடான பாராளுமன்ற அரசியலில் வரலாறு கண்டு வந்துள்ளது. இன்றைய தி.மு.க. ஆட்சியும் அதன் தலைவர் மு.கருணாநிதியும் அவரது கழகக் கண்மணிகளான பதவிகள் பெற்றோரும் தமிழ் நாட்டின் கோடீஸ்வரர்களாக இருந்து வருகின்றனர். இத்தகையோர் சாதாரண தமிழ் மக்களுக்காக தமது பதவிகளில் ஒரு சிறு கடுகளவு தானும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். அண்மையில் ஈழத் தமிழர்களுக்காகத் தத்தமது பாராளுமன்ற பதவிகளை விட்டு விலக இருப்பதாகத் திகதியிட்டு கடிதங்கள் எழுதி ஒப்படைக்கப்பட்ட காட்சி கோலாகலமானது. ஆனால் இன்று அப்படி ஒரு சம்பவம் நடந்ததாகவே காட்டிக் கொள்ளப்படுவதில்லை. தமிழின உணர்வுக்காக தமிழ் நாட்டின் நாற்பது பாராளுமன்றப் பதவிகளில் ஒன்றாவது ராஜினாமாச் செய்யப்படவில்லை.

தொடர்ச்சி 15 பக்கம்

## மலையக தேர்தல்

4ம் பக்க தொடர்ச்சி

மலையக அரசியலில் மக்களை அடிமைகளாக வைத்திருந்த, வைத் திருக்க திட்டமிட்டுள்ள சிலரிடம் அதிகாரத்தை மக்கள் வழங்கியுள்ளமையால் கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, உயர்கல்வி போன்ற பல்வேறு விடயங்களில் மக்கள் சமுதாய வளர்ச்சியை தடைசெய்யும் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக ஆசிரிய சமூகமும் சுயநலப் போக்கில் தமது தொழிலுக்கு ஏற்ப அமைச்சர்களுக்கு துணைப்போவதை மீண்டும் தொடர ஆயத்த மாகியுள்ளது என்று தான் தெரிகிறது. இது விரும்பத்தக்க ஒரு விடயமல்ல. மாறாக மக்கள் ஏன் கற்றிந்தவர்களுக்கு வாக்களிக்கத் தவறியுள்ளனர். அல்லது மக்களுக்காக போராடிய தொடர்ந்து போராடும் கட்சிக்கு ஆதரவளிக்க தவறியுள்ளனர் என்பது கேள்வி க்குறியாகவே உள்ளது. இதற்கிடையில் மகிந்த சிந்தனையின் பிரித்தாளும் தந்திரம் மலையகத்தில் சிறப்பாக நடந்தேறியுள்ளது. இதன் தாக்கத்தை இன்னும் சில நாட்களில் அறியலாம். இவ்வளவு காலமும் மக்களை சிந்திக்க விடாமல், சிந்திக்க தேவையான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொள்ளாமல் மலையக அரசியல் வாதிகள் ஓர் இன அழிப்பினையே செய்து வந்துள்ளனர். மலையக மக்கள் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி செய்திகளை வாசித்தல், செவிமடுத்தல், உலக அரசியல் பற்றிய அறிவைப் பெற முற்படுதல் என்பன அவசியமே! அதற்கான சூழ்நிலைகளை அரசியல் வாதிகளோ அரசாங்கமோ ஏற்படுத்தப் போவதில்லை. உண்மையாக மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களாயின் தோட்டத்துக்கு ஒரு நூலகம் அமைத்துக் கொடுத்து நூல்கள், பத்திரிகை, கணனி வசதிகளையே செய்திருக்க வேண்டும். அதை யாரும் செய்ய முன்வருவதில்லை. மக்கள் சிந்திக்கத் தொடங்கினால் அவர்கள் எல்லோரும் காணாமல் போய்விடுவார்கள். ஆனால் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னால் குழுமியிருந்து தரங்கெட்ட நிகழ்ச்சிகளை விழித்துப் பார்க்கும் கலாச்சாரம் வளர்க்கப்படுகிறது. ஆகவே இத்தேர்தல் முடிவு மக்கள் தாமாக சுயமாக சிந்தித்து வாக்களித்த அரசியல் முடிவல்ல என்பதையும் பணவீசல் சலுகைகள் சாராயம் போன்றவற்றின் விளையாட்டு பற்றியும் இதற்கு மேல் தெளிவாகக் கூறத் தேவையில்லை. ஆனாலும் இந்த தேர்தல் கலாசாரம் முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டும். இளைஞர்கள் யுவதிகள் அரசியல் அடிப்படையில் சிந்திக்க வேண்டும். நேர்மையான அரசியலில் ஈடுபட வேண்டும். அரசியல் கட்சிகள் மக்களுக்கு உண்மைகளை இன்னும் அதிகமாக, தெளிவாக விடயங்களை கொண்டு சேர்க்க வேண்டும் என்பதையும் மக்களின் விழிப்புணர்வு இன்னும் ஏற்பட வேண்டும் என்பதையும் இத்தேர்தல் முடிவுகள் உணர்த்தியுள்ளது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இணைத் தலைமை நாடுகளும் இந்தியாவும்

இலங்கையின் யுத்தம் பற்றியும் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வு பற்றியும் அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன ஒவ்வொரு காலகட்டத்திலும் எதிரும் புதிருமான நிலைப்பாட்டையே எடுத்துவருகின்றன. இந்தியா இலங்கை அரசாங்கத்தின் மீது பொறுப்புகளை சுட்டிக்காட்டும் போது தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் மீது பொறுப்புக்களை சுமத்துவதாக அறிக்கைகளை விடுவதுண்டு.

இலங்கை ஒரு இறைமையுள்ள நாடு. யுத்தத்தை நிறுத்தச்சொல்லி கேட்க முடியாது என்று பேசிவந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரனாப் முகர்ஜி இலங்கை அரசாங்கம் யுத்தத்தை நிறுத்தி வி. பு. இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டுமென கூறுகிறார்.

பிரனாப் முகர்ஜியின் இந்தக் கூற்று வெளியாகும் வரை யுத்த நிறுத்தம் பற்றி பேசிக்கொண்டிருந்த அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் மெல்ல மெல்ல அவற்றின் தொனியை குறைத்துக் கொண்டன. அவை யுத்தம் நடைபெறும் பகுதியிலிருந்து மக்களை பாதுகாப்பாக வெளியேறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு மட்டுப்படுத்திக் கொண்டு கருத்துக்களை தெரிவித்து வருகின்றன.

பேரினவாதிகளால் வெள்ளைப் புலி என்று வர்ணிக்கப்பட்ட ஐ. நா லின் ஜோன் ஹோம்ஸ் அண்மையில் இலங்கை வந்து ஐ. நா. திரும்பிய பின் விடுத்த அறிக்கை வழமையான அறிக்கைகள் போன்று பரபரப்பாக இல்லை. இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள மனிதப் பேரவலத்தை தவிர்ப்பது பற்றியோ, யுத்தத்தை நிறுத்துவதற்கோ அரசியல் தீர்வைக் காண்பதற்கோ அழுத்தம் கொடுப்பதாக அவரது அறிக்கை அமையவில்லை.

இலங்கை அரசாங்கம் இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு இந்தியா நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவி வருவதாக இந்தியாவிலிருந்தே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன அத்துடன் தற்போது பிரனாப் முகர்ஜி விடுகின்ற யுத்த நிறுத்தக் கோரிக்கை தமிழ் நாட்டில் இலங்கையில் முன்னெடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக நடைபெறும் போராட்டங்களில் ஏற்பட்டுள்ள அழுத்தத்தின் வெளிப்பாடாகும்.

யுத்தக் கொடுமைகளுக்குள்ளாகிக் கொண்டிருக்கும் இலங்கையில் யுத்தத்திற்கு எதிராக மக்கள் இயக்கங்கள் எதுவுமே முன்னெடுக்கப்படவில்லை. பெரும்பான்மை இனமக்களிடம் யுத்தத்திற்கு ஆதரவான மனநிலை வலுவாக கட்டிவளர்க்கப்பட்டுள்ளது. தமிழ்மக்கள் மத்தியில் பயப்பீதி திட்டமிட்ட நடவடிக்கைகளினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மனித உரிமைகள் மீறல் ஜனநாயக மறுப்பு என்பனவே நாளாந்த நிகழ்வாகியுள்ளன.

அவசரகாலசட்டத்தின் கீழ் ஒருவரை இரண்டுவிதமாக தடுத்து வைக்க முடியும் தேசிய பாதுகாப்பிற்கு எதிராக குற்றமொன்றை புரிந்துள்ளார் அல்லது குற்றமொன்றுடன் சம்பந்தப்பட்டுள்ளார் என்பதற்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட முடியும். தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிப்பார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு ஒருவரை தடுப்புக்காவலில் வைத்திருக்க முடியும். இதனடிப்படையில் அண்மைக்காலமாக பல சம்பவங்கள் இடம் பெற்றுவருகின்றன.

மனித உரிமை மீறல்கள் பற்றி பெரிதாக பேசிவந்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தற்போது மீறல்கள் உச்சமாக நடக்கின்றபோது மிகவும் அடக்கிவாசிக்கின்றன.

நோர்வேயின் அனுசரணையுடனான ஷஷசமாதான நடவடிக்கைகள்" முன்னெடுக்கப்பட்டபோது அதற்கு எதிராக இந்திய ஆளும் வர்க்கம் செயற்பட்டது. அப்போது சமாதான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பைக் காட்டிய ஜே.வி.பி. யுடன் இந்தியா நல்லுறவைப் பேணிக் கொண்டது அந்த சமாதான நடவடிக்கைகள் சீர்குலைந்த போது இந்திய அரசாங்கம் வெளிப்படையாகவே தமிழ் மக்களின் போராட்டத்திற்கு எதிராக செயற்படலாயிற்று

இங்கு தமிழ் இளைஞர்களின் ஆயுத நடவடிக்கைகள் உருவாகவும் பலப்படவும் இந்திய அரசு ஆரம்பம் தொட்டு உதவியது என்பதை யாரும் மறந்துவிடமுடியாது. இலங்கையின் அரசியலமைப்பிற்கு 13வது திருத்தம் திணிக்கப்பட்ட போதும் தமிழ்மக்களின் ஆகக் குறைந்த சுயாட்சிக்கு அத்திருத்தத்தினால் உறுதி செய்யப்படவில்லை.

தற்போது இலங்கைத்தமிழ் மக்கள் இரண்டு பிரதான கேள்விகளுடன் சீவிக்கின்றனர். ஒன்று வடக்கு கிழக்கில் மட்டுமல்ல வெளியிலும் கூட தமிழ்மக்களின் அமைதியான வாழ்க்கையும் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளதா? உறுதி செய்யப்படுமா? இரண்டாவது அதிகாரப்பங்கீடு அல்லது சுயாட்சியின் அடிப்படையிலான அரசியல் தீர்வு முன்வைக்கப்படுமா? நடைமுறைப்படுத்தப்படுமா?

அரசியல் தீர்வு என்பது தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை ஏற்றுக்கொண்டு, எதிர்காலத்தில் இழைக்கப்படாமல் இருப்பதற்கான உத்தரவாதத்தை வழங்கும் அரசியல் செயற்பாடா? ஆயுதப் போராட்டத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கான வெறும் சொல்லாடலா? அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை அடுத்து அரசியல் தீர்வு பற்றிய எந்த விருப்பமும் காட்டப்படாத நிலையில் இலங்கை அரசாங்கத்திற்கு அரசியல் தீர்வு என்பது அந்த வெறும் சொல்லாடலே என்பது தெளிவு படுத்தப்படுகிறது தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பது வெளிப்படையான உணர்வே ஆகும்.

சர்வதேச சமூகம் என்று சொல்லப்படுகின்ற இணைத்தலைமை நாடுகள் என்று சொல்லப்படுகின்ற அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஜப்பான் நோர்வே என்பன முல்லைத்தீவிலிருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்பதை பற்றி மட்டுமே பேசுகின்றன. இங்கு இது சுட்டிக்காட்டப்படுவதன் நோக்கம் அவை அமைதியை ஏற்படுத்தவும் அரசியல் தீர்வை பெற்றுத்தரவும் உதவ வேண்டும் என்ற நோக்கிலன்றி இன்றைய அவல நிலைக்கு அவையும் பொறுப்பேற்க வேண்டும் என்பதற்காகவே ஆகம்.

இன்னொரு புறமாக பிரணாப் முகர்ஜி யுத்த நிறுத்தம் வேண்டுமென்று பேசினாலும் இந்தியாவின் அங்கிகாரத்துடனேயே இன்றைய நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தேசியம் என்ற வரையறைகளுக்கு அப்பால் நடக்கின்ற பிராந்திய மேலாதிக்க ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரல்களை புரிந்து கொள்ளாமல், அல்லது புரிந்து கொள்ள மறுத்துக்கொண்டு பேசும் எழுதும் செயற்படும் எவரும் தமிழ்மக்களுடைய உரிமைக் கோரிக்கையைச் சரியாக புரிந்து கொண்டவராக இருக்க முடியாது

சர்வதேச சமூகம் மற்றும் இந்தியா தமிழ் மக்களின் பாதுகாவலனாக இருக்கும் என்ற வாதம் மீண்டும் மீண்டும் செல்லுப்படியற்றதாக்கப்படுகிறது. இந்தியாவுக்கும் சீனாவிற்கும் அல்லது பாக்கிஸ்தானுக்கும் சிண்டு மூட்டி இலங்கையில் தமிழ் மக்களின் சார்பாக இந்தியாவை தலையிட வைக்கலாம் என்ற தந்திரோபாயத்தை கைக்கொள்ளும் "தமிழ்த்தேசிய புத்திஜீவிகளில் இருந்து இந்தியாவில் நாளாந்தம் இறக்கும் தீக்குளிப்பவர்கள் உயிர்களை விட பெறுமதியானதாக இருக்க முடியாது. தீக்குளிப்பிற்கு அசையாத இந்தியா மேற்படி தந்திரோபாயத்திற்கு அசையுமா. புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் உழைப்பு மூலதனம் என்பனவும் தமிழரின் மூளையும் அமெரிக்காவையும் ஐரோப்பிய யூனியனையும் இங்கு தலையிட வைக்காது

இலங்கையின் இனப்பிரச்சினையில் பேரினவாதத்திற்கு வித்தியாசம் வித்தியாகமான நிகழ்ச்சி நிரல் இல்லை. தமிழ் மக்களுக்கும் வித்தியாசம் வித்தியாசமான நிகழ்ச்சி நிரல்கள் இருக்க முடியாது அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய யூனியனுக்கும் இந்தியாவுக்கும் அடிக்கடி மாற்றமடையக்கூடிய நிகழ்ச்சி நிரல்களே இருக்கின்றன. அவை உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் கீழ் அணிதிரண்டிருந்தாலும் இலங்கை இனப்பிரச்சினையில் அவற்றுக்கு நிரந்தரமான நிகழ்ச்சி நிரல் இல்லை. நிரந்தரமான நோக்கம் இருக்கிறது.

# உலகமயமாதல் மாயை உடைந்து வீழ்கிறது

உலக மயமாதல் நிகழ்ச்சி நிரலின் கீழ் தாராளமயம் தனியார் மயம் 1980 துகளின் ஆரம்பம் முதல் வேகமாக முன்னெடுக்கப்பட்டது: ஜே. ஆர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மக்களை ஏமாற்றி தாராளமயம் தனியார் மயத்தால் அந்நிய முதலீடுகள் வெள்ளம் போல் வரும் என்றும் வேலைவாய்ப்பு கடலெனப் பெருகும் என்றும் மாயையைப் பரப்பினர். இவற்றை எதிர்த்தவர்கள் எள்ளி நகையாடப்பட்டனர். சில படித்த முற்போக்கு முகம் காட்டிய அறிவுஜீவிகளும் இதனால் தடுமாறி உலகமயமாதல் இங்கும் தவிர்க்க முடியாது எனத் துதி பாடினர். தேசிய மயமாக்கப்பட்ட துறைகள் யாவும் தனியார் மயமாக்கப்பட்டது. குறிப்பாக தேயிலை ரப்பர் உற்பத்தித் துறை தனியார் மயமாக்கப்பட்டது. தொண்டமான் போன்ற முதலாளித்துவ அடிவருடிகள் இதனால் தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறுபட்ட நன்மை அடைவார்கள் என ஏமாற்றி நம்பவைத்தனர். ஆனால் என்ன நடைபெற்றுள்ளது.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட உலகமயமாதல் அந்நாட்டிலேயே நிதி நெருக்கடிச் சரிவினால் ஆட்டம் கண்டு வருகிறது. அதன் தாக்கம் உலகம் பூராகவும் பிரதிபலிக்கிறது. நமது நாடும் அதிலிருந்து தப்பவில்லை. அண்மைய போக்குகள் அதனை வெளிப்படுத்துகின்றன. மத்திய வங்கி ஆளுனரும் அரசாங்கமும் உலகப் பொருளாதார நெருக்கடியால் இலங்கை பாதிக்கப்படாதெனவும் நாட்டின் பொருளாதாரம் சிறந்த முறையில் இருப்பதாகவும் தெரிவித்து வந்தனர். அண்மையில் இடம்பெற்ற சார்க் வெளிநாட்டமைச்சர் மாநாட்டில் நாடு இரண்டு பெரிய சவால்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் பயங்கரவாதமும் உலக பொருளாதார நெருக்கடிகளும் நாட்டன் பொருளாதாரத் தாக்கத்தை எதிர் நோக்குவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார் முதற் தடவையாக அரசாங்கம் பொருளாதார நெருக்கடி பற்றித் தெரிவித்துள்ளது.

கொள்வனவுக் கட்டளை கிடைக்காததால் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள 53 கம்பெனிகள் மூடப்பட்டுள்ளதாக பிரதான தொழிற் சங்கம் தெரிவித்துள்ளது. இதில் ஆடைக் கைத்தொழில் கட்டடத் துறை சீமேந்து இரத்தினக்கல் ஏற்றுமதிக் கம்பெனிகள் அடங்குவதாகவும் குறிப்பிட்ட தொழிற்சங்க பிரமுகர் தெரிவித்திருந்தார். இந்த மூடுவிழாவினால் 54,000 ஊழியர்கள் வேலை இழந்துள்ளனர் ஏப்பிரல் முடிவில் மேலும் பலர் வேலை இழக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழியர்களுக்கு நட்டஈடு கொடுக்காது மூடிய முப்பது கம்பெனிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தொழிற் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. இதைவிட இயங்கிக் கொண்டிருக்கும் கம்பெனிகளும் ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவு செய்வதற்கு திண்டாடுகின்றன. மேலதிக வேலை, போனஸ், வருடாந்த சம்பள உயர்வு, போக்குவரத்து வசதிகள் என்பன மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

சில கம்பெனிகள் ஊழியர்களை ஒரு கிழமையில் இருந்து இரண்டு மாத கால விடுமுறையில் வீட்டிற்கு அனுப்பியுள்ளன. சில கம்பெனிகள் விடுமுறையை மேலும் நீடிப்பது பற்றி யோசிக்கின்றன. என்பதுகளில் பிற்பகுதியில் ஆடைக்கைத் தொழில் துறை பெருவளர்ச்சி கண்ட வேளை 800 தொழிற் சாலைகள் இயங்கி வந்தன. தாராள தனியார் மயத்திற்கும் அதன் மூலம் நாடு சொர்க்கபுரியாக மாறப் போவதாகவும் அன்றைய ஐ.தே. கட்சி அரசு மார்த்தட்டி நின்றது. ஆனால் 2007ல் இவை 350 ஆடைத் தொழிற் சாலைகள் எனக் குறுகிக் கொண்டன. மேலும் அவை 2008ன் முடிவில் 275 ஆக வீழ்ச்சி கண்டன.



அமெரிக்காவிலும் மேற்கு நாடுகுளிலும் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியால் உருவாகிய பன்முகப் பிரச்சினைகளை எதிர்த்து பிரான்சில் இடம் பெற்ற தொழிலாளர் எதிர்ப்பு ஊர்வலம்

2007 ல் மூன்று இலட்சம் தொழிலாளர்கள் ஆடைத் தொழிற்துறையில் வேலை செய்தனர். ஆனால் 2008ல் 280,000 ஆகிவிட்டதாக ஆடைத்துறை உற்பத்தியாளர் ஆடைத்துறை கூட்டமைப்பு தெரிவிக்கின்றது. தொழிற்சங்கத் தகவலின்படி இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் இதுவரை 16,802 ஊழியர்கள் வேலை இழந்துள்ளனர். சீமேந்து உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஹொல் சிம்லங்கா நிறுவனம் அதன் உற்பத்தித் திறனை 40 சதவீதத்தால் குறைந்துள்ளது. லங்கா வால்ரைல்ஸ் அதன் ஊழியர்களை இரண்டு மாதலீவில் அனுப்பியுள்ளது. அதன் ஏற்றுமதி 50 சதவீதத்தால் வீழ்ச்சிகளை கண்டுள்ளது. றோயல் செரமிக்ஸ் அதன் ஏற்றுமதியில் 30 வீத வீழ்ச்சிகண்டுள்ளது. ஆடைத்துறையில் முன்னணி நிறுவனமான பிறாண்டிக்ஸ் அதன் ஏற்றுமதியில் 50 வீதக் குறைவை எதிர் நோக்கி யுள்ளது. இதன் காரணமாக அந்த நிறுவனம் நிர்வாகத் துறையினரின் சம்பளத்தில் 40 வீதக் குறைப்பையும் கீழ்மட்ட நிர்வாக ஊழியரின் சம்பளத்தில் 20 வீத குறைப்பை ஏற்படுத்தியுள்ளது. மென் பானங்களின் விற்பனை பத்து வீதத்தால் குறைவடைந்துள்ளது.

இந்த மாதிரியான சூழ்நிலையிலேயே மத்திய வங்கி 900 கோடி ரூபாவை சந்தைக்கு விடும் முகமாக வங்கிகளின் கையிருப்பு நிதியை குறைப்பதற்கு அனுமதித்தது. இதன் மூலம் வங்கித்துறை 900 கோடி ரூபாவை புளக்கத்தில் விட்டுள்ளது. இதைவிட நிதிக் கம்பெனிகள் எதிர் நோக்கும் நெருக்கடியைச் சமாளிப்பதற்காக அரசு ஆயிரம் கோடி ரூபாயை வழங்க முன்வந்துள்ளது. இதில் 425 கோடி ரூபா சிக்கலில் உள்ள மூன்று சிலிங்கோ நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ளது. ஊழல் மோசடியில் ஈடுபட்ட சிலிங்கோ நிறுவனத்திற்கு 425 கோடி ரூபாய் கொடுக்கப்படுவது கவனிக்கத்தக்கது.

அமெரிக்காவில் ஜனாதிபதி நிதி நிறுவனங்களின் மீட்பு நிதி வழங்கிய போது வா(ய)ல் ஸ்ரீற் மீட்சிக்காக மெயின் ஸ்ரீற் கொடுக்க வேண்டியுள்ளதென பொதுமக்கள் கூறினர். கொடுத்த சம்பளத்தில் நிதி நிறுவனங்களை நடாத்தியவர்கள் லாப நோக்கில் செயற்பட்டும் நிர்வாக சீர் கேட்டினாலும் மோசடிகளில் ஈடுபட்டதாலும் ஏற்பட்ட நட்டத்திற்கு மக்களின் பணத்தில் இருந்து எடுத்து நிதி நிறுவனங்களுக்கு அரசு நிதி வழங்குகிறது. இதே போலவே மக்களின் வட்டிப் பணத்தை மோசடி செய்த நிதி நிறுவனங்களுக்கு அரசு மீட்பு நிதி வழங்குகிறது. இந்த அரசு முதலாளித்துவ அரசு என்பதற்கு இதுவும் ஒரு சான்று. இந்த நாடு பாரிய நெருக்கடியை இந்த வருட இறுதியில் எதிர்கொள்ள நேரிடும் என்பதாலேயே அரசு அதற்கு முன் தேர்தலை நடாத்தி ஆட்சியில் தொடர்ந்து இருக்க முயலுகின்றது.

-சிறி-

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 17

1929க்குப் பின்பு இலங்கையின் பொருளாதாரச் சரிவுக்கு இலங்கையின் பொருளாதாரம் இலங்கையின் தோட்டத்துறை ஏற்றுமதி மீது தங்கியிருந்தமையே முக்கிய காரணமாயிருந்தது. உலகப் பொருளாதாரத் தேக்கத்தின் நடுவே இலங்கையின் ஏற்றுமதிகளின் வீழ்ச்சி அவற்றின் மீது தங்கியிருந்த தோட்டத்துறையையும் நகர் சார்ந்த பொருளாதாரத்தையும் பெரிதும் பாதித்தது. இந்தப் பின்னணியில் 1935 வரையிலான காலத்தில் இலங்கையின் மேட்டுக்குடிகளின் அரசியல் இன அடிப்படையிலேயே விருத்தி பெற்று வந்தது.

சிங்களத் தலைவர்களிடையே ஓரளவு முற்போக்கான சிந்தனைப் போக்குடையவர்களாற்கூடச் சிங்களவர் தமிழர் என்ற வேறுபாட்டின்

**சிங்கள நிலவுடைமை முதலாளி வர்க்கத்தினருக்கு இனவாதம் பயன் தருவதாக இருந்தது. தமது உயர்வர்க்க சாதிய அடிப்படையில் தமக்கும் தம்மைச் சாந்தோருக்குமான நலன்கள் சலுகைகள் வேண்டிநின்றனர். நாட்டின் சுதந்திரம் பற்றி அவர்கள் எண்ணவில்லை.**

அடிப்படையில் அரசுசபை சட்டசபை அரசியல் விருத்தி பெறுவதைத் தவிர்க்க இயலவில்லை. டொனமூர் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட சர்வசன வாக்குரிமையையும் தேர்தல் தொகுதி முறையையும் தமக்குச் சாதாமாக்கிக் கொள்வதற்குச் சிங்கள நிலவுடைமை முதலாளி வர்க்கத்தினருக்கு இனவாத அரசியல் பயனுள்ளதாக இருந்தது. அவர்கள் மத்தியில் இலங்கைக்குச் சுதந்திரம் வேண்டும் என்ற எண்ணம் உருவாகவில்லை. எனவே இலங்கையின் பல்வேறு சமூகங்களையும் அரவணைத்து ஒன்றுபடுத்திச் சுதந்திரத்திற்கான ஒரு இயக்கத்தை முன்னெடுக்கும் தேவை அவர்கட்கு இருக்கவில்லை. வசதிபடைத்த கொழும்பையும் அதனை அண்டிய பகுதிகளையும் சார்ந்த பிரமுகர்களது அரசியல் முழுவதும் தமது தனிப்பட்ட நலன்களையும் தம்மைச் சார்ந்ததோரது நலன்களையும் வர்க்க சாதிய அடிப்படையில் மேம்படுத்துவதற்கு அப்பால் ஒரு அடி கூட நகரவில்லை.

1931ல் கிட்டிய சர்வசன வாக்குரிமையை மக்களுக்கு அரசியல் அறிவூட்டி அவர்களை ஒரு அரசியல் சக்தியாக விருத்தி செய்யுமளவுக்கு அவர்கட்கு அக்கறை இருக்கவில்லை. முந்திய தசாப்தங்களிற் சமூகத்தில் ஓரளவு ஊடுருவியிருந்த பிரதேச இன, மத, சாதிய வேறுபாடுகளை எவ்வாறு தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த இயலும் என்பதிலேயே அவர்களது கவனங் குவிந்திருந்தது. எனவே பின்னர் தேசிய அரசியற் கட்சிகளாக உருப்பெறக்கூடிய அமைப்புகளில் ஒவ்வொன்றும் தன் இன அடையாளத்தை வெளிவெளியாகப் பிரகடனம் செய்வதாகவே அமைந்தது. இவ்விடத்து 1936ம் ஆண்டு டி. எஸ்.சேனநாயக்க தலைமையில் உருவாக்கப்பட்டதான சிங்களவர்களை மட்டுமே கொண்ட அமைச்சர் குழு கவனத்திற்குரியது. பின்னைக்காலப் பேரினவாத அரசியற் போக்குக்கு ஒரு முன்னெச்சரிக்கையாகவோ வெள்ளோட்டமாகவோ இதைக் கொள்ளலாம். (1943ல் பாரொன் ஜயதிலகவின் சாவையடுத்து அந்த அமைச்சர் குழுவில் படு பிற்போக்குவாதி யானவரும் தனது தந்தையான பொன்னம்பலம் அருணாசலத்திலும் வேறுபட்டவருமான அருணாசலம் மகாதேவா எனும் தமிழ் சேர்க்கப்பட்டார். மேற்படி தனிச்சிங்களவர் அமைச்சர வையை அமைக்கத்திட்டத்தீட்டியதில் பின்னர் 'தமிழ் ஈழம்' என்றகருத்தை 1956ல் முன்வைத்தவரும் 1967ல் தொடங்கிய தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் சாதித்தடிப்புடையோருக்காக வாதாடி நின்ற வருமான சி. சுந்தரலிங்கம் முன்னின்றமையும் தமிழ்த் தேசியவாதாத் தலைமைகளின் இயல்பிற்கு ஒரு எடுத்துக்காட்டு எனலாம்.

1936க்குப் பின்பு உருவான அமைப்புக்களில் முக்கியமான ஒன்றாக ஓரளவு முற்போக்கு முனைப்புடைய எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவின் தலைமையில் 1937ல் உருவாக சிங்கள மகாசபை இருந்தது. பிரித்தானிய விசுவாசியான பொன்னம்பலம் ராமநாதனால் டொனமூர் பரிந்துரைகளை மாற்ற இயலவில்லை. அவரிடம் இருந்த தமிழ் இனவாத அரசியல் வெகுசனத்தன்மை அற்ற மேட்டுக்குடி அரசியலாக இருந்தது. எனவே ஒரு தமிழ்த் தேசியவாத நோக்குடைய அரசியற் கட்சி ஒன்று அவரது காலத்தில் உருவாகவில்லை. 1930ல் அவரது மறைவின் பின்பு தனிமனித ஆளுமையின் மீது தங்கியிருந்த வடபுலத்துத் தமிழ் மேட்டுக்குடி அரசியலில் தலைமைக்கான ஒரு வெற்றிடம் இருந்தது. ஜி.ஜி. பொன்ன ம்பலம் அதைத் தனது நாவன்மையாலும் அரசியல் தந்திரோபா யங்களாலும் தனதாக்கிக் கொண்டார். 1944ல் அவர் தமிழ்க் காங்கிரஸ் என்ற யாழ்ப்பாணமையக் கட்சியைத் தொடக்கினார்.

எனவே 1936ல் வெடித்த உலகப் போரின் விரிவாக்கலின் விளைவான தாக்கம் இலங்கையில் 1940 அளவில் உண ரப்படும் வரை இலங்கையைப் பல இனங்கள் கொண்ட ஒரு தேசமாக நோக்கி அவற்றின் ஒற்றுமையின் அடிப்படையில் இலங்கைக்குச் சுதந்திரம் கோரி நின்ற அரசியற் கட்சி 1935ல் உருவாக்கப்பட்ட லங்கா சமசமாஜக் கட்சி மட்டுமே என்பது கவனத்துக்குரியது. லங்கா சமசமாஜக் கட்சியின் வேர்கள் தெற்கில் சூரியமலர் (பூவரசம்பூ) இயக்கத்தினுள்ளும் வடக்கில் வாலிபர் முன்னணியிலும் இருந்தன. எனலாம். இர ண்டு அமைப்புக்களினுள்ளும் சமூக ஒடுக்குமுறைகட்கு எதி ரான சிந்தனை கொண்டவர்கள் இடதுசாரிச் சிந்தனையாற் கவரப்பட்டு சமசமாஜக்கட்சியை நெருங்கி வந்தனர். மற்றவர்கள் தமது மிதவாதப் போக்கிற்கமைய ஒதுங்கி நின்று காலப்போக்கில் தேசியவாத அரசியலிலோ பிற்போக்கான பழைமைவாதத்திலுள்ளோ இணைந்து கொண்டனர்.

இடதுசாரி இயக்கமாகத் தோற்றமளித்த ஏ.ஈ. குணசிங்ஹவின் இலங்கைத் தொழிலாளர்கட்சியின் பேரினவாத அரசியற் சந்தர்ப்பவாதம் அதன் வளர்ச்சிக்குக் கைகொடுக்கவில்லை. தொழிலாளி வர்க்க ஒற்றுமையை சிங்களப் பேரினவாதத்தைக் கொண்டு குலைக்க முன்னின்ற குணசிங்ஹவால் ஒரு குறிப்பிடத்தக்க அரசியல் சக்தியாக நிலைக்க இயலவில்லை.

பிரித்தானியக் கொலனி ஆட்சி குணசிங்ஹவிடம் காட்டிய சகிப்புத் தன்மையை சமசமாஜக் கட்சியிடம் காட்ட ஆயத்தமாக இருக்கவில்லை. ஏனெனில் சமசமாஜக் கட்சியின் அரசியல் இலங்கையில் கொலனி ஆட்சியின் நிலைப்புக்கு எதிரான ஒரு சவாலாக இருந்தது. நகரத் தொழிலாளி வர்க்கம் வளர்ச்சி பெற்ற கொழும்பிலும் மேல் மாகாணத்திலும் தென் மாகாணத்திலும் சப்ரகமுவமாகாணத்திலும் அதன் செல்வாக்கு வலுவாக இருந்தது. குறிப்பாக மலேரியா எதிர்ப்புப் பணியில் அரசாங்கமே இடதுசாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டிய ஒரு நிலை உருவான அளவுக்கு அதன் மக்கள் பணி அமைந்திருந்த பின்னணியில் எடுத்த எடுப்பிலேயே சமசமாஜக் கட்சியைத் தடை செய்வது அது முன்னெடுத்த கொலனிய எதிப்புக் கொள்கையை ஒரு வெகுஜன இயக்கமாக்கி விடும் என்பது கொலனிய எசமானர்கள் அறிந்த விடயமே. எனவே உரியத ருணம் வரும் வரை அவர்கள் காத்திருந்தனர்.

அதே வேளை சிலர் கற்பனை செய்வது போல சமசமாஜக் கட்சியோ அதன் தொடர்ச்சியாக உருவான இடதுசாரி இயக்கமோ நாடளாவிய ஒரு அரசியல் சக்தியாக இருக்கவில்லை. அதன் செல்வாக்கு தொழிற்சங்கப் பணிகள், சமூகப் பணிகள், சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான நடவடிக்கைகள் போன்று அது முன்னெடுத்த சமூக அரசியற் பணிகளின் அடிப்படையில் உருவானதால் எல்லா மாகாணங்களிலும் அது வலுவான ஒரு சக்தியாக இருக்கவில்லை. அதை விட விவசாயிகளிடையே ஒரு வலுவான இயக்க

## கொலனிய நீக்கமா நீடிப்பா?

த்தைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் அப்போது முன்னெடுக்கப்படவில்லை எனலாம்.

நாடளாவிய ஒரு இயக்கமாகச் சமசமாஜக் கட்சி உருவாவதற்கும் ஒரு தேசிய விடுதலை இயக்கத்தை வழிநடத்துவதற்குமான வாய்ப்பை அதன் தலைமையில் இருந்த சிலரது வர்க்கப் பின்னணியும் அதன் அடிப்படையிலான உலகநோக்கும் அதற்குக் கிட்டாமல் மறுத்தன. சமசமாஜக் கட்சியின் தலைமையில் இருந்த ஒரு பகுதியினர் தம்மிடையே இரகசியமாகப் பேணி வந்த ட்ரொட்ஸ்கியக் கொள்கையை அக் கட்சியின் மீது திணிக்க முற்பட்டதோடு சமசமாஜக் கட்சி தன் முன்னாலிருந்த வரலாற்றுப் பணியிலிருந்து விலகத் தொடங்கியது. மேல் நாட்டில் தமது படிப்பை முடித்துவிட்டுத் திரும்பிய வசதிபடைத்த சிங்களக் குடுப்பங்களைச் சேர்ந்தவர்களே சமசமாஜக் கட்சியில் ஆதிக்கத்திலிருந்தனர். அவர்களிற் சிலர் இலங்கை திரும்புவதற்கு முன்பே ட்ரொட்ஸ்கியத்தால் ஈர்க்கப்பட்டவர்களாயிருந்தனர். இவர்களில் முக்கியமானவர்களாக பிலிப் குணவர்த்தன, லெஸ்லி குணவர்தன, கொல்வின் ஆர்.டி. சில்வா என்பவர்களைக் கூறலாம். என்றைக்குமே இவர்கள் ஒரு முழுமையான மாக்ஸியவாதியாகக் கருதாத என்.எம். பெரேரா அவரது அதி உயர்வான கல்வித் தகுதி காரணமாக இவர்களால் விரும்பப்பட்டார். சூரிய மலர் இயக்கத்தின் போதும் மலேரியா எதிர்ப்புப் பணிகளின் போதும் சப்ரகமுவ மாகாணத்தில் வெகுசன மதிப்பை வென்றவரான என்.எம். பெரேரா உள்ளார ஒரு சீர திருத்தவாதியாகவே இருந்தார். ஸ்தாலினின் தலைமையிலான மூன்றாவது அகிலத்தை எதிர்க்க சமசமாஜக் கட்சியில் இருந்த ட்ரொட்ஸ்கியவாதிகள் 1939ல் எடுத்த முடிவு அதனை உலக சோஷலிஸ இயக்கத்தினின்று மட்டுமன்றி 1940ன் பின்பு கொலனிய எதிப்புப் போராட்டங்களிலிருந்தும் தனிமைப்படுத்தவே உதவியது. அத்துடன் சூழ்ச்சிகரமான முறையிற் சிந்தித்த ட்ரொட்ஸிவாதிகள் தமது எண்ணத்தை எதிர்ப்பின்றிக் கட்சியின் மீது திணிக்கும் நோக்குடன் கட்சிக்குள் இருந்த நேர்மையான கம்யூனிஸ்ட் தலைவர்களை வெளியேற்றியதாகவும் அறிவித்தனர். இதனால் அன்று ஏறுதிசையில் இருந்த இடதுசாரி இயக்கம் ஒரு பாரிய பின்னிடைவைச் சந்தித்தது.

1939- 40 கால கட்டத்திலேயே மலையகத்தில் இடதுசாரித் தொழிற்சங்க இயக்கம் காலூன்றியதும் கவனத்துக்குரியது. கொலனிய ஆட்சி இடதுசாரி இயக்கத்தை நசுக்குவதற்குக் கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் தவறவிடவில்லை. இதிலே கொலனியாட்சியின் பொதுவான கொள்கைக்கும் நிலைப்பாட்டுக்கும் அப்பால் இலங்கையிலிருந்த கொலனிய நிருவாக யந்திரத்தின் பல வேறு பொறுப்புக்களில் இருந்தவர்களும் தமக்கேயுரிய விதமான முறைகளிலும் பங்களிப்பைச் செலுத்தினர். பிறேகேடில் சம்பவம் என்பது இவ்விடயத்தில் குறிப்பான கவனத்திற்குரிய ஒன்றாகும்.

அவுஸ்திரேலியாவிற் குடியேறிய ஆங்கிலேயரான மாக் அன்ற்றனி பிறேஸ்கேடில் 1936ல் மலையகத் தேயிலைத் தோட்டமொன்றில் நிருவாகியாகப் பதவியேற்க வந்தார். தோட்டத் தொழிலாளர் நடாத்தப்படுகிற விதம் இடதுசாரிச் சிந்தனையுள்ள அவருக்கு வெறுப்பூட்டியது. மலையகத்தில் நடக்கிற அட்டூழியங்கள் பற்றி அவர் பகிரங்கமாகப் பேசத் தொடங்கினார். பின்னர் சமசமாஜக் கட்சியின் பொதுக் கூட்டங்களிலும் பேசத் தொடங்கினார். அதனாற் பதவிநீக்கப்பட்ட அவரை நாட்டைவிட்டு வெளியேற்றும்படி கொலனியாட்சி 1937 ஏப்ரலில் ஆணை பிறப்பித்தது. ஆனால் அவரைப் பிடிக்க முடியாதபடி சமசமஜாக்கட்சியினர் அவரைப் பாதுகாப்பாக வைத்திருந்தனர். ஆளுனர் எட்வட் ஸ்ற்றப்ஸ் மீது சட்டசபை உறுப்பினர்கள் பலருக்கு இருந்து வந்த மனத்தாபங்களுஞ் சேர அவரை வெளியேற்றுவதற்கு எதிரான கருத்துக்கள் வலுப்பட்டன. இச் சம்பவம் மலையகத்திலும் நாடளாவிய முறையிலும் சமசமா ஜக்கட்சியின் செல்வாக்கை மேம்படுத்தியது. இது கொலனி ஆட்சிக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியது. இந் நிலையில் நீதிமன்ற குறுக்கிட்டு மூலம் வெளியேற்றல் ஆணை செல்லாமலாக்கப்பட்டது. பிரேஸ்கேடில் விடுதலையை வேண்டிச் சமசமாஜக் கட்சி நடத்திய கூட்டங்களில் ஒன்றில் எஸ்.டபிள்யூ-ஆர்.டி பண்டாரநாயக்கவும் பங்கு பற்றியதன் மூலம் தன்னைக் கொலனிய நிருவாகத்திற்கு எதிரானவர்களுடன் அடையாளப்படுத்திக் கொண்டார்.

சமசமாஜக் கட்சிக்கு மலையகத்தில் பெருகிய செல்வாக்கின் நடுவே 1939- 40 காலப்பகுதியில் அதன் தொழிற்சங்க வேலைகளை விரிவுபடுத்தியது. இதே காலகட்டத்திலேயே இலங்கை-இந்திய காங்கிரஸ் என்ற அமைப்பு மலையகத்தில் நிறுவப் பட்டது. மலையகத்தில் ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்வு பரவுவதையும் இடதுசாரிகள் அங்கு வலுப்பெறுவதையும் கொலனிய நிருவாகம் விரும்பவில்லை. 1940 ஜனவரியில் முல்லோயா தோட்டத்தில் சமசமாஜக் கட்சிச் சார்பான அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் வழிநடத்தலில் நடந்த வேலை நிறுத்தத்தை முறியடிக்க பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. அதில் துப்பாக்கிச்

**மலையகத்தில் 1939-40ல் சமசமாஜக் கட்சியின் தொழிற்சங்கம் உருவாகி வளர்ந்தது. 1940 ஜனவரியில் முல்லோயாத் தோட்ட வேலைநிறுத்தத்தில் பொலீஸ் துப்பாக்கிச்சூட்டிற்கு கோவிந்தன் என்ற தொழிலாளி பலியாகி மலையகத்தின் முதலாவது தியாகியாகினார்.**

சூட்டுக்கு இரையாகிய கோவிந்தன் எனும் தொழிலாளி மலையகத்தின் முதலாவது பாட்டாளி வர்க்கத் தியாகியானார். பின்னர் ஊவா மாகாணத்தில் வீவேசா தோட்டத்தில் நடந்த போராட்டமும் மலையகத் தோட்டத்தொழிலாளரது போர் குணமிக்க ஒரு எழுச்சியாகும்.

இத்தகைய ஒரு பின்னணியிலேயே சமசமாஜக்கட்சியின் தலைவர்கள் சிலர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். அக்கட்சியில் உருவான ஐக்கிய சோஷலிசக் கட்சியும் (பின்னர் கம்யூனி ஸ்ட் கட்சியாக வடிவெடுத்தது) சமசமாஜக்கட்சியும் கொலனிய ஆட்சியாளர்களால் இரண்டாம் உலகப் போரைக் காரணமாக வைத்து பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1942ம் ஆண்டு தடை செய்யப்பட்டன. இவ்வாறு இரண்டாம் போர் வரையிலான காலம் உண்மையான கொலனிய எதிர்ப்பாளர்கள் யார் என்பதை மிகத் தெளிவாகவே உணர்த்தி நின்றது.

வளரும் -

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# ஏ.9 பாதைத் திறப்பு மக்களுக்கு ஆறுதல் தருமா?

கடந்த 02.03.2009 அன்று வடக்கையும் தெற்கையும் இணைக்கும் நெடுஞ்சாலை ராணுவத்தால் மீண்டும் திறக்கப்பட்டதாக அறிவிக் கப்பட்டுள்ளது. கண்டி - யாழ்ப்பாண நெடுவீதியே ஏ.9 எனக் குறிப்பிடப்படுவதாகும். இந்நெடுசாலை கடந்த கால் நூற்றாண்டு கால போராட்ட- யுத்த சூழலில் இரண்டு தடவைகள் மூடப்பட்டு திறக்கப்பட்டன. கடைசியாக 2006ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மூடப்பட்டது. முழு வீதியும் மூடப்படாது முகமாலை முன்னரங்கப் பகுதியிலேயே நிரந்தர மூடல் இடம் பெற்றது. அதன் மூலம் குடாநாட்டுக்கு வீதி மூடப்பட்டதே தவிர புலிகள் இயக்கத்தின் கீழ் இருந்த வன்னிப் பிரதேசத்தில் ஏ9 பாதை திறக்கப்பட்டும் போக்குவரத்து இடம் பெற்றும் வந்தது. ஆனால் குடாநாட்டு மக்கள் விமானக் கம்பனிகளுக்கு ரூபா இருபதினாயிரம் தாரைவார்த்தும் யாழ்ப்பாணத்தில் ராணுவ அனுமதி பெற நரக வேதனை அனுபவித்தும் கொள்ள வேண்டியிருக்கிறது. இப்பொழுது ஏ9 நெடுஞ்சாலை மக்களது போக்குவரத்திற்கு திறந்து விடப்படும் என்ற அறிவிப்பு அடிக்கடி விடப்படுகிறது. ராணுவத்தேவைக்குப் பயன்படுத்தப்பட்டுவரும் அப்பாதை முதலில் வட பகுதிக்கான அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்படும் எனவும் அதற்குப் பின் மக்களின் போக்குவரத்திற்கு அனுமதிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. ஆனால் மக்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு ஏ9 பாதை திறப்பும் பிரயாண நடைமுறைகளும் இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. எத்தனை சட்ட திட்ட நடைமுறைகள் விதிக்கப்படும் என்றோ எத்தனை கட்டுப்பாடுகளுக்கு ஊடாக ஏ9 பாதையில் பிரயாணிகளான மக்கள் வாட்டி வதைக்கப்படுவார்கள் என்றோ தெரியாது. முன்பு இந்திய ராணுவம், இலங்கை ராணுவம் விடுதலைப் புலிகளின் ராணுவம் என்பவற்றின் கீழ் மக்கள் அனுபவித்தமை கொஞ்ச நஞ்சமல்ல. குறிப்பாக தமிழ் மக்களுக்கு விடுதலை பெற்றுத் தர நின்ற புலிகள் ஏ9 பாதைப் பயணிகளை நடாத்திய விதம் மிக்க கடுமையானதாகும். அங்கு நில், இங்கு இரு, அதில் படிவம் நிரப்பு, இதற்கு இவ்வளவு வரி, போக்குவரவுக்கு இத்தனை ரூபா கட்டணம், கண்காணிப்பு, விசாரணை என மக்கள் வேதனைப்பட்ட பயணத்தையே மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதற்கும் அப்பால் ராணுவச் சோதனைச் சாவடிகளில் மக்கள் கஷ்டங்களையே அனுபவித்தனர். இவ்வாறு ராணுவக் கட்டுப்பாடு புலிகளின் கட்டுப்பாடு என்ற இரண்டு பிரதேசங்களுக்கு ஊடாக வடபகுதிக்கு ஏ9 நெடுஞ்சாலையால் பயணித்த மக்கள் நெருப்பாறு கடக்கும் மனநிலையில் கஷ்டங்கள் வேதனைகள் மன அழுத்தங்களின் மத்தியிலேயே சென்று வந்தனர். பின்பு ஏ9 மூடப்பட்ட பின் விமானக் கப்பல் பயணங்கள் முன்னைய அவலங்கள் போன்றே அமைந்து கொண்டன. பண வசதியற்ற மக்கள் கப்பலையும் ஓரளவு பணவசதி கொண்டவர்கள் விமானப் பயணத்தையும் மேற்கொண்டனர். ஆனால் விமானப் பயணம் வெறுத்த ஒன்றேயாகியது. இருபதினாயிரம் ரூபாவை (கொழும்பு சென்னைக்கு ஆகக் குறைந்த விமானக் கட்டணம் ரூபா பதின்மூவாயிரம்) சுளையாகப் பெறும் விமானக் கம்பெனிகள் மக்களை ஆடுமாடுகள் போன்றே நடாத்தும் அநாகரீகத்தை கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் காணமுடிகிறது. பிரயாணிகள் பயணச் சீட்டுப் பெறச் சென்றால் படுத்தும் பாடும் நடந்து கொள்ளும் முறைகளும் கீழ்த்தனமானதாகும். இவ்வளவு பணத்தைக் கறந்து விட்டு பிரயாணிகளை அவமதிக்கும் செயல்கள் சர்வசாதாரணமாகவே இடம் பெறுகிறது. இது பற்றி பொறுப்பான எவருமோ ஊடகங்களோ கேட்பதில்லை. பாராளுமன்ற உறுப்பினர் களோ மக்கள் பிரதிநிதிகள் எனப் பவனி வருபவர்களோ தட்டிக் கேட்பதில்லை. யாழ்ப்பாண விமானச் சேவை தனிக்காட்டு ராஜா போன்று மக்களை நடாத்துவது ஏ9 மூடியதன் விளைவானதாகும். இதில் அரசாங்கம் மௌனம் சாதிக்கிறது. அதில் ஏதோ ஆதாயம் வருவதாலேயே அதிகாரிகளும் சம்மந்தப்படுவோரும் கண்டும் காணாதது போன்று இருந்து வருகிறார்கள். இந்நிலையில் ஏ9 பாதை திறப்பு என்பது யாழ்-கொழும்பு பிரயாணிகளுக்கு நற்செய்தி போன்று காணப்படுகிறது. ஆனால் என்னென்ன நடைமுறைகள் கட்டுப்பாடுகள் சோதனைகள் வரப்போகின்றனவோ தெரியாது. எவ்வகைக் கட்டணங்கள் அறவிடப்படப் போகின்றனவோ என்றும் தெரியாது. அவற்றில் யார் யார் பங்குபோட்டுக்கொள்ள வசதியாகக் கட்டண அறவீடுகள் அமையப் போகின்றனவோ தெரியாது. புலிகள் வகித்த இடத்தை யார் யார் வகிக்கப் போகின்றார்களோ தெரியாது. ஆட்கள் மாறினாலும் ஆதிக்கங்கள் மாறுமா என்றே மக்கள் சிந்திக்கிறார்கள். அரசாங்கம் ஒருபுறத்தால் பேரினவாத அடக்கு முறைகளை நடைமுறைப்படுத்த தமிழர் இயக்கங்கள் மறுபுறத்தில் தத்தமது ஆதிக்கங்களை வலுப்படுத்த தமிழ் மக்களின் தலைகளே மிளகாய் அரைக்கும் அம்மிகளாகத் தொடர்ந்தும் இருக்கப் போகின்றதா. இது தான் ஏ9 பாதைப் பயணத்திலும் தொடருமா அல்லது கடந்த கால வேதனைமிக்க நடைமுறைகள் இன்றி சுதந்திரமான போக்குவரத்திற்கு ஆவண செய்யப்படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எதுவானாலும் மந்தைக் கூட்டம் போல் மேய்க்கப்படுவதற்கு இனிமேலும் தமிழ் மக்கள் இடம் கொடுக்காத புதிய நிலை தோன்ற வேண்டும். அல்லாது விடின் புதிய மேய்ப்பர்கள் தமிழ் மக்களை அடக்கி ஆதிக்கம் செய்யவே முற்படுவர். யாவும் மக்களின் விழிப்புணர்விலும் தூர நோக்கிலான அரசியல் தெளிவிலுமே தங்கியுள்ளது.

வடபுலத்தான

# 16 சிங்கள விவசாயிகள் படுகொலை

கடந்த பெப்பவரி 21ம் திகதி அம்பாறை மாவட்டத்தின் கரமிட்டிய கிராமத்தில் இனம் தெரியாத ஆயுத தாரிகள் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் பதினாறு விவசாயிகள் கொல்லப்பட்டனர் இவர்களில் சிறுவர்கள் பெண்கள் அடங்கியிருந்தனர். மிகவும் மிலேச்சத்தனமான வகையில் சாதாரண சிங்கள விவசாயிகளான அம் மக்கள் படுகொலைகளுக்கு ஆளாகினர். ஒன்றுமறியாத அவ் விவசாயிகள் என்ன குற்றம் செய்தனர். இப்படுகொலைகளைப் புலிகளே செய்தனர் என்றே நம்பப்படுகிறது. பழிக்குப் பழி என்ற ரீதியிலோ அன்றி கவனத்தை திசைத்திருப்பும் நோக்குடனோ இக்கொலைகள் செய்யப்பட்டிருக்கலாம் என்றே கூறப்படுகிறது. இவ்வாறு செய்து கொண்டதன் மூலம் எந்தப் பயனை அவர்கள் அடைய முடியும். இவ்வாறான சிங்கள விவசாயிகளும் எல்லைப்புற மக்களும்



படுகொலைகளுக்கு ஆளாகியமை இதுதான் முதல் தடவையல்ல. முன்பு இடம் பெற்ற இத்தகைய கொலைகள் தாக்குதல்கள் மிரட்டல்களால் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி பல்வேறு பிரதேசங்களிலும் அகதி முகாம்களில் சிங்கள மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் அகதி முகாம்களில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் அதேயளவு துயரங்களையும் நெருக்கடிகளையும் கொண்டவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். சிங்களவர்கள் என்பதற்காக அம் மக்களுக்கு அரசாங்கமும் அதிகாரிகளும் விஷேட சலுகைகள் எதனையும் வழங்கவில்லை. ஏனெனில் அவர்கள் கிராமிய விவசாயிகளும் எல்லைப்புற வாசிகளுமாவர்.

இப்படுகொலைகளை தமிழர் தரப்பில் இருக்கும் சில வக்கிரம் படைத்தோர் நியாயப்படுத்தவே செய்வர். நாளாந்தம் தமிழர் கொல்லப்படும் போது இது பெரிய விடயமா என்று கேட்பர். அப்படிச் செய்தால் தான் பாடம் புகட்ட முடியும் என்றும் ஆவேசக் கதை கதைப்பர். இத்தகைய இன வக்கிரப் பார்வையும் செயற்பாடும் தான் இனப் படுகொலைகளுக்கும் அதன் நீடிப்பிற்கும் காரணமாகும். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் புறந் தள்ளப்படவும் பேரினவாதம் தலைவிரித்தாடவும் உரிய சூழலை வளர்த்து வந்ததே இவ் இன வக்கிரப் போக்கேயாகும். பேரினவாதத்தால் குறுந் தேசிய வாதம் வளர்க்கப்பட்டது. குறுந் தேசியவாதத்தால் பேரினவாதம் ஊட்டம் பெற்றது. இதன் விளைவாக சாதாரண தமிழ் மக்களும் சாதாரண சிங்கள் மக்களும் உயிர் உடைமைகள் இருப்பிடங்கள் இழந்து ஏதிலிகளாகினர். இன மொழி மதத்தால் வேறுபட்ட சாதாரண உழைக்கும் மனிதர்களான தமிழரும் சிங்களவரும் முஸ்லிம்களும் கொலைகளுக்கும் கொடுமைகளுக்கும் ஆளாக்கப்பட்டனர். இது தான் இன்றும் தொடர்கிறது. இன்று புதுக்குடியிருப்பில் பேரினவாத அரசாங்கம் தரை ஆகாயம் கடல் வழியாகக் குண்டுகள் வீசித் தமிழ் மக்களைத் தினம் தினம் கொன்றொழித்து வருவது எவ்வளவு கொடுமையோ அதற்கு எவ்விதத்திலும் குறைவில்லாத கொடுமையே பதினாறு சாதாரண விவசாயிகளான சிங்கள மக்கள் அம்பாறை மாவட்டத்தில் கொல்லப்பட்டமையாகும். ஒரு முதலாளித்துவ ஒடுக்கு முறை அரசாங்கம் மனித நேயமற்ற வழிகளில் தமிழ் மக்களைக் கொல்லும் அதே வேளை ஒரு விடுதலைப் போராட்டம் நடாத்தும் எந்தவொரு இயக்கமும் அரசாங்கம் போன்று நடந்து கொள்ள முடியாது. அப்படி நடந்து கொண்டால் அது உண்மையான விடுதலை இயக்கமாகவும் இருக்கமாட்டாது.

எனவே தான் அம்பாறையில் சிங்களக் கிராமத்தில் ஒரே இரவில் குழந்தைகள் உட்பட விவசாயிகளைப் படுகொலை செய்த கொடூரச் செயல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும். கடந்த முப்பது வருடங்களாகத் தொடரும் பழிக்குப் பழி என்ற நடைமுறை மாற்றப்படாது விட்டால் தமிழ்த் தேசிய இனத்திற்கு விடிவே கிடைக்க மாட்டாது. அழிவுகள் மட்டுமே எஞ்சும்.

# கண்டதும் கேட்டதும்

செய்திக் கோப்பு

ஏசெங்குருவி

## ஏன் இந்த ஏமாற்று

மகிந்த சிந்தனை அரசாங்கம் தேசிய உற்பத்திக்கு வழிகாட்டுவதாகவும் மேற்குலக முதலாளித்துவத்தை நிராகரித்து வருவதாகவும் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினரும் சுற்றாடல் அமைச்சருமான சம்பிக்க ரணவக்கா கூறியிருக்கிறார். ஆனால் இதே மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் கீழ் மத்திய வங்கி ஆளுனர் காபிரேல் நிவாட் சர்வதேச நாணய நிதியத்துடன் இருபதினாயிரம் கோடி ரூபா கடன் பெற ஒப்பந்தம் செய்துள்ளார். அடுத்து உலக வங்கியிடமிருந்தும் கடன் பெற பேச்சுவார்த்தை நடைபெற இருக்கிறது. இந்த இரண்டு நிதி நிறுவனங்களும் யாருடையவை என்பதை பச்சை இனவாதியான சம்பிக்க அறியவில்லையா?

## அந்தோ பரிதாபம்

அண்மைக் காலங்களில் இடம் பெற்றுவந்த மாகாண சபைத் தேர்தல்களில் ஜே.வி.பி படுதோல்வி கண்டு வருகின்றது. இதனைக் கிண்டலடித்த அரசாங்க அமைச்சர் ஒருவர் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது ஜே.வி.பி. பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களிலாவது வெற்றி பெறக் கூடியதாகத் தம்மை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறியுள்ளார். இனவாதத்தை மூலதனமாக்கி அரசியல் செய்த ஜே.வி.பி. பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. மதிகெட்டு வரும் முன்னே. கேடு கெட்டுவரும் பின்னே!

## அண்ணனும் தம்பியும்

மேல் மாகாணத்தில் அரசுடன் இணைந்து தாம் போட்டியிடுவது தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்கவே என்று அண்ணன் ஆறுமுகன் தொண்டமான் கூறியுள்ளார். அதே வேளை மலையகத்தில் ஏற்பட்ட தோல்விக்கு காரணம் அரசாங்கத்தின் மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பே என்று அமைச்சர் சந்திரசேகரன் கூறியுள்ளார் இந்த இரு மலையகக் கனவான்களும் அரசுடன் ஒட்டியிருப்பது தமது சொந்த நலன்கள் தேவைகளுக்கானவை என்பதை பகிரங்கமாக ஒப்புக் கொள்வார்களா?

## ஒரு குள்ளநரியின் குரல்

இலங்கைத் தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளில் காங்கிரசுக்கும் தி.மு.க விற்கும் ஒரு குன்றிமணி அளவுக்கு கூட வேறுபாடோ மாறுபாடோ இருந்ததில்லை. அதனாலேயே மத்திய ஆட்சியிலும் மாநில ஆட்சியிலும் இரு கட்சிகளுக்கிடையில் தொய்வோ இடைவெளியோ ஏற்படவில்லை. இவ்வாறு கூறியிருப்பவர் தமிழகத்தின் அரசியல் குள்ள நரியான மு. கருணாநிதியாகும்.

## வெள்ளை வான் இரகசியம்

அவசரகாலச் சட்டத்தின் கீழ் பொலிசார் தமது வாகனத்தில் வந்து தான் கைது செய்ய வேண்டியதில்லை. வெள்ளை வானிலும் வந்து கைது செய்யலாம். இவ்வாறு பொறுப்பான அமைச்சர் ஒருவரே வாய்விட்டுக் கூறியுள்ளார். அப்படியானால் வெள்ளைவான் பொலிசாரிடமும் தாராளமாக இருந்து வருகின்றது என்ற இரகசியம் இப்போது அம்பலத்திற்கு வந்துள்ளது. எனவே காணாமல் போயுள்ள பலரைப் பற்றி பொலிஸ் நிலையங்களில் தேட முடியும் என்ற நிலை தோன்றியுள்ளது.

## பாராளுமன்றமும் சாப்பாடும்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்தம் 225 பேர். இவர்களில் அமைச்சர்கள் 110 பேர். பாராளுமன்றக் கூட்டங்களில் குறைந்தது 20 பேராவது இருந்தால் தான் சபை நடவடிக்கை தொடரும். அதற்கு உறுப்பினர்கள் போதாது விட்டால் கோரம் இல்லை என்பதால் கோரமணி அடித்து ஒலி எழுப்பப்படும். இவ்வாறு 05-03-2009 அன்று பாராளுமன்றத்தில் ஐந்து தடவைகள் கோரமணி எழுப்பப்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கூறினார் அரசாங்க உறுப்பினர்கள் பாராளுமன்றம் வருவது நன்றாக சாப்பிடுவதற்கேயாகும். அதற்கு அரசாங்கத்தரப்பு உறுப்பினர் பதில் கூறும்போது. எதிர்க்கட்சியினரும் சாப்பிடுவதற்கே இங்கே வருகிறார்கள் என்றார். மொத்தத்தில் பாராளுமன்ற உணவகத்தில் மானிய விலையில் சகலவகை உணவுகளும் உண்டு என்பது முன்பு தெரிந்ததே. உண்டு களிப்போர் சிலர் உணவின்றித் தவிப்போர் பலர். என்று மாறும் இந்த நிலை. இது முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் ஒரு பகுதியாகும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# அமெரிக்காவின் நிதி நெருக்கடி இலங்கையைப் பீடிக்கிறது.

உலகின் பெரிய வங்கிகள் அறவிட முடியாக் கடனாக எவ்வளவு தொகையைப் பதிவழித்துள்ளன என்பதையும் வங்கி களைக் காப்பாற்ற அமெரிக்க பிரித்தானிய அரசாங்கங்கள் பாரிய நிதிப் பொதிகளை வழங்கி வருவதும் இடம் பெற்று வரும் முதலாளித்துவத்தின் சோக நிகழ்வாகும். இது முதலாளித்துவ ஏகாதிபத்திய நெருக்கடியின் தவிர்க்கவியலாத நிலையாகும். இலங்கையின் நிதி நிலைமை சீராகவே உள்ளது என மத்திய வங்கியின் ஆளுநர் கூறிவருகிறார். அவர் எவ்வாறு கூறினாலும் இலங்கை ஒரு பெரு நெருக்கடியை நோக்கியே செல் வதை பொருளியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர். பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு அதிகாரியின் தகவலின்படி இலங்கையின் வங்கித்துறை அறவிட முடியாக்கடனாகப் பத்தாயிரம் கோடி (10000) ரூபாவை எட்டியுள்ளது. கடனைப் பெற்றவர்கள் பெற்ற கடனை மூன்று மாதங்களுக்கு மேல் மாதாந்த தொகையை திருப்பிச் செலுத்தாதிருந்தாலோ அல்லது கடனுக்கான வட்டியைச் செலுத்தாதிருந்தாலோ அக்கடன்கள் கடப்பாடுகள் நிறைவேற்றப்படாத கடன்களாகக் கருதப்படும. அந்த வகையிலேயே வங்கிகளில் 10000 கோடி ரூபாய் கடன் தொகை உள்ளது.

கைத்தொழில் துறையாளர்கள் தற்போதைய பொருளாதாரச் சூழலில் இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு அவற்றுள் சில மூட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் உள்ளாகியுள்ளன. இலங்கையில் உத்தியோக பூர்வமான நிதித்துறையான வங்கித்துறை 80 வீதத்தை கொண்டுள்ளது. இலங்கையில் 37 உத்தரவு பெற்ற வங்கிகளும் நிபுணத்துவ வங்கிகளும் மத்திய வங்கியின் மேற்பார்வையில் செயற்படுகின்றன. 2007ம் ஆண்டு ஆகஸ்ட் மாதமளவில் கட்டுப்பாடு நிறைவேற்றப்படாத கடனானது சொத்தின் 5.2 வீதமாகவிந்தது. இது ஆகஸ்ட் 2008ல் 6.3 வீதமாக உயர்ந்தது. இந்த அதிகரிப்பானது இரண்டாயிரம் கோடி (2000) ரூபாவை குறிக்கிறது. இக்கடனில் பெரும் பகுதி உறைவிடம் நகை ஈடு கடன் அட்டைத்துறையிலிருந்து உருவானது. அன்றாடச் செலவைச் சமாளிக்க முடியாத நிலையில் மக்கள் தம்மிடமுள்ள நகைகளை அடகு வைக்கிறார்கள். இது அண்மைக்காலமாக அதிகரிப்பை காட்டுகிறது.

இலங்கை ரூபாவை ஸ்திரமான நிலையில் வைத்திருப்பதற்காக மத்திய வங்கி சந்தைக்குள் டொலரை விடுவித்துள்ளது. தினமும் ஒன்றிலிருந்து ஒன்றரைக் கோடி டொலர்கள் சந்தைக்குள் செலுத்தப்பட்டுள்ளது. இது கையிருப்பு அந்நியச் செலவாணியைக் குறைத்துள்ளது. அந்நிய நாடுகள் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளிலிருந்து வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை குறைவடைகிறது. காரணம் அந்த நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தும் வாழ்க்கைச் செலவு உயர்ந்து வருவதால் உல்லாசப் பிரயாணிகளின் வரவு குறைவடைகிறது. அதனால் இலங்கையின் அந்நியச் செலவாணி குறைவடைந்து செல்லும் நிலைதோன்றியுள்ளது.



வால் ஸ்ரீட் சூதாடிகள்

2007ல் ஏற்றுமதியான புடவை தைக்கப்பட்ட ஆடை என்பன இந்தத் துறையின் முழு ஏற்றுமதியில் ஐம்பது வீதமாயிருந்தது. அதே சமயம் ஐரோப்பிய சமூகத்திற்கான ஏற்றுமதி நாற்பத்தைந்து (45) வீதமாயிருந்தது. இந்தத் துறை மூலம் மொத்த அந்நியச் செலவாணி வருமானத்தில் நாற்பத்தி மூன்று (43) வீதம் பெற்றுக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவில் ஐரோப்பாவிலும் நிலவும் நிதி நெருக்கடியால் தைக்கப்பட்ட ஆடை ஏற்றுமதியானது இந்த ஆண்டில் பெரும் பாதிப்புக்குள்ளாகும். இத்தனைக்கும் மத்தியில் அடுத்த நடப்பு ஆண்டிற்கான யுத்த செலவு 17700 கோடி ரூபாவாகும். ஆனால் இத்தொகை மேலும் பல ஆயிரம் கோடி ரூபாய்களால் அதிகரிக்கப்பட்டே வருகிறது. அதற்கான குறை நிரப்புப் பிரேரணைகள் வரவே செய்யும். 2008ல் 16645 கோடி ரூபாவாகவுள்ள யுத்தச் செலவு 2009ல் 6.4 வீத அதிகரிப்பைக் காட்டுகிறது. கடந்த ஆண்டிற்குள் யுத்தம் முடிவுறும் என அரசு தரப்பு கூறிவந்த போதிலும் 2009ம் ஆண்டிற்கு கூடுதல் தொகை ஒதுக்கீடு எதனைக்குறிக்கிறது. இந்நிலையில் நாடு எதிர் கொள்ளவுள்ள நிதி நெருக்கடி மேலும் மோசமடையும் என்பது பொருளாதார வீழ்ச்சி அபாயத்தைத் தோற்றுவிக்கும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

-கரன்-

## ஆள் அமைப்பு ஆளுமை 2

# வீடும் பாடசாலையும்

சி.சிவசேகரம்

சமூகத்தின் மிகச் சிறிய அமைப்பாகவும் சமூக அலகாகவும் இருப்பது குடும்பமாகும். குடும்பத்தின் வரைவிலக்கணமாக ஒரு வீட்டிற் சேர்ந்து வாழும் திருமண இரத்த உறவுடையோர் என்று வைத்துக் கொண்டால் கிராமியக் குடும்பத்திற்கும் பெரு நகரங்களின் குடும்பங்கட்குமிடையே பெரிய வேறுபாடுகளை நாம் அவதானிக்க முடியும். குடும்பம் என்கிற அமைப்பினுள்ளேயே தனிமனித ஆளுமையின் தொடக்கங்கள் அமைகின்றன. குடும்பங்களின் அமைப்பு சமூக அமைப்பில் உள்ள ஒவ்வொரு வர்க்கப் பிரிவிற்கும் ஏற்ப வேறுபடும் அதேவேளை முழுச் சமுதாயத்திற்கும் உரிய பொதுவான தன்மைகளையும் நாம் காணலாம். பால், வயது வேறுபாடு, உறவு, வர்க்கம், சாதி சமயம் என்ற அடிப்படைகளில் ஒவ்வொருவருக்கும் சமுதாயத்தில் நிர்ணயிக்கப்பட்ட இடத்தைக் குடும்பம் என்கிற அமைப்பின் மூலமே ஒவ்வொருவருக்கும் வலியுறுத்தப்படுகிறது.

யாரோடு எப்படிப் பேசுவது பழகுவது என்பனவற்றைக் குடும்பம் என்கிற நிறுவனம் தனது அன்றாட நடைமுறை மூலமும் அவை தொடர்பான விதிகள் மீறப்படும் போது தண்டித்தும் கண்டித்தும் திருத்துத்துவதற்கு முற்படுகிறது. ஒரே சமூகச் சூழலினுள்ளும் குடும்பச் சூழல்கள் வேறுபடலாம். எனினும் குடும்பம் என்ற அமைப்பு அது சார்ந்த சமூகத்தினதும் சமூகப்பிரிவினதும் சிந்தனைகளையும் நடைமுறைகளையும் வலியுறுந்துகிற பணியையே செய்கிறது. ஒரு குடும்பம் அவ்வாறு செய்யத் தவறுகிற போது குடும்பத்தின் நடைமுறைகளின் சரிபிழைகளை விட அக்குடும்பத்தின் செயற்பாடு சமூகத்திற்கு எவ்வளவு தூரம் உடன்பாடானது அல்லது உடன்பாடற்றது என்பதே கேள்விக்குட்படுகிறது. இதன் விளைவாகச் சுற்றம், உறவு எனப்படுகிற பிற குடும்ப அலகுகள் மூலம் நெருக்குவாரங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

நிலவுடைமைச் சமூகக் குடும்பம் என்பது சனநாயகமான அமைப்பல்ல. நிலவுடைமைமையின் சகல பண்புகளையும் உள்வாங்கி ஒரு நிலவுடைமைச் சமூக அலகாகவே அது அமைகிறது. முதலாளியச் சமூகங்களில் உள்ள குடும்பங்கள் முதலாளியச் சமூகத்தினுள்ளே நிலவுடைமைச் சிந்தனையை அதிகளவிற் தக்கவைத்துள்ள அமைப்பு க்களாக இருப்பதை அவதானிக்கலாம். அவை அவ்வாறு இருப்பதன் மூலமே பழமைவாதஞ் சார்ந்த பலவேறு சிந்தனைகளும் மதமும் தொடர்ந்தும் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளுகின்றன. நகரச் சூழலில் கணவன், மனைவி குழந்தைகள் என்ற அளவுக்குக் குறுகிய குடும்பம் என்கிற சமூக அலகினிற் கூடப் பழமை வாதமும் மதமும் ஏதோ வடிவில் தொடருகின்றன. எனவே நிலவுடைமையின் சனநாயகமற்ற அதிகார அடுக்கு முதலாளியக் குடும்பத்தினுள்ளும் தொடருகிறது. எனினும் தனி மனிதர் மீது குடும்பத்தின் அதிகாரம் கிராமச் சூழலை விட நெகிழ்வானதாகிறது. அதைவிடவும், நகர வாழ்வின் யதார்த்தம் சமூக விழுமியங்களில் ஏற்படுத்துகிற தாக்கம் அற விழுமியங்களிலும் வெளிப்படுகிறது.

எவ்வாறாயினும் சரி பிழைகள் நீதி அநீதி செய்யத்தக்கன தகாகன போன்றவை பற்றிய முடிவுகள் சமூகச் சூழலிலிருந்து குடும்பத்தினால் உள்வாங்கப்பட்டு அதன் மூலமே ஒவ்வொருவரையும் முதல்முதலாக வந்தடைகின்றன. சிறு வயதில் இவ்வாறு ஒவ்வொருவரதும் ஆளுமையின் விருத்தியை நெறிப்படுத்துகிற நடத்தை விதிகளும் சிந்தனை முறைகளும் குடும்பம் என்கிற அலகின் மூலமே உள்வாங்கப்பட்டாலும் வளர்ச்சிப் போக்கில் பிற சமூக அமைப்புக்கள் தமது பங்கைச் செலுத்துகின்றன. எவ்வாறாயினும் ஒருவரது ஆளுமையின் விருத்தி குடும்பம் என்கிற சமூக அலகின் நெறிப்படுத்தலுக்குத் தொடர்ச்சியாக உட்படுத்தப்படுகிறது. சமூகத்திலும் குடும்பத்திலும் ஒருவரது வகிபாகம் அவரது வயதுடன் மாற்றம் பெற்றாலும் அதன் வளர்ச்சிப்பாதை சமூக அமைப்பினதும் குடும்பம் என்கிற அமைப்பின் தன்மைகளால் பெருமளவிற்கும் முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்டு விடுகிறது.

குடும்பம் என்கிற அடிப்படையான சமூக அலகு தனிமனித ஆளுமையை முற்றாகத் தீர்மானிக்கக் கூடியதல்ல. ஏனெனிற் குடும்பமும் தனிமனிதர்களும் சமூகத்தினின்றும் வேறுபட்டு இயங்குகிற ஆற்றலை உடையவர்களல்ல. எனவே வயதுக்கேற்ற வளர்ச்சியுடன் சமூகத்திலுள்ள பிற அமைப்புக்கள் மனித ஆளுமை மீது தமது பாதிப்பைச் செலுத்துகின்றன.

சிறுவர்களின் குடும்பச் சூழல் உற்றார், உறவினர் வட்டங்கட்கு வெளியே பாடசாலைகள் அவர்களது ஆளுமை விருத்தியில் முக்கியமான பங்கு வகிக்கின்றன. பாடசாலை என்பதைக் கல்வி புகட்டும் அமைப்பு மட்டுமே என்று கொள்ள இயலாது. கற்பித்தல் என்பதற்கும் அப்பாற் பாடசாலைகளின் பங்களிப்பு விரிவடைகிறது. ஒழுங்கு முறையான நடத்தையைப் பொதுவான சமூக நடைமுறையாக மாணவர்களிடையே வலியுறுத்துவதில் பாடசாலைகள் முக்கியமான பங்களிக்கின்றன. சமூகம் ஒரு பாடசாலையை நல்ல பாடசாலை என்று அங்கீகரிப்பதில் பாடசாலையின் கல்வித் தரத்தை ஒத்த அளவுக்கு மாணவர்களது நன்னடத்தையையும் கருத்திற் கொள்கின்றனர். எனினும் எல்லாப் பாடசாலைகளும் இவ்விதமான பொறுப்புக்களை ஒரே விதமான அல்ல ஒப்பிட்டக் கூடிய முறையிற் கூடச் செயற்படுத்துவதாகக் கூற இயலாது.

எடுத்தற்கெல்லாம் பிரம்பைப் பயன்படுத்துகிற ஆசிரியர்களும் பாடசாலை அதிபர்களும் இன்னமும் உள்ளனர். மாணவர்கள் தவறு செய்கிற போது அவர்களை அளவு மீறிக் கண்டித்து எல்லார் முன்னாலும் அவமதித்துப் பேசுகிற ஆசிரியர்கள் உள்ளனர். இவ்விதமான கண்டிப்பிற்கு கணிசமான பகுதி தனிப்பட்ட பகைமை, சாதி சமயஞ் சார்ந்த தவறான சிந்தனைகள், கலவன் பாடசாலைகளாயின் ஆணாதிக்கச் சிந்தனை போன்றவற்றின் விளைவானது என்றால் மிகையாகாது. சமூகத்தில் ஏற்பட்டு வருகிற மாற்றங்களால் இப் போக்குகளிற் திருத்தங்கள் இருந்தாலும் மாணவர்களைத் தனிப்பட்ட முறையில் இலக்கு வைத்துப் பகிரங்கமாக அவமதிக்கிற தன்மை இன்னமும் கணிசமான அளவில் நடைமுறையில் உள்ளது. இவற்றுக்கும் அப்பால் ஆசிரியர்களிற் சிலர் தமது அதிகாரத்தைத் தமது சுயலாபத்திற்காகத் துஷபிரயோகம் செய்வதையும் நாம் அறிவோம். வக்கிர சிந்தனை கொண்ட ஆசிரியர்கள் பற்றியும் அறிவோம். பெரும்பான்மையான ஆசிரியர்கள் இவ்வாறு நடந்து கொள்வது இல்லை என்பது போக ஆசிரியர்களது ஓரளவேனும் நேரடியான சமூகக் கண்காணிப்பிற்கும் அரசாங்க பாடசாலை நிருவாகக் கண்காணிப்புக்கும் உட்பட்டு இருப்பதையும் இங்கு குறிப்பிடல் அவசியம்.

அதேவேளை, ஆசிரியர்களது அதிகாரத் துஷபிரயோகம் பின்தங்கிய சமூகச் சூழல்களில் அதிகமாகவே இருப்பதை நாம் காணலாம். எல்லாரது வாழ்விலும் ஏதோ ஒரு காலப் பகுதியில் ஒழுங்கான நடத்தையை நெறிப்படுத்துகிற வரன்முறையான சமூக அமைப்புப் பாடசாலையே. அவ்வாறான அமைப்புக்களில் எவரும் அறிய வரும் முதலாவது அமைப்பாகவும் பாடசாலையே அமைகிறது. எனவே பாடசாலை என்பது கல்வியை வெறுக்கிற ஒரு மாணவன் கூட மதிக்கிற ஒரு அமைப்பாகவே இருந்து வந்துள்ளது. ஒரு மாணவர் பாடசாலையைத் தன்னுடன் அடையாளப்படுத்துகிற அளவுக்கு மேலாக வேறெந்தச் சமூக அமைப்பையும் அவர் பின்னாளில் தன்னுடன் அடையாளப்படுத்துவாரென்றால் அது அந்த அமைப்புடன் அவர் ஏற்படுத்திக் கொள்கிற ஈடுபாட்டினதும் நெருக்கத்தினதும் விளைவாகவே இருக்க முடியும்.

பாடசாலை என்ற அமைப்புடனான நெருக்கமும் ஈடுபாடும் பாடசாலையூடாக நடைபெறும் பலவாறான கூட்டுச் செயற்பாடுகளின் விளைவானது. வகுப்பறை, விளையாட்டுக் களங்கள், பாடசாலை விழாக்கள் போன்று பலவாறான செயற்பாடுகள் மூலம் பாடசாலைகள் எவரதும் ஆளுமையின் விருத்திக்குப் பலவாறாகப் பங்களித்துள்ளன. அதேவேளை பாடசாலைகளிற் சமூக வேறுபாடுகளின் அடிப்படையிற் காட்டுப்படும் பாரபட்சம் இள மனங்களைப் பாதிக்கின்றன. தனிப்பட்ட முறையில் ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவரிடமும் காட்டக் கூடிய அன்பும் வெறுப்பும் அக்கறையும் புறக்கணிப்பும் கல்வியைப் பற்றி மட்டுமில்லாது சமூகத்தைப் பற்றியும் இள மனங்களில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இத்தனையையும் தாண்டி ஒருவர் முதல் முதலாகத் தான் சார்ந்த சமூக அமைப்பாக அடையாளங்காட்டும் நிறுவனமாகப் பாடசாலையே அமைகிறது. தன்னுடைய குடும்பம் என்பதை ஒரு சிறுவனோ சிறுமியோ ஒரு அமைப்பாக நோக்குவதை விட அதிகமாகத் தனிப்பட்ட முறையிலான உறவுகளின் அடிப்படையிலேயே நோக்குவதைக் காண இயலும். தான் இன்ன குடும்பத்திற்குரியவன் என்கிற விதமாகக் குடும்பத்தை ஒரு அமைப்பாக நோக்குவதற்குச் சிறிது காலம் எடுப்பதற்குக் காரணம் அதில் இயல்பாகவே ஒரு பகுதியாய் இருக்கிற போதிலும் அதை ஒரு அமைப்பாக அடையாளப்படுத்துகிற தேவை இல்லாமையே எனலாம்.

பாடசாலை என்பது அவ்வாறில்லாமல் ஒரு நிறுவனமாகவே அறிமுகமாகிறது. அது முதலில் வகுப்பறையாகவும் பின்னர் முழுப் பாடசாலையாகவும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறது. எனவே மாணவரின் ஆளுமை விருத்தியில் ஒரு பாடசாலையினதும் அதன் ஆசிரியர்களதும் பங்களிப்பு முக்கியமான ஒரு பங்கைச் செலுத்துகிறது. இன்றுள்ள சமூகச் சீரழிவுகளிடையே பாடசாலை என்ற அமைப்பின் சீரழிவும் நாம் அடையாளங்காணக் கூடிய ஒன்றாகிறது. பாடசாலைகளது சமூகத்தன்மையும் பாடசாலையுடனான அடையாளப்படுத்தலும் கல்வி முறையின் சீரழிவாலும் சமூக விழுமியங்களது சிதைவாலும் தரமிறங்கி இருந்தாலும் பாடசாலைகளது முக்கியத்துவம் இல்லாமற் போய் விடுவதில்லை.

குடும்பச் சூழலும் பாடசாலைச் சூழலும் எல்லாரையும் ஒரே அச்சில் வார்க்கும் நோக்கத்தைக் கொண்டவையாக இருக்கக் கூடாது. அவ்வாறு செய்வது சாத்தியமானதும் அல்ல. குடும்பமும் பாடசாலையும் சிறார் ஒவ்வொருவரதும் விருப்பு வெறுப்புக்கள் ஆற்றல்கள் அக்கறைகள் என்பவற்றை அறிவதில் தவறிழைக்கலாம். அல்லது அவற்றை அடையாங்கண்டு அதற்கமைய அவரது ஆற்றல்களை விருத்தி செய்ய உதவலாம். எவ்வாறாயினும் ஒரு அமைப்பிற்கும் தனிமனிதருக்கும் இடையிலான உறவின் ஐக்கியமும் முரண்பாடும் என்கிற தன்மை தன்னை வெளிப்படுத்த தவறுவதில்லை. இவ்வாறான முரண்பாடுகளினூடாக தனிமனிதரது ஆளுமை விருத்தி பெறுகிறது.


வளரும்

# இலங்கைத் தமிழரின் அவலமும் தமிழகக் குத்துக்கரண அரசியலும்

-நரசிம்மா-

தமிழக சட்டமன்ற அரசியல் என்பது சென்னையில் உள்ள கூவம், பக்கிங்ஹம் கால்வாய்களை விடத் துர் நாற்றம் மிக்கது. மனம் வைத்தால் இந்தக் கால்வாய்களைத் தூரெடுத்துத் தூய்மைப்படு த்தலாம். தமிழகச் சட்ட மன்றத்திற்கு அப்படி எதையுமே செய்ய இயலாது. என்றாலும் தமிழகத்தின் அரசியல் காய் நகர்த்தல்களைப் பற்றி இலங்கைத் தமிழ் நாளேடுகளிலும் சில சஞ்சிகைகளிலுங் கூடத் தகுதி மீறிய முக்கியத்துவம் காணப்படுகிறது.

இலங்கைத் தமிழரின் பிரச்சனை பற்றித் தமிழகக் கட்சிகட்கு ஏற்படும் அக்கறை இலங்கையின் தேசிய இனப்பிரச்சனை பற்றிய புரிதலின் அடிப்படையிலானதல்ல. வேளைக்கு ஒரு பேச்சுப் பேசுகிற தமிழக அரசியல் கட்சிகளிடம் அப்படி எதையும் எதிர்பார்க்க ஒரு நியாயமும் இல்லை. என்றாலும் இலங்கைத் தமிழரின் அவலங்கள் பற்றித் தமிழக மக்கள் சரிவர அறியாமலிருக்கும் படி கட்சிகளும்



பத்திரிகைகளும் பலகாலமாகவே க்வனித்துக் கொண்டன என்பது நாம் கவனிக்க வேண்டிய உண்மை.

இலங்கைத்தமிழரின் அவலம் பற்றிய கவன ஈர்ப்புப் பேரணிகளும் கூட்டங்களும் உண்ணா நோன்புகளும் சென்ற ஆண்டின் இறுதி மாதங்களிலிருந்து பெரிய அளவில் நடைபெறுகின்றன. ஆனால் இலங்கைத் தமிழரின் அவலம் என்ன என்றோ நீண்டகால நோக்கில் அதை தீர்ப்பதற்கான வழிவகைகள் என்னவென்றோ குறுகிய காலத்திற் செய்யக் கூடியன எவையென்றோ ஒரு அடிப்படை உடன்பாட்டைக் காண்பதற்கு இயலாதவர்களாகவே எல்லாரும் இருந்து வருகிறார்கள் இரண்டு சட்டமன்ற இடதுசாரிக் கட்சிகளுங் கூடச் சுயநிர்ணயம் பற்றிப் பேசவில்லை. சி.பி.ஐ. சார்பில் இந்திய மாநிலங்களின் அதிகாரங்களை விடக் கூடிய அதிகாரங்கொண்ட மாநில சுயாட்சி பற்றிப் பேசியுள்ளது. சி.பி.எம் அதிகாரப் பகிர்வும் சுயாட்சி பற்றியும் பேசியுள்ளது. இருப்பினும் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையை வெறுமனே சிங்களவர்- தமிழர் மோதலாகப் பார்க்கிற போக்கே மேலோங்கியுள்ளது.

1987ன் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீர்வைக் காணலாம் என்கிற கண்ணோட்டம் பலரிடையே உள்ளது. இன்றைய அவலத்திற்கு அதன் பங்களிப்பு என்ன என்கிற எண்ணமே எவரிடமும் இல்லை. உண்மையைச் சொல்வதானால் முக்கியமான சட்டமன்ற அரசியல் கட்சிகளிடையே காணப்படும் அக்கறை இலங்கைத் தமிழரின் பிரச்சனை பற்றித் தமிழக மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கொதிப்புணர்வு காரணமானதே ஒழிய எந்த விதமான நேர்மையுள்ள அக்கறையின் விளைவானதும் அல்ல.

கருணாநிதி மட்டுமன்றி அவரது முழுக் குடும்பமும் நாடகமாடுகிறது. கருணாநிதி 1980களில் காட்டிய அக்கறைக்கும் இன்று காட்டுகிறதற்கும் ஒரு வேறுபாடும் இல்லை. எதைச் சொன்னால் டில்லியையும் பகைக்காமல் தமிழ்த் தேசியவாதிகளையும் பகைக்காமல் தன்னையும் தன் குடும்பத்தையும் வளப்படுத்தி அரசியல் அதிகாரத்தில் வைத்திருக்க முடியுமோ அதையெல்லாம் அவர் சொல்லுவார். அவருடைய சொல் மட்டுமல்ல தமிழகத்தில் எவருடைய சொல்லுமே டில்லி அதிகாரத்தின் காதில் விழாது என்று அவருக்குத் தெரியும் மற்றவர்கட்கும் தெரியும். தமிழகத்தில் ஒரு பெரிய அரசியற் புயல் வீசி அது இந்திய அரசாங்கத்தின் உறுதிநிலையைக் குலைக்குமென்றாலொழிய டில்லி எதற்குமே அசைந்து கொடுக்காது. ஆனால் அதற்குச் சட்டமன்ற அரசியலில் தங்களைத் தக்கவைத்துக் கொண்டு டில்லியிலும் பதவிகளுக்குத் தூண்டில் போடுகிற கட்சிகள் ஆயத்தமில்லை.

கடந்த ஆறுமாத நிகழ்வுகளைக் கவனித்துப் பார்த்தால் கட்சிகளின் உண்மையான நோக்கங்கள் விளங்கும். தி.மு.க டில்லியை மீறி எதையுமே செய்யாது என்பது மட்டுமன்றி டில்லிக்குச் சங்கடம் ஏற்படுத்துகிற விதமாகவும் எதையுமே சொல்லமாட்டாது. மக்களை விடுவிக்குமாறு ராஜபக்' விடுதலைப் புலிகளுக்கு விடுத்த 48 மணி நேரக் கெடுவைத் தி.மு.கவும் தமிழக காங்கிரஸும் மட்டுமே போர் நிறுத்தம் என்றும் பிரணப்முகர்ஜியின் இலங்கைப் பயணத்தின் விளைவு என்றும் இந்திய மத்திய அரசை மெச்சின. மத்திய அரசு கூட அவ்வாறு எதையுமே சொல்லவில்லை என்பது கவனத்துக்குரியது. மற்றப்படி கொட்டும் மழையில் மனிதச் சங்கிலி ஈழத்தமிழர் உதவி நிதி முதலான சகல நாடகங்களும் இலங்கைப் பிரச்சனையில் இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டால் ஏற்பட்ட சங்கடத்திலிருந்து தன்னைக் காப்பாற்றுகிற முயற்சிகளே. இவையெல்லாம் ஏன் தேவைப்பட்டன என்று கேட்டால் தி.மு.க ஆட்சி பற்றிய அதிருப்தி தமிழகத்தில் மேலோங்கி இருந்த சூழ்நி லையில் இலங்கைத் தமிழர் மீதான இன ஒழிப்பு நடவடிக்கையில் டில்லியும் உடந்தை என்பதுடன் தி.மு.கவும் அதற்கு ஒத்துழைக்கிறது என்ற உண்மை வெளியானால் ஜனவரி 2009ல் நட ந்த திருமங்கலம் இடைத் தேர்தலில் தி.மு.கவுக்குக் கேடு என்று யாரும் நினைக்கலாம். உண்மை அதுவல்ல. தேர்ல்தல்களை வெல்ல எத்தனையோ வழிகள் உள்ளன. அவற்றிலெல்லாம் தேர்ச்சி பெற்றது. தி.மு.கவின் குடும்பத் தலைமை அதைத் திரும ங்கலத்தில் பணத்தைவாரி இறைத்தும் அதிகாரத் துப்பிரயோகத்தின் மூலமும் செய்து காட்டியும் உள்ளது. திருமங்கலம் வெற்றி முக்கியமானது. அதைப் பெறுவதற்கு ஈழத் தமிழர் பற்றிய கவன ஈர்ப்பு முக்கியமானது. ஏனென்றால் அக்கவன ஈர்ப்பு தமிழக மக்களின் உண்மையான பிரச்சனைகளிலிருந்து கவனத்தைத் திசை திருப்ப உதவியுள்ளது.

தி.மு.கவின் தோழமைக்கட்சிகளாக இருந்து வந்த இருந்து வருகிற பா.ம.க, விடுதலைச் சிறுத்தைகள் ஆகியன இன்னொரு வகையான நாடகம் ஆடியுள்ளன. விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறார்கள் என்று உணர்த்துகிற விதமாக அவற்றின் செயற்பாடுகள் அமைந்தன. ஆனால் தி.மு.க ஆட்சியைக் கவிழ்க்கவோ டில்லியில் காங்கிரஸ் ஆட்சியை ஆட்டங்காணச் செய்யவோ அவை தயாராக இருக்கவில்லை. மிக அண்மையிலேயே பா.ம.க. தலைமை தி.மு.கவுக்கு எதிராகத் திரும்பியுள்ளதற்கு வரவுள்ள பாராளுமன்ற தேர்தல் தான் காரணமாகும். இச் சிறிய கட்சிகளின் வாக்கு வங்கியிற் கணிசமான பகுதி ஈழத்தமிழர் பற்றிய அக்கறை மிக்கது என்பதை விடத் தமிழ்த் தேசியவாத உணர்ச்சி அரசியலைக் கடந்த காலத்தில் வெகுவாகப் பயன்படுத்தி வந்துள்ள இக்கட்சிகளின் அரசியல் ஆதரவுத் தளம் முற்றிலுஞ் சாதி அடிப்படையிலானது என்பதும் கவனிக்கத் தக்கது.

இலங்கைத் தமிழர்கட்கு ஆதரவு தி.மு.க ஆட்சியுடனும் நட்பு என்கிற விதமாக நாடகம் போடுவதில் மேற்படி கட்சிகட்குச் சிறிதுஞ் சளைக்காதனவாகவே திராவிடர் கழகமும் பழநெடுமாறன் போன்றவர்களும் இருந்து வருகிறார்கள்.

கோபாலசாமி விடுதலைப் புலிகட்கான தனது ஆதரவு நிலைப்பாட்டை மறைக்காதவர் என்றாலும் அவரது கட்சியின் அரசியல் நிலைப்புக்கு அவரால் தி.மு.க வுடனோ அ.தி.மு கவுடனோ கூட்டணி அமைக்காமல் இருக்க இயலாது. பத்தாண்டுகட்கு முன்பு சந்தித்த தேர்தல் தோல்வியிலிருந்து அவர் கற்றுக் கொண்ட பாடம் அது. அதை விட டில்லியுடன் அவர் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகள் இந்திய மேலாதிக்கத்துடன் அவரை நெருக்கமாக அடையாளப்படுத்துகின்றன. தமிழக அரசியல் வாதிகளில் இந்தியாவுக்கெதிரான 'சீனமிரட்டலைப்' பற்றி அதிகம் பேசுகிறவராக அவர் இருந்து வருவது அவரது அமெரிக்க விசுவாசத்தையுடையது என்பதும் கவனிக்கத்தக்கது.

வெளிவெளியாகவே விடுதலைப் புலி எதிர்ப்புப் பேசுகிற முக்கிய மான தலைவர்களாகக் காங்கிரஸ் தலைவர்களும் ஜெயலலிதாவும் இருந்து வருகின்றனர். இவர்களை விட வலிய ஊடக நிறுவனங்கள் யாவும் விடுதலைப்புலிகட்கு எதிராகவே இருந்து வந்துள்ளன. ஜெயலலிதா இலங்கைத் தமிழருக்குச் சுயநிர்ணய உரிமைபற்றிப் பேசுகிறார். ஆனால் சுயநிர்ணயம் என்பது எதைக் குறிக்கிறது என்று அவர் தெளிவுபடுத்தவில்லை. எனினும் வேறெந்தக் கட்சியும் கோராத ஒன்று இது. மறுபுறும் விடுதலைப் புலி எதிர்ப்பில் காங்கி ரஸும் தி.மு.கவும் சமரசம் செய்கிறதாகக் குற்றஞ் சாட்டவும் விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் கருணாநிதி மீது கடும் நடவடிக்கை தேவை என வற்புறுத்தவும் கிடைக்கிற வாய்ப்புக்களை அவர் தவறவிடுவதில்லை. அது மட்டுமில்லாமல் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக வாய்திறப்பதே தண்டனைக்குரிய தேசத் துரோகம் என்று சொல்லுகிற அளவுக்கு அவரது நிலைப்பாடு கருத்துச் சுதந்திரத்தை மறுப்பதாக உள்ளது.



ஈழத்தமிழ் மக்கள் மீதான இனஅழிப்பை எதிர்த்தும் இந்திய பிராந்திய மேலாதிக்கத்தை எதிர்த்து தமிழகத்தில் மாக்ஸ்சிச லெனினிச புரட்சிகர சத்திகளும் மனித உரிமை அமைப்புகளும் இணைந்து நாடாத்திய மாபெரும் ஆர்ப்பாட்டம் 26.01.2009



சோனியா காந்தி ராஜீவ்கொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட நளினியைச் சந்திக்க மகள் பிரியங்காவைச் சென்ற ஆண்டு அனுப்பியது முதலான பல வேறு நாடகங்களையும் இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகளும் ஊடகங்களும் தமக்கேற்றவாறு வியாக்கியானஞ் செய்தனர். அதனால் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் நடுவில் இதன் விளைவாக இந்தியாவைப் பற்றியும் காங்கிரஸ் மேலிடத்தைப் பற்றியும் ஒரு நெகிழ்வான நிலைப்பாடும் ஏற்பட்டது. இவற்றின் நடுவிலேயே இந்திய அரசு இலங்கை அரசுடனான ராணுவ ஒத்துழைப்பை மிகவும் வலுப்படுத்திக் கொண்டது.

தமிழ்த் தேசியக் கூட்டணியினர் சிலர் அண்மைக்காலமாக பாரதிய ஜனதாக் கட்சியுடன் உறவுகளை வளர்க்க முற்பட்டு வந்துள்ளனர். ஆனாலும் பாரதிய ஜனதாவின் தமிழகத் தலைமை காட்டுகிற அனுதாபமான போக்கு டில்லியில் அதிகாரத்துக்கு வரக்கூடியோரிடம் இருக்குமா? ஏனெனில் அவர்கள் ஆண்ட போது இருந்த நிலைப்பாடு இலங்கைத்தமிழருக்குச் சாதகமான ஒன்றல்ல. இந்த நாடகம்தமிழகத்தில் ஜெயலலிதாவிடமும் கருணாநிதியிடமிருந்து இலங்கைத் தேசிய இனப் பிரச்சனை தொடர்பாக விலகிப் போகக் கூடியோரைக் கவருகிற ஒரு உபாயம் என்பதற்கு மேலாக வேறெதுவுமாக இருக்க இயலாது. ஏனெனில் "சோ" ராமசாமி போன்ற தமிழக இந்தத்துவவாதிகள் எப்போதுமே விடுதலைப் புலிகளை மட்டுமன்றித் தமிழ்த் தேசியவாதத்தையும் அறவே வெறுப்பவர்களாவர்.

இரண்டு பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளும் இலங்கைத் தமிழர் விடயத்திற் காட்டுகிற அக்கறை அவர்களது முன்னைய நிலைப்படுகளுடன் ஒப்பிடுகையில் வரவேற்கத்தக்கது. இதில் மாநிலமட்டத்து நிலைப்பாட்டைத் தேசியமட்டத்திலும் அக் கட்சிகள் ஏற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் சுயநிர்ணய உரிமையைப் பிரிவினையுடன் குழப்பி அது பற்றிப் பேசத் தயங்குவது பாதகமான ஒரு அம்சம். அதை விட இக் கட்சிகள் பலவிதமான பாராளுமன்ற தேர்தற் கூட்டணிக் கணக்குக்களைப் போட்டுத் தேர்தலில் வெல்ல முயல்கிறதால் இக் கட்சிகள் அதிகாரத்தற்கு வரும் கூட்டணி ஒன்றில் இருந்தாலும் அதற்கு ஆதரவு தருகிற ஒரு முக்கிய்மான அரசியல் சக்திகளாக இருந்தாலும் இலங்கைத் தமிழர் பிரச்சனையில் தமிழகத்தில் செய்யக் கூடிய பிரசாரத்துக்கு அப்பால் இக் கட்சிகளால் எதுவும் ஆவதற்கு இல்லை.

தமிழ்த் தேசியவாதிகள், திரும்பத் திரும்ப, மக்கள் மத்தியில் அதிகம் செல்வாக்கற்றவர்களாகவும் எவ்வளவுதான் வாய்வீரம் பேசினாலும் ஜெயலலிதாவுடனோ கருணாநிதியுடனோ ஒண்டிக் கிடக்கிறவர்களுமான தமிழகக் கட்சிகளையும் பிரமுகர்களையுமே நம்பி இருக்கின்றனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வெகுசன அபிப்பிராயத்தைத் தட்டியெழுப்பி டில்லி வரை ஈழத் தமிழருக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்தளவுக்குத் தமிழகத்தின் 'நிரந்தர' விடுதல்லைப் புலி ஆதரவாளர்களால் செய்ய இயலாதது ஏன் என்பது சிந்தனைக் குரியது.

பாராளுமன்ற இடதுசாரிகள், திரிபுவாதிகளாயிருந்தாலுங் கூட வெகுசன மட்டத்திற் செயற்படுகிறவர்கள் என்பது முக்கியமான ஒரு உண்மை. அவர்களைவிட நம்பகமாக ஆதரவுச் சக்திகளாக இருக்கக் கூடியவர்கள் மாக்ஸிய லெனினியப் புரட்சிகர சக்திகள் என்பதும் கவனத்துக்குரியது. இவ்வாறு வெகுசனத் தளத்திற் செயற்படுகிற சக்திகளது ஆதரவுமட்டுமே தொடர்ச்சியாகத் தமிழகத்தில் ஈழத்தமிழருக்கு ஆதரவாக குரலை எழுப்பிக் கொண்டிருக்கின்றன. அவை தி.மு.க, ம.தி.மு.க, பா.த.க போன்ற பச்சையான சந்தர்ப்பவாத ஏகாதிபத்திய தாசர்களது நாடகங்களை அம்பலப்படுத்தி வருகின்றன. அதன் மூலம் மக்கள் எழுச்சிகளைத் திசைதிருப்பி அவற்றைக் கருணாநிதி குடும்பமும் ஜெயலலிதாவும் தங்களை அதிகாரத்தில் வைத்திருக்கிறதற்குப் பயன்படுத்தாமல் நேரடியாகவே டில்லிக்கு நெருக்குவாரம் கொடுக்கச் செய்ய இயலும். ஆனால் அத்தகைய நேர்மையான மாச்சிச லெனினியக் கட்சிகள் நடாத்தும் ஈழத்தமிழர் ஆதரவு வெகுஜ இயக்கங்களை தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் ஊடகங்கள் முன்னிலைப்படுத்தாது மறைத்தும் வருகின்றன என்பது கவனத்திற்குரியாதாகும்.

டில்லியால் இலங்கையிற் போர் நிறுத்தத்தையோ நியாயமான தீர்வையோ திணிக்க இயலாது என்பதை விட முக்கியமானது, டில்லியிடம் ஒரு ஈழத்தமிழர் விடுதலை விரோதப் போக்கு உள்ளமையாகும். அது இந்திய விஸ்தரிப்புவாத நோக்கங்களுடன் தொடர்புடையது. எனவே ஈழத்தமிழர் ஆதரவு இயக்கங்கள் வற்புறுத்த வேண்டியது இந்தியக் குறுக்கீட்டை அல்ல. மாறாக இந்தியா இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடாமல் பேரினவாத ஆட்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதை நிறுத்த வேண்டும் என்பதே பிரதான கோரிக்கையாக அமைய வேண்டும்.

மற்றப் படி ஒரு தேசிய இனமோ ஒரு தேசிய சிறுபான்மைச் சமூகமோ ஒடுக்குமுறைக்கும் இன ஒழிப்புக்கும் உள்ளாகிற போது அதை எதிர்த்துக் குரல் கொடுக்கிற ஒரு கடமை எல்லா நாடுகட்கும் உண்டு. ஆனால் அதற்கும் மேலாக இலங்கையில் இந்தியாவின் அரசியல் ராணுவ பொருளாதார முதலீடுகள் பெருகி உள்ள நிலையில் இந்தியக் குறுக்கீட்டை வற்புறுத்துவது இலங்கைத் தமிழரதும் சகல தேசிய இனங்களதும் நலனுக்கு உகந்ததாகாது. அது தமிழக மக்களுக்கும் நன்மைதராது. இந்திய அரசின் சகல தேசிய இன ஒடுக்கற் செயற்பாடுகளையும் எதிர்க்கக் கூடியவர்களது கைகளை வலுப்படுத்துவதன் மூலமே ஈழத்தமிழரின் விடயத்தில் இந்திய ஆட்சியாளரின் வஞ்சகத்தை முறியடிக்கலாம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

## இஸ்ரேலும் பயங்கரவாதமும்

காஸாவுக்கான உணவுப் பொருட்களை காவிவந்த லெபனான் கப்பலொன்றை இஸ்ரேலிய கடற்படையினர் தமது துறைமுகத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். இஸ்ரேலிய கடற்படைக் கப்பல்கள் தமது கப்பல் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாக லெபனான் தெரிவித்த குற்றச்சாட்டை இஸ்ரேல் முன்னர் மறுத்திருந்தது. இந்நிலையில் காஸா கரையோரத்திற்கு 32 கி.மீற்றருக்கு அப்பால் இக் கப்பல் இஸ்ரேலிய இராணுவக் கப்பலினால் வழிமறிக்கப்பட்டு கப்பல் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட பின்னர் அதனை சுற்றிவளைத்த இஸ்ரேலியப் படையினர் தமது துறைமுகத்திற்கு திரும்புமாறு உத்தரவிட்டதாக கப்பல் மாலுமிகள் தமக்கு அறிவித்ததாக இப் பயணத்தை ஏற்பாடு செய்தவர்களில் ஒருவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் எ்குட் பராக் தெரிவிக்கையில் காஸாவுக்கு செல்வதையே தடுத்தோம் என்பதை கப்பல் மாலுமிகள் புரிந்துகொண்டுள்ளனரெனத் தெரிவித்துள்ளார். இதேவேளை, கப்பலின் மாலுமிகள் பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்படுவார்களெனவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். இது தான் மனிதாபிமான நடவடிக்கை என்பதோ. இஸ்ரேல் பற்றிய கனவுகளில் மிதப்பவர்களுக்கு இதை சொல்லி வைக்க விரும்புகிறேன். அடக்குமுறையின் முழு வடிவமாக இருக்கும் இஸ்ரேல் போன்றதொரு நாடு போல நாடு வேண்டும் என்றா விரும்புகிறார்கள். எல்லா விதமான ஒடுக்குமுறை இயந்திரங்களும் ஏறத்தாழ ஒரேவிதமான தர்க்கத்தின் வழியேதான் செயற்படுகின்றன போலும்.

பார் யார் எவ் எவ் பக்கம் சாய்வர் என்பதற்கும் மனிதாபிமானம் எப்படி ஜொலிக்கும் என்பதற்கு ஒரு உதாரணம்: காஸாவில் தோன்றியுள்ள மனிதாபிமான நெருக்கடி நிலைக்குப் பிராந்தியத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹமாஸ் இயக்கமே காரணமெனவும் இப் பேரழிவுகளுக்கு ஹமாஸே பொறுப்பேற்க வேண்டுமெனவும் ஐரோப்பிய ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது. அதே வேளை காஸா மீதான படை நடவடிக்கை தொடர்பில் எந்தவொரு இஸ்ரேலிய படைவீரர் மீதும் போர்க்குற்றம் சுமத்தப்பட்டால் இது தொடர்பான விசாரணைகளிலிருந்து இஸ்ரேலிய அரசாங்கம் அவர்களைப் பாதுகாக்குமெனவும் நாட்டைப் பாதுகாத்த அவர்களின் நடவடிக்கைக்காக இஸ்ரேல் அவர்களைப் பாதுகாக்கும் என்பதை உலக நாடுகள் அறிந்துகொள்ள வேண்டுமெனவும் அந்நாட்டுப் பிரதமர் எ்குட் ஒல்மேர்ட் தெரிவித்துள்ளார். பயங்கரவாதத்துக்கு எதிரான மனிதாபிமான நடவடிக்கை என்பது இப்படித்தான் இருக்கும் போல...

## இந்தியாவும் அமெரிக்காவும்

இந்தியாவுக்கு அமெரிக்காவை விட சிறந்த நட்பு நாடு எதுவும் இல்லையெனவும் எந்தவொரு நேரத்திலும் இந்தியாவுக்கு உறுதுணையாக இருக்க அமெரிக்காவைவிட நல்ல நண்பன், கூட்டாளி வேறு யாரும் இல்லை என்பதை இந்த நேரத்தில் ஒவ்வொரு இந்தியரும் தெரிந்துகொள்ள வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார். அமெரிக்காவுக்கு இயல்பான தோழனாக இந்தியாவால் தான் இருக்க முடியும். அம்சா மூர்த்தி மகாத்மா காந்தி அமெரிக்க மக்களுக்கு மிகப்பெரிய ஆதர்ஷ புருஷராகத் திகழ்கிறார். நம்முடைய விழுமிய பண்புகளும் இலட்சியங்களுமே சுதந்திரமான, கட்டுப்பாடுகளற்ற நமது சமூகங்களை யாரும் கட்டுப்படுத்திவிடாமல் காக்கின்றன என்றும் ஒபாமா தெரிவித்து இருக்கிறார். அது என்னமோ உண்மை தான். குவாண்டனமோ, குஜராத் என விழுமிய பண்புகளும் ஜனநாயகமும் இரண்டிலும் நிரம்பி வழியும் போது ஒருவருக்கு ஒருவர் நட்பாகத்தான் இருக்க முடியும்.

இந்திய மத்திய அரசு இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தனது பிராந்திய நலனை முதன்மைப்படுத்திய கொள்கையையே எப்பொழுதும் முன்னிறுத்தி வந்திருக்கிறது. தென் ஆசியப் பிராந்தியத்தில் மட்டுமன்றி, முழு ஆசியாவிலும் தனது ஆதிக்கத்தை விரிவாக்கும் நோக்குடனேயே அதன் கொள்கை வகுப்பு இருந்து வருகிறது. குறிப்பாகத் தென்னாசிய நாடுகள் ஒவ்வொன்றும் தனது பெரியண்ணன் பாத்திரத்தை ஏற்று நடக்க வேண்டும் எனக் கட்டாயப் படுத்துகிறது. அதற்கு மறுத்தால் ஏதாவது ஒரு காரணங் காட்டி மிர ட்டல், தாக்குதல் என இறங்குகிறது. இதற்கான உதாரணத்தை இலங்கை கடந்த கால த்தில் கண்டிருக்கிறது. இதையே தான் அமெரிக்கா காலம் காலமாக இலத்தீன் அமெ ரிக்காவில் செய்து வருகிறது.

## நாட்டுக்கொரு நீதி

ஆராய்ச்சி மற்றும் தொலைத்தொடர்பு சேவைகளுக்கு பயன்படுத்துவதற்காக ஈரான் தனது முதலாவது செயற்கைக்கோளை அண்மையில் விண்ணுக்கு ஏவியது. ஆனால், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைப் பரிசோதனையின் அபிவிருத்திக்காகவே இச் செயற்கைக் கோளைப் பயன்படுத்தப்போவதாக அமெரிக்கா,பிரான்ஸ்,பிரிட்டன் ஆகிய நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன. பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபன்டுடனான பேச்சுக்களைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் கிலாரி கிளின்டன் "சர்வதேச சமூகத்தில் ஈரானும் ஒரு அங்கத்துவ நாடாகுவதற்குரிய வாய்ப்புகள் உள்ளமை தெளிவாகவுள்ளது. இதை இவ்வாறான செயற்பாடுகள் மூலம் ஈரான் இழந்து விடக் கூடாது. இதேவேளை, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை குறித்து அதிக கவனம் செலுத்தப்படும்" என்றார். நாட்டுக்கொரு நீதி என்பது இது தான் போல...

## மனிதாபிமான நடவடிக்கை

அமெரிக்க இராணுவத்துக்கு சொந்தமான ஆளில்லாத கெலிகொப்டர் பாகிஸ்தான் எல்லைக்குள் புகுந்து ஏவுகணையை வீசி தாக்குதல் நடத்தி வருகிறது. பல அப்பாவிப் பொது மக்கள் அநியாயமாகப் பலியாகிறார்கள். ஆனால் பாகிஸ்தானிலுள்ள அல்கைடா தீவிரவாதிகளை அழிக்கும் வரை அந்நாட்டின் மீதான ஏவுகணைத் தாக்குதல்கள் தொடருமெனவும் அல்கைடா தீவிரவாதிகள் எங்கிருந்தாலும் அவர்களை விரட்டிச் சென்று வேட்டையாட வேண்டுமென தற்போதைய ஜனாதிபதி ஒபாமா தெளிவுபடுத்தி இருக்கிறார். எனவே, நாங்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்துவோம் எனவும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் றொபேர்ட் கேட்ஸ் தெரிவித்துள்ளார். இவை எல்லாம் மனிதாபிமான நடவடிக்கை என்று அழைக்கப்படுமாம்.

## நிதி நெருக்கடியும் எதிர்

உலகளவில் நிலவிவரும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக இவ்வாண்டில் மட்டும் ஐந்து கோடியே பத்து இலட்சம் பேர் வேலையை இழக்கும் அபாயம் ஏற்படக்கூடுமென சர்வதேச தொழிலாளர் அமைப்பு எச்சரித்துள்ளது. ஆனால், தற்போதுள்ள அறிகுறிகளின் படி, இந்தப் பிரச்சினை மேலும் மோசமாகும் எனக் கருதப்படுவதுடன் கூடுதலான வேலை இழப்புகள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகளே அதிகமாக உள்ளதாகவும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு கூறியுள்ளது. வேலையில் தொடர்ந்து இருந்து வருபவர்கள் அதிக உத்தரவாதங்கள் இல்லாத துறையில் குறைந்த அளவு ஊதியம் வாங்கும் நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்றும் அந்த அமைப்பின் அறிக்கை கருத்து வெளியிட்டுள்ளது. இதேவேளை, உலகம் முழுவதும் ஜனவரி 28ம் திகதி ஒரே நாளில் 80 ஆயிரம் பேரின் வேலை பறிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒரே நாளில் இத்தனை பேருக்கு வேலை போயிருப்பது உலக தொழில் துறையை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. உலகின் முன்னணி நிறுவனங்களான கட்டுமானப்பொருள் உற்பத்தி நிறுவனமான கேட்டர் பில்லர் மருந்துகள் தயாரிப்பு நிறுவனமான பிஸர், தொலைத்தொடர்பு நிறுவனமான ஸ்பிரின்ட் நெக்ஸ்டெல் கார்ப் ஆகிய நிறுவனங்களில் மட்டும் 61 ஆயிரம் பேர் ஜனவரி 28ம் திகதி வேலை இழந்துள்ளனர். முதலாளித்துவ அமைப்பின் கோர முகம் தெரிகிறதா இப்போது?

# ஏகாதிபத்திய உலகில் மக்களை ஒன்றுதிரட்டலும் போராடுதலும்

சான்பிரான்சிஸ்கோவில் அருந்ததி ராய் 2004 ஆம் ஆண்டு 'ஏகாதிபத்திய உலகில் மக்களை ஒன்றுதிரட்டலும் போராடுதலும்" என்ற தலைப்பில் உரையாற்றியிருந்தார். காலப்பொருத்தம் கருதி அதிலிருந்து சில பகுதிகளை தமிழில்: 'ஆதிக்கங்களை எதிர்த்து, தம் உரிமைகளுக்காக மக்கள் தம் அரசுடனோ அல்லது ஒரு மாற்று நாட்டு அரசுடனோ போராடிய வண்ணம் இருக்கிறார்கள். இந்த எதிர்ப்புப் போராட்டங்கள் சந்திக்கும் முக்கியமான மூன்று சவால்கள் என்ன? " என்ற கேள்வியுடன் தொடங்கிய அவரது பேச்சின் சுருக்கம் உபதலைப்புகளுடன் தரப்பட்டுள்ளது.

1. போராட்ட இயக்கங்களும் ஊடகங்களும் போராட்டக்காரர்களும், ஊடகங்களும் சந்தித்துக் கொள்வது ஒரு சிக்கலான இடம். ஒரே இடத்தில் காலத்தைச் செலவிட செய்தித் தாகம் கொண்ட ஊடகங்களுக்குக் கட்டுப்படியாகாது என்பதை அரசு கற்றிருக்கிறது. வியாபாரத்தில் பணம் புழங்குவது போல ஊடகத்தில் பிரச்சினைகள் புழங்க வேண்டும். நாடுகள் முழுவதும் பழஞ்செய்திகளான வண்ணம் இருக்கின்றன. ஒரு போராட்டத்தின் மேல் சிறு நேரத்துக்கு ஒளியைப் பாய்ச்சிச் சடாரென்று விலகி முன்பை விட இருளில் தள்ளிவிடுகின்றன இந்த ஊடகங்கள். சோவியத் தன் படைகளை ஆப்கானிஸ்தானத்திலிருந்து மீளப்பெற்றபோது இதுதான் நடந்தது. இப்போது சி.ஐ.ஏவின் ஹமீத் கர்ஸாயை உட்கார வைத்து மீண்டுமொருமுறை ஆப்கானிஸ்தானைப் போரில் தள்ளியிருக்கிறது. இதே மாதிரித்தான் இன்னொரு சி.ஐ.ஏ இயத் அல்லாவியை ஈராக்கிலே நிறுத்தி, இப்போது கிட்டத்தட்ட ஊடகங்கள் இங்கிருந்தும் கிளம்பிவிடும்.

அரசுகள் 'பொறுத்திருந்து பார்க்கும்" உத்தி மூலம் போராட்டங்களை வலுவிழக்கச் செய்வதில் தேர்ச்சியடைந்து வருகின்றன. அதே நேரத்தில் போராட்ட இயக்கங்கள்

கண்ணைக் கவரும் விதத்திலும், சுலபமாய்க் கொள்ளப்படும் விதத்திலும் புதுப் புதுப் பிரச்சினைகளை உற்பத்தி செய்தவண்ணம் இருக்கின்றன. ஒவ்வொரு சுய மரியாதையான மக்களின் இயக்கமும், ஒவ்வொரு பிரச்சினையும் தனக்கென ஒரு விளம்பர பலூனை வானிலே பறக்க விட்டிருக்கின்றன. இதே காரணத்தினால்தான் ஊட்டச்சத்து குறைவுப் பிரச்சினையை விட பட்டினிச் சாவு பிரச்சினை/விளம்பரம் அதிகக் கவனத்தைப் பெறுகிறது. தொலைக்காட்சிக்கு உகந்த வகையில், உடைந்து சீரழிக்கும் காட்சி தெரியும் வரை அணைகள் பெருஞ் செய்தியாவதில்லை. ஆனால் அப்போது செயலுக்குக் காலம் கடந்துவிட்டிருக்கும். மேலேறும் தண்ணீருக்குள் நின்று உன் வீடும் உடைமைகளும் மூழ்குவதைப் பார்த்துப் போராடுவது பழைய உத்தி. தொலைக்காட்சிகளுக்கு அது சலித்துவிட்டது. எனவே அணைகளால் இடம் பெயர்க்கப் பட்ட ஆயிரக்கணக்கான மக்கள் புது மாயங்களைக் காட்டிப் போராட வேண்டியிருக்கிறது அல்லது போராட்டத்தை விட்டுவிட வேண்டியிருக்கிறது.

வண்ணமயமான ஆர்ப்பாட்டங்களும், வாரக்கடைசி ஊர்வலங்களும் முக்கியமானவைதான், ஆனால் போர்களை நிறுத்துவதற்கு அவை வலிமையற்றவை. போர்வீரர்கள் சண்டையிடுவதையும், ஆயுதங்களைக் கப்பல், விமானங்களில் ஏற்றுவதையும், ஆதிக்கங்கள் உலகெங்கும் திறந்திருக்கும் பொருளாதாரக் கதவுகளைப் புறக்கணிப்பதையும் நாம் செய்யும்போதே போர்கள் நிற்கும். குடிகளின் கீழ்ப்படியாமை மூலம் நாம் ஒரு செய்தியைச் சொல்ல விரும்பினால், முதலில் இந்த ஊடகங்களின் பிடியிலிருந்து விடுபடவேண்டும்.

இயல்பு என்று அரசுகள் அழைப்பதை (உண்மையில் கொடூரம், அநீதி, ஒத்துக்கொள்ளப் படமுடியாதது) விசாரணை செய்ய நாம் நம் அனுபவத்திலிருந்தும், கற்பனையிலிருந்தும் புதிய உத்திகளை உண்டாக்க வேண்டும். உணவு, தண்ணீர், இருப்பிடம், சுயமரியாதை போன்ற சாதாரணத் தேவைகளைக்கூட ஒரு தொலைதூரக் கனவாக்கி விட்ட திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளின் நிலையை நாம் தோலுரிக்க வேண்டும். உண்மையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்பது, போர் என்றால் பிழையான, நீதியற்ற அமைதியின் விளைவே என்று உணர்தலாகும். போராட்ட இயக்கங்களைப் பொறுத்தவரையில், அவர்களுடைய மக்கள் கூட்டத்துக்கு இணையாக வேறெந்தப் பலமும் கிடையாது. பலமான இந்தக் கூட்டத்துக்கு எந்த (அரசுகளிடம்) மாற்றும் கிடையாது. நிறுவனங்களை உலகமயப்படுத்தலினால், முடிவு செய்வோருக்கும் அந்த முடிவுகளினால் பாதிக்கப் படுவோருக்குமான தூரம் பெருகிவிட்டது. World Social Forum போன்ற மன்றங்களால் இத் தொலைவு குறைக்கப்பட்டிருக்கிறது. பல நாட்டு மன்றங்களுக்கிடையேயான தொடர்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டு முக்கியமானதும் பாதுகாப்பானதுமாகும். உதாரணமாக, இந்தியாவின் முதல் தனியார் அணை, மகேஷ்வர் அணை, கட்டப்பட்ட போது நர்மதா பச்சாவொ அண்டோலன் (NBA), பிற மக்கள் இயக்கங்களுடன் (குறிப்பாக ஜேர்மன், சுவிஸ்லாந்து) இணைந்து செயலாற்றி அத்திட்டத்திலிருந்து பன்னாட்டு வங்கிகள் மற்றும் நிறுவனங்களை விலகிக் கொள்ளச் செய்தது. மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடாமலிருந்திருந்தால் இது சாத்தியமாகியிருக்காது. இந்த உள்ளூர் இயக்கங்களின் போராட்டமே வெளியுலகில் இருக்கும் ஆதரவாளர்களால் உலகளவில் பெரிய போராட்டமாக எதிரொலித்து. அந்த அணைத்திட்ட முதலீட்டாளர்களைப் பின்வாங்கச் செய்தது. குறிப்பிட்ட திட்டங்கள், குறிப்பிட்ட நிறுவனங்களைக் குறிவைத்த எண்ணிலடங்கா இத்தகைய கூட்டு முயற்சிகள், இன்னொரு உலகைப் படைக்க உதவும். முதலில் நாம் ஆரம்பிக்க வேண்டிய நிறுவனங்கள் யாரெல்லாம் சதாம் உசேனுடன் கூட்டுச் சேர்ந்து வியாபாரம் செய்தார்களோ அவர்களும், இப்போதைய ஈராக்கிய சீரழிவால் யாரெல்லாம் லாபம் அடைகிறார்களோ அவர்களுமே.

**2. NGO-ஆக்க்கல்** போராட்ட இயக்கங்கள் எதிர்கொள்ளும் இன்னொரு நச்சு என்னவென்றால், எதிர்ப்பியக்கங்களை NGO(அரசு சாரா நிறுவனங்கள்) ஆக்குதல். நான் இப்போது சொல்லப் போவதை NGOக்களின் மீதான ஒரு குற்றப்பத்திரிகையாகச் சுலபமாகத் திரித்து விடலாம். அது தவறு. மதிப்புமிக்க பணிகளைச் செய்யும் NGOக்கள் இருக்கிறார்கள், ஆனால் போலித்தனமான NGOக்கள், இருண்ட நீர்ப்பரப்புகளிலிருந்து (திட்டங்களுக்கான பணம், வரி ஏய்ப்புகள்) உறிஞ்சுவதற்காகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. பீகார் போன்ற மாநிலங்களில் இந நிதிகள் வரதட்சிணை மாதிரிக் கொடுக்கப்படுகின்றன. இந்த NGO கொள்கையைச் சற்றே பரந்த அரசியல் நோக்கில் காணவேண்டும். இந்தியாவில் பேழுக்களுக்கான நிதியுதவி 1980, 1990களிலிருந்து கொழிக்க ஆரம்பித்தது. இது இந்தியா தாராளமயமாக்கலுக்குத் (Neoliberalism) தன் கதவுகளைத் திறந்துவிட்டபோது நிகழ்ந்தது. இந்த நேரத்தில், இந்தியா, புதிய மாற்றங்களுக்குத் தன்னைச் சரிசெய்துகொள்ளும் வகையில், கிராமப்புற முன்னேற்றம், விவசாயம், சக்தி, போக்குவரத்து, சுகாதாரம் ஆகிய துறைகளிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டது. வழக்கமாக அரசு செய்யவேண்டிய, ஆனால் புறக்கணித்துவிட்ட, இத்துறைகளில் NGOக்கள் வேலை செய்ய முன்வந்தனர். அரசுக்கும் இவர்களுக்கும் வித்தியாசம் என்னவென்றால், NGOக்களிடம் மொத்த தேவைக்கான பணத்தில் ஒரு சிறு அளவே இருந்தது. பெருவாரியான பணம் கொழிக்கும் NGOக்களுக்குப் பணம் கொடுப்பது யாரென்றால், உதவி மற்றும் வளர்ச்சி நிறுவனங்கள். இந்நிறுவனங்களுக்குப் பணம் கொடுப்பது யாரென்றால் மேற்கத்திய அரசுகள், உலக வங்கி, ஐ.நா மற்றும் சில பன்னாட்டு நிறுவனங்கள்.. இவர்களெல்லோரும் ஒன்று போலத்தான் என்று சொல்ல முடியாவிட்டாலும், இவர்கள் எல்லோருமே இளக்கமாகப் பிணைக்கப்பட்ட ஒரு அரசியல் வியூகத்தின் பகுதிகளே. இவர்களது பணி என்னவென்றால் தாரளமயமாக்கலை மேற்பார்வை செய்வதும், அரசுகள் இத்துறைகளில் செலவு செய்வதைக் குறைக்கச் சொல்வதுமாகும். ஏன் இந்நிறுவனங்கள் NGOக்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும்? வெறுமனே பழங்காலத்திய சமயச் சங்கங்கள் மாதிரியா? குற்றமனப்பான்மையா? இது அதற்கும் கொஞ்சம் மேல். NGOக்கள் அரசின் பின்வாங்குதலால் ஏற்பட்ட ஒரு வெற்றிடத்தை நிரப்புவது போன்ற ஒரு தோற்றத்தினை ஏற்படுத்துகின்றன. அதற்காகவே இவை வேலை செய்கின்றன, ஆனால் பொருளாதார ரீதியாக ஒரு தேவையற்ற, மடத்தனமான வகையில். இவற்றின் பங்களிப்பெல்லாம் அரசின் மேல் மக்களுக்கிருக்கும் கோபத்தைத் தணிப்பதும், மக்களுக்கு நியாயமான உரிமைகளாகக் கிடைக்க வேண்டியதை இலவசமாகவும், கொடையாகவும் கொடுக்கிறதும்தான். இவர்கள் மக்களின் மனதை நிலைமாற்றுகிறார்கள். இவர்கள் மக்களை ஒரு சார்ந்து நிற்கும் பலிக்கடாக்களாக்கி, அவர்களது அரசியல் எதிர்ப்பை மழுங்கடிக்கிறார்கள். NGழுக்கள் அரசுக்கும் மக்களுக்குமிடையேயான ஒரு


தொடர்ச்சி 15ம் பக்கம்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# தீராநதியில் ஒரு திருகுதாளக்காரரின் நேர்காணல்



வ.ஜ.ச. ஜெயபாலனின் சந்தர்ப்பவாதம் பற்றி இதற்கு முன்னரே இந்த ஏட்டில் எழுதப்பட்டுள்ளது. தனக்குப் பயன்படக் கூடியவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்குப் பின்னால் வால் பிடித்து அலைவதும் அவர்களிடமிருந்து மேலும் பயனற்ற போது உதறி விடுவதும் ஜெயபாலனுடைய போக்காக இருந்து வந்துள்ளது. அவருடைய தனிப்பட்ட வாழ்க்கை பற்றிப் பேசுவது நமக்குத் தேவையற்றது. ஆனால் அவரது சந்தர்பவாத அரசியல் யாரால் எதற்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதை அறியக் கூடிய சூழ்நிலையில் அவரது போலித்தனத்தைப் பற்றிச் சிறிது எடுத்துரைப்பதற்கான தேவை உள்ளது. ஏனெனில் முன்பு பலவேறு தமிழ் இயக்க முகங்களைக் காட்டி வந்த அவர் சிலகாலமாகவே தமிழகத்தில் தன்னை ஈழத் தமிழ்த் தேசிய வாதத்தின் முக்கியமான ஒரு குரலாகக் காட்ட முயன்று வருகிறார். அதே வேளை தமிழ்த் தேசிய இனத்திற்குப் பச்சைத் துரோகமான காரியங்கட்கும் துணை போகிறார். அவருக்குத் தமிழக ஏடான "தீராநதி" முக்கியத்துவம் தருகிறது.

அண்மையில் குமுதம் "தீராநதி" ஜனவரி 2009 சஞ்சிகையில் வெளிவந்த நேர்காணலில் அவர் கூறியுள்ள கருத்துக்கள் கவனத்திற்குரியன. அவற்றிலே இரண்டு பண்புகள் முக்கியமானவை. ஒன்று எல்லாமறிந்த தோரணையில் ஒரு துப்பறியும் நிபுணர் பாணியில் தனது புனைவுகளைத் தகவல்களாக வழங்குவது மற்றது தனது அப்போதைய சுய லாபத்துக்கு ஏற்ற விதமான "ஆலோசனைகளை" வழங்குவது. இவ்விடயத்தில் அவர் இப்போது யாருடைய கூலிப்படையில் இருக்கிறார் என்பதை வாசகர்களது ஊக்கத்துக்கே விட்டு விடுகிறேன்.

நேர்காணலில் விடுதலைப்புலிகளும் இந்தியாவும் நேச உறவு பூணுவது தேவை என்று சொல்லப் போய் அதற்கு ஆதாரமாக எதையெதையோ எல்லாம் சொல்வதாக நினைத்து எதையெதையோ எல்லாம் உளறி வைத்திருக்கிறார். என்றாலும் தன்னை ஒரு சர்வதேசப் போரியல் நிபுணராகவும் சர்வதேச உறவுகளிலும் இந்திய உள்ளலுவல்களிலும் பெரும் அறிவு கொண்டவராகவும் காட்டிக் கொள்கிற விதமாக கொழும்பில் உள்ள பல்வேறு துறை அறிஞர்கள் சிங்கள, தமிழ், முஸ்லீம் அரசியல் வாதிகள் ராஜதந்திரிகள், நோர்வே அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட்டவர்கள் மட்டுமன்றிப் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திரிகளையும் சந்தித்திருக்கிறதாக ஒரு பெரிய புளுகுமூட்டையுடன் அவரது நேர்காணல் தொடங்குகிறது. இவரது ஆய்வுகள் சிவராமின் சில குழப்பமான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டன என்பது போக சிவ்ராமின் கொலைக்குப் பின்னால் "பல்வேறு நாடுகளின் உளவுத்துறை இரகசியங்கள்" தெரியக் கூடாது என்பதற்காகவே அவர் கொல்லப்பட்டார் என்று புதிய மர்மங்களைப் புகுத்துகிறார். நோக்கம் இல்லாமலில்லை.

இலங்கைக் கடற்படையில் சீனாவையும் பாக்கிஸ்தானையும் சேர்ந்த உளவுப் பிரிவினர் ஊடுருவி இருப்பதாகவும் ராஜீவ் காந்தியை 1987ல் இலங்கைக் கடற்படை வீரர் ஒருவர் தாக்கியது முதலாகத் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் வரை அனைத்திற்கும் ஐ.எஸ்.ஐ என்கிற பாக்கிஸ்தான் உளவு நிறுவனத்தையே காரணமாக்கியிருக்கிறார். அதைவிடத் தென்னிந்தியக் கரையோரத்தில் நடக்கிற கடத்தல்கட்கும் ஐ.எஸ்.ஐ யையே காரணம் என்கிற அளவுக்குச் சிரிப்பூட்டும் விளக்கங்களை வழங்கியுள்ளார். அதை விட அவரது முந்திய தீராநதி நேர்காணலின் ஆங்கில மொழி பெயர்ப்பை டில்லியிற் பல அலுவலகங்களிற் கண்டிருக்கிறார் என்றும் தனது முக்கியத்துவத்தை அறிந்த பிறகும் இந்திய அதிகாரிகளைச் சந்திக்கும் ஒவ்வொருமுறையும் தனது அற்புதமான புலனாய்வுகளை அவர்கட்குக் சொல்லத் தவறுவதில்லையாம். இத்தனை முக்கியமான ஒருவருக்குத் தமிழ் நாட்டில் விழற்கதை பேசித் திரிய நேரம் இருப்பது ஒரு அதிசயந்தான்.

ஐ.எஸ்.ஐ தென்னாசியா முழுவதும் குறிப்பாக இலங்கையில் நடத்துகிறவற்றை எல்லாம் ஜெயபாலன் அறிவார். ஆனால் இந்திய உளவுத்துறையில் உள்ளவர்கள் அறியமாட்டார்கள் என்று சொல்லுகிற ஜெயபாலன் 2006ல் பாக்கிஸ்தான் தூதுவர் பீர் வாலி மீதான கொலை முயற்சிக்கு இந்திய உளவுத்துறையே பொறுப்பு என மறைமுகமாக ஒப்புக் கொள்ளுகிறார். அதை விட உலகமயமாதலின் விளைவாக இந்தியாவின் பொருளாதார அதிகாரம் மகாராஷ்ட்டிரத்துக்கும் தென் மாநிலங்கட்கும் மாறி வருவதாகவும் அதனால் இந்தியாவின் எதிரிகள் தென் மாநிலங்களையே குறி வைப்பர் எனவும் மும்பாய்த் தாக்குதலில் இந்தியாவின் அசட்டைக்கு சோனியா காந்தியே பொறுப்பு என்றும் ஏதோ எல்லாம் சொல்லித் தொலைக்கிறார்.

முடிவில் தொப்புள் கொடி உறவு பற்றியும் பேசி உண்மையான வில்லன் சீனா தான் என்றும் எல்லாவற்றையும் விடக் கோமாளித்தனமாக ஐ.எஸ்.ஐக்குள் அமெரிக்காவும் இஸ்ரேலும் சீனாவும் ஊடுருவியிருபபதாகவும் உளறியிருக்கிறார்.

இவரது விசாலமான பார்வையில் பாரத மாதாவின் தொப்புள் கொடி எப்படித் தன்னுடைய சொந்தப் பிள்ளைகளது கழுஷ்துக்களையே காஷமீரிலும் நாகா லாந்திலும் மணிப்பூரிலும் நெரிக்கிறது என்று தெரி யாது. இந்திய மேலாதிக்கம் இலங்கை அரசாங்கத்தின் போர் முயற்சிகட்கு வழங்கி வந்துள்ள ஊக்குவிப்பும் ஆதரவும் தெரியாது. இந்திய அரசும் அதிகாரிகளும் தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழ் அகதிகளை நடத்தி வருகிற விதம் பற்றித் தெரியாது. இந்தியாவின் சாதாரணக் குடிமக்கள் பற்றிய அக்கறையே அற்ற அரசு ஒன்று என்ன செய்கிறது என்று அவருக்கு எப்படி விளங்கும்!

அவர் இந்தியாவின் ஒரு குறிப்பிட்டவிதமான மேலாதிக்கப் போக்கை வலியுறுத்துகிற ஒரு நிறுவனத்தின் கூலிக்காக மாரடிக்கிறார். அவரைப் பற்றி இலங்கைத் தமிழர்கள் அறிவார்கள். தமிழகத்தில் உள்ளவர்கள் சிலர் இன்னமும் 1980களில் வந்த அவரது ஒரு சில கவிதைகளை வைத்து ஒரு மதிப்பீட்டை வைத்துள்ளனர். அதைத் திருத்தும் தேவை உள்ளது. அவரது பொய்கள் அவரை விரைவில் அம்பலப்படுத்திவிடும். ஒரு நிலையான நிலைப்பாட்டுடன் நின்று வராத கோளாறு மிக்க மனிதரான வ.ஐ.ச ஜெயபாலன் இவ்வாறு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உளறுவதையிட்டுயாரும் அதிசயப் படமாட்டார்கள். ஏனெனில் அவர் ஒரு திருகுதாளக்காரர் என்பதை அவரை அறிந்த எல்லோரும் அறிவர்.

திருமுகன்

# புல்லுருவிகளின் போலி அக்கறைகள்

சரிநிகர் என்கிற என்.ஜி.ஓ ஏட்டில் தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தைப் பொதுவாக மாக்சிச- லெனினிச விரோத நோக்கங்கட்காகவும் குறிப்பாகப் புதிய- ஜனநாயகக் கட்சிக்கு எதிராகவும் பயன்படுத்தி வந்த சரவணன் விஜேவீர பக்தராக இருந்து தனிப்பட்ட காரணத்திற்காக விக்கிரமபாகு விசுவாசியானவர்.

"தலித்தியக் குறிப்புக்கள்" என்ற தலைப்பில் ஏதேதோ எல்லாம் சரிநிகரில் எழுதி வந்தாலும் சாதியத்திற்கெதிராகத் தளராது போராடி வந்த மாக்ஸிஸ- லெனினிச வாதிகள் பற்றி அவர் பூரண இருட்டடிப்பையே கடைப்பிடித்தவர். தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் பற்றித் தெரிந்ததாகவே காட்டிக் கொள்ளாதவர். அவர் இன்னமும் திருந்தியதாகத் தெரியவில்லை. திருந்தவும் இடமில்லை.

இப்படிப்பட்ட ஒரு "நேர்மையாளர்" இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் என்ற நூலை நிந்திக்கிற நோக்கில் லண்டனில் பேசியதும் போதாமல் அந்த நிகழ்வில் சொல்லப்பட்ட அவதூறுகட்கான மறுப்பு புதிய பூமியில் வெளியான பிறகு புதிய- ஜனநாயகக் கட்சிக்கு எது நல்லது எது கெட்டது என்று இலவச ஆலோசனை வழங்கியிருக்கிறார் என "லண்டன் வெளியிட்டு நிகழ்வு" பற்றிய ஒரு கட்டுரையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதுவரை அந்த நூல் பற்றித் தெரிந்து கொண்டதாகவே காட்டிக் கொள்ளாத வீரகேசரியின் வாரப்பதிப்பு அதைப் பிரசுரித்திருக்கிறது. சரவணன் போன்றவர்களிடம் இருப்பது இடதுசாரி விரோத வன்மம். இலங்கையில் உள்ள ஒரே மாக்சிச லெனினிசக் கட்சி புதிய- ஜனநாயகக் கட்சியே என்பதையும் தமிழ் மக்களிடையே உள்ள ஒரே உருப்படியான இடதுசாரிக் கட்சியும் அதுவே என்பதையும் இன்று வரை சாதிய எதிர்ப்பில் விட்டுக் கொடுப்பில்லாது நிற்பதும் அதுவே என்பதையும் அவர் அறிய மாட்டாரென்றால் ஆலோசனை சொல்ல முதல் விடயங்களை விசாரித்து அறியட்டும். புலம்பெயர்ந்த நாடுகளில் தலித்தியத்தைக் கைப்பிடித்து தமிழகத்துப் பிழைப்புவாதிகளுடன் இணைந்து பேசியும் எழுதியும் வருவது இலகுவானது தான். ஆனால் மாக்சிச லெனினிசவாதிகள் சொந்த மண்ணில் வர்க்க இன சாதிய பால் ஒடுக்கு முறைகளுக்கு மத்தியில் எதிர் நீச்சலிட்டு வாழ்வு டனும் சாவுடனும் போரடி வருவதைச் சிலவக்கிரம் படைத்த புலம் பெயர்வுக்காரரால் புல்லுருவிகளால் காண இயலாதது தான்.

பாராளுமன்றப் பதவிகளும்
8ம் பக்க தொடர்ச்சி

ஏன் என்று மக்கள் சிந்தித்தால் அதன் ஊடாகப் பல விடயங்கள் விளங்கக் கூடியனவாகும். கம்யூனிஸ்ட் கட்சிகள் இன உணர்வு அரசியல் நடாத்துவதில்லை. தி.மு.க, அ.இ.அ.தி.மு.க, பா.ம.க, ம.தி.மு.க. விடுதலைச் சிறுத்தைகள் போன்றன பாராளுமன்ற அரசியலுக்கான இன உணர்வு கிளப்பி வாக்குச் சேகரிக்கும் கட்சிகளாகும். இலங்கைத் தமிழர்களுக்காக டெல்லிக்குப் பாய்வோம் கடலைத் தாண்டுவோம், புயல் எனக் கிளம்புவோம். இடியென முழங்குவோம் என்பார்கள். இவற்றைப் பார்த்து அப்பாவிகளான சாதாரண தமிழர் சிலர் இன உணர்வோடு தீக்குளித்து மாண்டும் கொள்வர். ஆனால் இன உணர்வை உணர்ச்சி மயமாக்கிய பாராளுமன்ற பதவி உடையோர் ஒருவர் தானும் தமது பதவியை விட்டெறிந்ததில்லை. இது ஏன் என்பது மக்களால் விளங்கிக் கொள்ளப்படுவது அவசியம்.

இலங்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக இருபத்திரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்து வருகிறார்கள். இன மொழி உணர்வை நியாயமான கொள்கை வழிமுறைகளில் அன்றி வக்கிரம் மிக்கதாகப் பேசுவார்கள். ஆண்ட பரம்பரை வீர வசனங்களும் பேசுவார்கள். ஆனால் தமது பாராளுமன்றப் பதவிகளை மட்டும் துறக்க மாட்டார்கள். எமது மக்கள் இன்று புதுக்குடியிருப்பில் அவலங்களின் மேல் அவலங்களுக் அகப்பட்டு வரலாறு காணாத உயிர் இழப்புகளுக்கும் படுகாயங்களுக்கும் உள்ளாகி பசி பட்டினியுடன் வாழ்வோடும் சாவோடும் இருந்து வரும் இவ்வேளையிலும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூட ஒரு அடையாள எதிர்ப்புக்காவது தமது பதவியைத் துறக்கத் தயாராக இல்லை. இன்றும் தமது பாராளுமன்றப் பதவிகளைப் பாதுகாக்க இந்தியாவிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் இருந்து கொண்டே தமிழர் கூட்டமைப்பினா் பாராளுமன்றத்தில் மூன்று மாதங்க ளுக்கு ஒரு முறை லீவு அனுமதி பெற்று வருகிறார்கள். ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாகப் பதவி வகித்தால் வாழ்நாள் பூராவும் ஓய்வூதியம் பெறும் வசதியையும் அவர்கள் இழக்கத் தயாராக இல்லை. ஆதலால் தமது பதவிகளை தக்க வைத்து வருகிறார்கள்.

எனவே இன உணர்விலும் பார்க்க வலிமையானது பாராளுமன்றப் பதவி உணர்வேயாகும். அந்தப் பதவியானது சொத்து சுகங்களோடும் ஆண்ட பரம்பரை நலன்களோடும் சம்மந்தமுடையது. இன உணர்வை உசுப்பி பதவிச் சுகம் காண ஒரு சிலரும், உணர்ச்சி மேலீட்டால் மாண்டு மடிந்து வரும் சாதாரண உழைக்கும் மக்கள் பலராகவும் உள்ள அவலநிலையை இன்று காண முடிகிறது. எனவே இன உணர்வாளர்கள் கூறும் உணர்ச்சிவேகக் கதைகளுக்குப் பின்னால் மறைந்திருக்கும் வர்க்க வேறுபாடுகளையும அதன் மூலமான ஏற்றத் தாழ்வுகளையும் அவற்றின் காரணமான துன்ப துயரங்களையும் தமிழ் மக்கள் இவ்வேளையில் உணர்ந்து கொள்வது அவசியமானதாகும்.

- சண்முகம்-

ஏகாதிபத்திய
14ம் பக்க தொடர்ச்சி

தாங்கியாக, தடுப்பாக இருக்கிறார்கள். பேரரசுகளுக்கும் குடிகளுக்குமிடையே இவர்கள்தான் நடுவர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், தூதுவர்கள்.

நெடுநோக்கில், இந்த NGOக்கள் இவர்களுக்குப் பணம் கொடுத்தவர்களுக்குத் தான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்களேயன்றி, இவர்கள் யாருக்காக உழைக்கிறார்களோ அம் மக்களுக்குப் பதில் சொல்லத் தேவையில்லை. இவர்களைத்தான் தரவியலாளர்கள் 'காட்டி" (Indicator) என்கிறார்கள். தாராளமயமாக்கலினால் விளைந்த சீரழிவுகளை விட NGOக்களினால் விளையும் சீரழிவு அதிகமானதாக இருக்கும் போலத் தோன்றுகிறது. இந்த பேழு விவகாரத்தைச் சுரீரென்று சொல்வதற்கு ஒரு உதாரணம் என்னவென்றால், ஈராக்கின் மேல் அமெரிக்கா படையெடுத்தவுடன், பின்னாலேயே NGOக்களை அனுப்பி அந்தச் சீரழிவுகளைச் சுத்தம் செய்யச் சொன்னது. இந்த NGOக்களுக்குப் பணம் சரியானபடி கிடைக்கவும், இவை அந்தந்த நாடுகளில் வேலை செய்ய அனுமதிக்கப்படவும், இவை மேம்போக்கான ஒரு அரசியல் அல்லது வரலாற்றுக் காரணத்தைக் வடிவமைத்துக் கொள்கின்றன. எப்படி யாயினும், ஒரு சங்கடமான வரலாற்று அல்லது அரசியல் காரணம், ஏழை நாடுகளிலிருந்து வரும் அரசியலல்லாத (அப்படியென்றால் மிகவும் அரசியலானது என அர்த்தம்) துயரச் செய்திகள் இவையெல்லாம் அந்த (இருளடைந்த) நாடுகளிலிருக்கும் (இருளடைந்த) மக்களைப் பாதிக்கப்பட்டோராய்க் காட்டுகின்றன. இன்னொரு ஊட்டச்சத்து குறைந்த இந்தியன், இன்னொரு ப்சியான எத்தியோப்பியன், இன்னொரு ஆப்கன் அகதி முகாம், இன்னொரு சிதைக்கப்பட்ட சூடானியன்... இவர்களுக்கெல்லாம் ஒரு வெள்ளைக் காரனின் உதவி அவசியப்படுகிறது. இவ்வகையில் (NGOக்கள்) அறியாமலேயே மாறாத நிறவெறியையும், மேற்கத்திய நாகரீகத்தின் கருணையையும் (கடுமையான அன்பு) மறுவுறுதி செய்கிறார்கள். அவர்கள் தான் இந்நவீனவுலகின் மதச்சார்பற்ற சமயச்சங்கத்தார்கள்.

கடைசியில், சிறிய அளவில், ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக, NGOக்களுக்குக் கிடைக்கும் பொருளானது, ஏழை நாட்டுப் பொருளாதாரத்தில் நிகழும் நிழலான அரசியல் கொடுக்கல் வாங்கலைப் போலவே ஆகிவிடும். இது இன்னதைச் செய் என்று கட்டளையிட ஆரம்பிக்கும். இது மோதலைப் பேச்சுவார்த்தையாக்கும். இது எதிர்ப்பை அரசியலற்றதாக்கிவிடும். உள்ளூர்க் குடிகளின் தன்னம்பிக்கை மிக்க எதிர்ப்புப் போராட்டங்களில் குறுக்கிடும். NGOக்களிடம் பணமிருக்கிறது, இந்தப் பணத்தைக் கொண்டு, ஒரு போராட்டக்காரனுக்கு வேலை கொடுக்க முடியும், இதன் மூலம் அவர்களை அந்த நேரத்துக்கு ஏதோ நல்லது செய்வதாக (பொருளீட்டுவதாக) நினைக்க வைக்க முடியும்.

உண்மையான அரசியல் எதிர்ப்புகள் இந்தக் குறுக்குப் பாதைகளையெல்லாம் காட்டாது. அரசியலை NGO-ஆக்கம் செய்வது போராட்டங்களை ஒரு நற்பாங்கான, அறிவார்ந்த, சம்பாத்தியத்துடனான, 9 மணியிலிருந்து 5 மணிவரைக்குமான ஒரு வேலையாக மாற்றுகின்ற ஆபத்தாகிறது. அத்தனையையும் ஒரு சில நாணயங்களை மட்டும் விட்டெறிந்து செயற்படுத்த முடிகிறது. நாம் விளங்கிக்கொள்ளவேண்டியது என்னவெனில் உண்மையான எதிர்ப்புக்கு உண்மையான விளைவுகளிருக்கும் ஆனால் சம்பளமிருக்காது.

அடுத்த இதழில் தொடரும்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்


REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

மார்ச் 2009


# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org

## கறுப்பு ஜனாதிபதி வெள்ளைத்திமிர் பராக் ஒபாமாவின் வருகைக்குபின் இடம் பெற்ற தாக்குதல்கள்



## அமெரிக்க கொலை வெறியர்களே ஆப்கானை விட்டு வெளியேறுங்கள்?




ஆப்கானிஸ்தான் கிராமம் ஒன்றின் மீது அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள் ஜனவரி 25ம் திகதி நடாத்திய தாக்குதலில் 15பேர் கொல்லப்பட்டனர். அதனை எதிர்த்த ஆர்ப்பாட்டத்தின் போது பிடிக்கப்பட்ட படம்.




ஒபாமா பதவி ஏற்ற பின் இடம் பெற்ற ஏவுகணைத் தாக்குதலைக் கண்டித்து கராச்சியில் இடம் பெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம்



மக்கள் இடம் பெயர்ந்து செல்வதையும் காணலாம்



பாலஸ்தீன காஸாவில் ஹமாஸ் இஸ்லாமிய இயக்கத்தின் 21வது வருட நினைவாக இடம் பெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம்

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL. 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.